மட்/பட்/ பட்டிருப்பு
மத்திய மகா வித்தியாலயம்
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.




# ஊற்றுப் பேழை

## தரம் – 11 மாணவர்களின் ஆக்க சஞ்சிகை

## 2022 (2023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

"உள்ளுக எல்லாம் உயர்வு"

## பணிக்கூற்று

"நவீன தொழினுட்ப திறன் வாய்ந்த வேலையுலகிற்கு
பொருத்தமானதும் விழுமியங்கள் பின்பற்றக்கூடியதுமான,
எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய
மாணவர் சமூகத்தினை உருவாக்குவோம்"

## தூர நோக்கு

"நவீன தொழினுட்ப உலகில் சவால்களை
எதிர்கொள்ளத்தக்க சமநிலை ஆளுமையுள்ள
மாணவர் சமூகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றுப் பேழை

**தரம் - 11 மாணவர்களின் ஆக்க சஞ்சிகை**

# 2022 (2023)

மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுப் பேழை – 2022 (2023)


தரம் - 11 மாணவர்களின் ஆக்க சஞ்சிகை

வெளியீடு : மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.

கணினி வடிவமைப்பு : அ. அனுஷன்

அச்சுப்பதிப்பு : வணசிங்க பிரிண்டர்ஸ்,
496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய சாதாரண தர மாணவர்களின் அறிவுப் படைப்புகளின் பெட்டகமாக இந்த "ஊற்றுப் பேழை" சஞ்சிகை முகிழ்ந்துள்ளது. மாணவர் சமுதாயத்தின் பல் தரப்பட்ட ஆளுமை வெளிப்பாடுகளை தாங்கி நிற்கும் இந்நூலை உங்கள் அனைவருக்கும் படையலாக்குகின்றோம்.

கிழக்கிலங்கையின் கல்விப் புல வரலாற்றில் ஒரு முக்கிய அறிவு மையமாக பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், களுவாஞ்சிகுடி 1919களிலிருந்து இயங்கி வருகிறது. நாடு முழுவதிலும் மட்டுமின்றி நாடு கடந்தும் பல்வேறு துறைகளிலும் திறமையாளர்களையும் புலமைமிக்க மனிதர்களையும் பெருமக்களையும் இக்கல்லூரி உருவாக்கி அளித்துள்ளது. பல்வேறு பதவி நிலைகளிலும் துறை சார்ந்து பெயர்பெற்று விளங்கி இப்பாடசாலையின் பெருமையை பறைசாற்றும் பெருமனிதர்களை நிறைத்தது இப்பாடசாலை.

இவ்வாறு ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி பெரு விருட்சமாக வியாபித்து நிற்கும் இப்பாடசாலைக்கான வித்தை விதைத்தவர் உயர்திரு. த. சபாவதிப்பிள்ளை அவர்கள். பாடசாலையின் ஆரம்பத்தை தன் சிந்தையில் நிறைத்து இப்பிரதேசம் பெருமை பெறும் இப்பாடசாலைத் தொடங்கி வைத்த பெருமகன் அவர்.

இன்று வேர் விட்டு, கிளை பரப்பி, விழுதுகளும் தாங்கி நிற்கும் இப்பெரு விருட்சத்தின் தொடக்க புள்ளியாய் அமைந்த திரு சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு இந்நூலை மனமுவந்து சமர்ப்பணம் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

இலகு நல் இசையோடு வாழ்க – எம
தெழில் கொள்கலாயும் வாழ்க
கலை அறிவியலொளிர் சோதி
தெய்வக் காதலை யூட்டுதா யாதி.
பலகலை நியமம் பட்டிருப்பு
மத்திய மா வித்தியாலயமே
(இலகு நல்.....)

மீனிசை பாடுநல் வாவி – விளை
வோங்கு களனிகள் மேவி
வானுயர்ந்த பலசோலை வள
மருவுமெங்கள் கலா சாலை
(இலகு நல்...)

வாழ்வுறுசீர் களுவாஞ்சி – குடி
மாண்பு விங்கு கலை நிதியம்
தாழ்வில்லாதெவரும் கூடித் – தாய்
உரிமை கொள்ளும் ஒரு நிலையம்
(இலகு நல்...)

மானில மீதினில் வாழ வழி
காட்டும் அன்னை நிதம் வாழ்க
வானுயர்ந்த மலை மேலே – மதி
போலவே நிலவி வாழ்க

# முன்னுரை

**க.** பொ. த சாதாரண தர மாண்புமிக்க மாணவர்களாகிய நாங்கள் பட்டிருப்பு ம.ம.வி தேசிய பாடசாலையின் கன்னித் தொகுப்பான "ஊற்றுப் பேழை" சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம்.

நவீன உலகின் சமூகப் பொருளாதார, நாகரீக மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியானது மாணவர்களாகிய எங்களது கல்வியின் நோக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இன்று நாங்கள் பல்வேறு சவால்ளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றோம்.

எங்கள் சமூகத்தவரின் விழுமியங்கள், வழக்காறுகளைப் பேணுவதுடன் எங்களது ஆளுமை, சுயாக்கத்திறன் வெளிப்பாடு என்பவற்றை விருத்தி செய்வதே இவ் ஊற்றுப் பேழையின் நோக்கம் ஆகும். புதிய ஆக்க ஊற்றுக்களை சுமந்து வரும் இவ் ஏடானது தற்கால மாணவர்களை நல்வழிப்படுத்தி விழிப்படையக் கூடிய கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள் ஆகியயென காணப்படுகின்றன. இதனை வாசித்து பயனடைவீர்கள் என நம்புகின்றோம்.

இதனை செம்மையான முறையில் ஒழுங்குபடுத்தி வடிவமைக்க உதவிய ஊற்றுப்பேழை ஆசான்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய அதிபர், பிரதி அதிபர், ஆசியுரை நல்கிய பகுதித்தலைவர் ஆக்கங்கள் தந்த ஆசிரியர்கள் ஆகியோருக்கும், நிதியுதவி அளித்த தனவான்களுக்கும் அச்சிட்டு தந்த வணசிங்க அச்சகத்துக்கும் மாணவர்களாகிய நாம் நன்றி கூறுகின்றோம்.

நன்றி.

**தரம் 11 (2022) மாணவர்கள்**
மட்/பட்/ பட்டிருப்பு ம.ம.வி தேசிய
பாடசாலை, களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலயக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தே.பா) தரம் 11 மாணவர்களின் ஆக்கங்கள் அடங்கிய "ஊற்றுப்பேழை" எனும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நல் முயற்சிக்கு பக்கபலமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இருபத்தோராம் நூற்றாண்டு மாணவர்களை வழி நடத்துகின்ற பாரிய சமூக பொறுப்பினை கடமையேற்றிருக்கின்ற இன்றைய பாடசாலைகள் அதற்கேற்ப மாணவர்களைத் தயார்படுத்த வேண்டிய தார்மீக பொறுப்பினை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். அதற்காக பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்ள வேண்டும். திறன் வாய்ந்த மாணவர்களை உருவாக்குவதில் பாடவிதானச் செயற்பாடுகளைப்போல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் கூடுதல் பங்குண்டு. இவற்றை உணர்ந்து மாணவர்கள் இணைப்பாடவிதானச் செயற் பாடுகளில் ஈடுபட ஊக்கம் வழங்க வேண்டும்.

போட்டிகள், மன்றச் செயற்பாடுகள், புத்தாக்கச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களிடம் காணப்படும் திறமைகள் வெளிக்கொணரப்படும். எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அருகிக்கொண்டுவரும் இக்காலத்தில் மாணவர்களின் ஆக்கங்களைத் தொகுத்து பாடசாலைகளில் சஞ்சிகையாக வெளியிடுவது சிறந்த முன்னுதாரணமாகும். அதன் மூலம் இளம் படைப்பாளிகளை பாடசாலைப் பருவத்திலே இனங்கண்டு வழிப்படுத்தலாம். இவ்வாறான சஞ்சிகைகளுக்கு ஆக்கங்களை வழங்க மாணவர் பல தேடல்களில் ஈடுபடுவார்கள். நூல்களை வாசிப்பார்கள். இதன்மூலம் வாசிப்பு பழக்கம் அதிகரிப்பதோடு பாடவிடயங்களிலும் புலமை வாய்ந்தவர்களாக மிளிர வாய்ப்பு ஏற்படும். ஆக்கத்தினை வழங்குவதற்கான வாசிப்பும், சஞ்சிகை வெளிவந்த பின் ஆர்வத்தோடு மாணவர்கள் அதனை வாசிப்பதும் மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும். வாசிப்பதால் "மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்" எனும் சுவாமி விவேகானந்தரின் கருத்தினையேற்று கல்விச் சமூகம் பயணித்தால் சாதனைமேல் சாதனைகளைப் படைக்கலாம்.

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் ஊற்றுப்பேழை சஞ்சிகையானது மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி மாதாந்த அல்லது காலாண்டு அல்லது அரையாண்டு சஞ்சிகையாக ஊற்றெடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். அதற்கு அதிபர் ஆசிரியர்கள் சிறந்த வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

ஊற்றுப்பேழை சஞ்சிகை இனிதாக வெளிவர எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

**திரு. சி. சிறீதரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
பட்டிருப்பு கல்வி வலயம்,
களுவாஞ்சிகுடி.



மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய முதல்வரின்

# ஆசியுரை

பாடசாலையென்பது வெறுமனே கல்வி அறிவை மட்டும் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொள்ளாது மாற்றமுறும் காலத்திற்கேற்ப உடல், உள, சமூக, பண்பாட்டு, ஆளுமை என சகல வளர்ச்சிகளுடன் கூடிய பூரண மனிதனாக வாழக்கூடிய ஆற்றலை பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்களின் இயலுமை, இயலாமைகளை இனங்கண்டு இயலுமைகளை பாராட்டியும், இயலாமைகளை களைந்தெறிந்தும் ஆற்றுப்படுத்துகின்ற இடமே பாடசாலையாகும். இவை அனைத்தும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலமே அடைப்படுகிறது. இதில் ஒரு அம்சமாக எமது பாடசாலையின் வரலாற்றில் முதற்தடவையாக க.பொ.த சா/த (2022) மாணவர்களால் வெளியிடப்படும் ஆக்க சஞ்சிகையான "ஊற்றுப்பேழை" காணப்படுகின்றது.

மாணவர்களின் சுய ஆக்கங்களும், தேடல் நிறைந்த ஆக்கங்களும் இச் சஞ்சிகை யில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக கவிதைகள், கட்டுரைகள், பொன்மொழி, ஆங்கில கட்டுரைகள் என பல்வகையான விடயங்கள் இதில் பொதிந்திருப்பது சிறப்பம்சமாகும்.

க.பொ.த சா/த மாணவர்களை தான் பொறுபேற்ற காலத்திலிருந்து இன்றுவரை சிறப்பான வழிகாட்டல்களை மேற்கொள்வதுடன் "ஊற்றுப்பேழை" என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கும் தரம் 11ற்கான பகுதித் தலைவர் திருமதி. கி. கோபாலரெத்தினம் ஆசிரியை அவர்களுக்கு நெஞ்சம் கனிந்த நன்றிகள். அத்துடன் இவருக்கு உறுதுணையாக இருந்த தரம் 11 வகுப்பாசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது எஜமான்களாகிய இந்த தரம் 11 மாணவர்கள் நடைபெறவிருக்கும் க.பொ.த சா/த பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளை பெறுவதுடன் எதிர்காலத்தில் சிறந்ததொரு பிரஜையாக திகழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவ னைப் பிரார்த்திப்பதோடு என்னுடைய ஆசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன்.

"உள்ளுக எல்லாம் உயர்வு"

**திரு. மு. சபேஸ்குமார் (SLEAS)**
அதிபர்.
மட்/பட்/ பட்டிருப்பு ம.ம.வி தேசிய
பாடசாலை, களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய
பிரதி முதல்வரின்

# ஆசிச்செய்தி

மட்/ பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடியின் வரலாற்று சாதனைகள் பல எமது பாடசாலை சிறப்புமிக்க, ஆளுமைகொண்ட அதிபர் மதிப்பிற்குரிய திரு. மு. சபேஸ்குமார் (SLEAS) அவர்களுடைய வழிகாட்டலின் மூலம் சாதனை படைத்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டுக்குரியதும் ஆகும். இதேபோன்று இப்பாடசாலையில் முதற்தடவையாக மேற்கொள்ளப்படவிருக்கும் 2022 க.பொ.த (சா/த) மாணவர்களின் பாடசாலை காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாக அமைய வேண்டும் என்ற நல் எண்ணத்துடன் O/L Day - 2022 எனும் நிகழ்வை நடாத்த திட்டமிட்டிருப்பதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் இம்மாணவர்களை தரம் - 1 தொடக்கம் தரம் - 11 வரை கல்வி கற்பித்து க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தயார்ப்படுத்தி சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உதவி அதிபர்கள், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் ஏனையோர் அனைவரையும் வாழ்த்துவதுடன் இந்நிகழ்வின்போது மாணவர்களின் ஆக்கங்களை கொண்டு வெளியிடப்படவிருக்கும் "ஊற்றுப்பேழை" எனும் கையேடு சிறப்பாக அமைய வேண்டும் என்பதுடன் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்து பெறுபேறுகளை பெறவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து ஆசியையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.

**திரு. த. ஜனேந்திரராசா (SLPS)**
பிரதி அதிபர்.
மட்/பட்/ பட்டிருப்பு ம.ம.வி தேசிய
பாடசாலை, களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய
தரம்-11 பகுதித் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கான களத்தினை அமைத்து கொடுப்பது பாடசாலை என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலத்தில் 2022ம் ஆண்டு தரம் 11ல் கல்வி கற்கும் மாணவர்களின் ஆற்றல்களையும், உள்ளக்கிடக்கைகளையும், பட்டறி அனுபவங்களையும் பல்வேறு ஆக்கங்கள் வடிவில் தாங்கிய "ஊற்றுப்பேழை" எனும் மலரானது வெளிவருவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். "சிகரம் தொட்ட செம்மல்" என்று சிறப்பித்துப் போற்றப்படும் எங்கள் பாடசாலையின் முதல்வர் திரு.மு. சபேஸ்குமார் அவர்களின் சாதனைத் தடங்களில் ஒன்றாக கன்னிப்படைப்பாக "ஊற்றுப்பேழை" எனும் சஞ்சிகை வெளிவருவதில் பாடசாலை சமூகமானது பெருமிதம் கொள்கின்றது.

எம்மாணவர்கள் வெறுமனே ஏட்டுக் கல்வியுடன் நின்றுவிடாது. பல்துறைசார் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சளைத்தவர்களல்ல என்பதை இச்சஞ்சிகையானது பறைசாற்றி நிற்கின்றது. அந்தவகையில் 2022 தரம் 11 மாணவர்களின் ஒன்றிணைந்த முயற்சியில் உருவான "ஊற்றுப்பேழை" என்றும் நாமம் தாங்கிய இச் சஞ்சிகைக்கு தரம் 11ன் பகுதித் தலைவர் என்றவகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். மேலும் இம்மலரானது வெளிவர கால்கோளிட்ட பாடசாலை முதல்வர் அவர்கட்கு, இச்சஞ்சிகை வெளிவர பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்த பிரதி அதிபர் திரு. T. ஜனேந்திரராசா அவர்களுக்கும் உதவி அதிபர்களான திரு. V. ரவீந்திரமூர்த்தி ஐயா அவர்கட்கும், திரு. M. ரவிச்சந்திரன் ஐயா அவர்கட்கும், திரு.A. கலாபராஜன் ஐயா அவர்கட்கும், ஆரம்பக்கல்வி உதவி அதிபர் திரு.S. கேதீஸ்வரன் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தொடுத்தும், வெளியீட்டு விழாவானது சிறப்பாக நடந்தேறவும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய எனது அன்பிற்குரிய வகுப்பாசிரியர்களான திரு.M. முகுந்தமூர்த்தி, திரு.R. பிறேம்நாத், திருமதி. T.தேவரூபன், திருமதி. T. சிவகுமார், திருமதி. P. ரஞ்சனி, திருமதி. N. விஜிகரன் ஆகியோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து கல்விசார் ஆளணியினருக்கும் கல்வி சாரா ஆளணியினருக்கும் மற்றும் பல்துறைசார் ஆக்கங்களால் மலரை அலங்கரித்த தரம் 11(2022) வகுப்பு மாணவர் களுக்கும் நன்றியினைத் தெரிவிப்பதோடு பாடசாலை சார்பாக புகைப்படம் எடுப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய "அருவி" ஸ்ரூடியோ நிறுவனத்தினருக்கும் சஞ்சிகையை மிகச்சிறப்பாக வடிவமைத்துத் தந்த வணசிங்க அச்சகத்தாருக்கும் நன்றியினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மேலும் இம்முறை 2022ல் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று நாட்டிற்கேற்ற நற்பிரஜையாக திகழ வேண்டு மெனவும், கன்னிப் படைப்பான இச்சஞ்சிகையானது பல நூற்றாண்டுகளையும் தாண்டி பாடசாலை வரலாற்றில் தடம்பதித்து நீடித்து நிலைக்க வேண்டுமெனவும் இறைஆசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**திருமதி. K. கோபாலரெத்தினம்**
பகுதித் தலைவர் (தரம் - 11)
மட்/பட்/ பட்டிருப்பு ம.ம.வி தேசிய
பாடசாலை, களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விசார் ஆளணி விபரம்

| தொ. இல. | பெயர் | தகைமை | தரம் |
|---|---|---|---|
| 01 | திரு.மு. சபேஸ்குமார் (அதிபர்) | B.Sc, PGDE, M.Ed | SLEAS |
| 02 | திரு.த. ஜனேந்திரராஜா (பிரதி அதிபர்) | Sp. Trained Teach (Sc). B.A, PGDE, DSM | SLPS- II |
| 03 | திரு.மா.ரவிச்சந்திரன் (உ. அதிபர் - பதில்) | Sp. Trained Teach (Maths). B.Ed | SLTS - I |
| 04 | திரு.ஆ. கலாபராஜன் (உ. அதிபர் - பதில்) | B.A, PGDE, M.Ed, Dip.in. teach | SLTS - I |
| 05 | திரு.வி. ரவீந்திரமூர்த்தி (உ.அதிபர்- பதில்) | B.B.A, PGDE,HNDA | SLTS - I |
| 06 | திரு.சு. கேதீஸ்வரன் (உ.அதிபர் - பதில்) | Dip.in. Teach (Pri) | SLTS - I |
| 07 | திருமதி.கி.கோபாலரெத்தினம் | B.A, PGDE | SLTS - I |
| 08 | திரு.ம.லெ. முகம்மது லாபிர் | Trained Sp. Teach (Sc) | SLTS - I |
| 09 | திருமதி.ந. மோகனகுமார் | B.B.A, Dip in Edu | SLTS - I |
| 10 | திருமதி.க. நாகேந்திரன் | Sp.Trd (Pri) | SLTS - I |
| 11 | திருமதி.ஜெ. தேவராகவன் | Sp.Trd (Pri) | SLTS - I |
| 12 | திருமதி.வா. விமலசேன | Sp.Trd (Pri) | SLTS - I |
| 13 | திருமதி.ஜெ. உருத்திரலிங்கம் | Trd. teach | SLTS - I |
| 14 | திருமதி.ரா. தட்சணாமூர்த்தி | Sp.Trd. teach (Pri) | SLTS - I |
| 15 | திருமதி.ஆ. ரவீந்திரன் | Sp. Trd. (Maths) | SLTS - I |
| 16 | திருமதி.ரூ. ஜெகஜோதி | B.Sc, PGDE | SLTS - I |
| 17 | திரு.கே. கோவண்ணன் | B.Sc, PGDE | SLTS - I |
| 18 | திருமதி.கோ. உதயகுமார் | B.Sc, PGDE | SLTS - I |
| 19 | திரு.செ. உதயலிங்கம் | B.A, PGDE | SLTS - I |
| 20 | திரு.வி. தெய்வேந்திரன் | B.A, PGDE | SLTS - I |
| 21 | திருமதி.எ. பிரதாபன் | B.A, PGDE | SLTS - I |
| 22 | திருமதி.தே. தவராசா | Trd.teach | SLTS - I |
| 23 | திருமதி.ல. திருமால் | B.Sc. PGDE | SLTS - I |
| 24 | திருமதி.செ. சரசகோபால் | B.A, PGDE | SLTS - I |
| 25 | திருமதி.றா. கணேசமூர்த்தி | B.A, Dip. in Teach, PGDE | SLTS - I |
| 26 | திருமதி.வா. நிதிதரன் | B.Sc, PGDE, M.Sc | SLTS - I |
| 27 | திருமதி.த. சிவகுமார் | B.Ed | SLTS - I |
| 28 | திரு.க. கோணேஸ்வரன் | B.A, Dip. in Teach (PT), B.Ed | SLTS - I |
| 29 | திருமதி.உ. மதியழகன் | B.B.A, PGDE | SLTS - I |

| | | | |
|---|---|---|---|
| 30 | திரு.தி. ரூபநாதன் | B.A, PGDE, Dip in Teach | SLTS - I |
| 31 | திருமதி. சௌ. தர்மேந்திரா | B.A, PGDSNE, Dip. in Teach | SLTS - I |
| 32 | திரு. N. நிரோஜன் | Dip.in. Teach (Pri) | SLTS |
| 33 | திருமதி.த. மகேந்திரன் | Dip.in.Teach (Pri) | SLTS - 2I |
| 34 | திரு.எம்.எம்.எம். மிஸ்பா | Dip.in.Teach (Agri) | SLTS - 2I |
| 35 | திருமதி.கி.விஜயதர்சன் | B.A, Sp.trd (Eng), PGDE | SLTS - 2I |
| 36 | திருமதி.ப. ரஞ்சன் | B.A, PGDE | SLTS - I |
| 37 | திரு.செ. உமாபதி | B.A, PGDE | SLTS - I |
| 38 | திருமதி.ந.ராஜேந்திரன் | B.Eco, PGDE | SLTS - I |
| 39 | திருமதி.த.குகதாசன் | Dip.in Teach (Pri) | SLTS - 2I |
| 40 | திருமதி.வ. சுகிர்தானந்தராசா | B.A, PGDE, Dip.in.Teach (R) | SLTS - 2I |
| 41 | திரு.ப. சுதர்சன் | B.A, PGDE, PGDSNE | SLTS - 2II |
| 42 | திருமதி.த. சிறிகந்தராஜா | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 43 | திரு.வி. அருணாகரன் | B.A, PGDE, NDT (Pri) | SLTS - I |
| 44 | செல்வி.தே. டெய்சிவில்மோ | B.A, PGDE | SLTS - 2I |
| 45 | செல்வி.செ. றஞ்சினி | Dip.in. Teach (Christ) | SLTS - 2I |
| 46 | திரு.தெ. தெய்வீகன் | B.Sc | SLTS - 2I |
| 47 | திரு.க. முகுந்தமூர்த்தி | B.A, PGDE | SLTS - 2I |
| 48 | திரு.அ. அருள்காந்தன் | B.A, L.LB, Dip. in. Edu | SLTS - 2I |
| 49 | திரு.த. பாலச்சந்திரன் | B.A, PGDE | SLTS - 2I |
| 50 | திரு.வ. துஷ்யந்தன் | Dip.in. Teach (Pri), B.Ed | SLTS - 2I |
| 51 | திரு.ச. ரஞ்சித்குமார் | Dip.in. Teach (Saivanery) | SLTS - 2II |
| 52 | திருமதி.சு. நிமலநாதன் | B.Sc, Dip.in.Teach (Maths) | SLTS - 2I |
| 53 | திரு.வே. மயூரதன் | B.Sc, Dip.in.Teach (Maths) | SLTS - 2II |
| 54 | திரு.தி. கௌரீசன் | B.A, Dip.in. Tech (Phy.Edu) | SLTS - 2II |
| 55 | திருமதி.சு. ரவீந்திரன் | B.A, PGDE | SLTS - 2I |
| 56 | திருமதி.ர. சகிகரன் | B.A, Dip.in.Teach (Music) | SLTS - 2I |
| 57 | திருமதி.சி. கோகுலராஜ் | B.A, Dip.in.Teach (ICT) | SLTS - 2II |
| 58 | திருமதி.பி. ஜெயரூபன் | B.A, Dip.in.Teach (Dr & Ttr) | SLTS - 2I |
| 59 | திரு.எஸ். பிரதீபன் | B.A, Dip.in.Teach (Eng) | SLTS - 2I |
| 60 | திரு.ர. துஷாந் | B.A, Dip.in.Teach (Dr & Ttr) | SLTS - 2II |
| 61 | திருமதி.ச. திவாகரன் | Dip.in.Teach (Dance) | SLTS - 2I |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 62 | திரு.யோ. சிறிவேந்தன் | Dip.in.Teach (DT), B.A, PGDE | SLTS - 2I |
| 63 | திருமதி.சி. வரதாசா | B.A, B.Ed, Dip.in.Teach (History) | SLTS - 2I |
| 64 | திருமதி.து. சிவானந்தராஜா | B.Sc, NDT (Sc) | SLTS - 2II |
| 65 | திருமதி.ச. மதியழகன் | B.FA (Vocal), PGDE | SLTS - 2II |
| 66 | திருமதி.தீ. நடேசமூர்த்தி | B.A, PGDE | SLTS - 2II |
| 67 | திருமதி.ஷ. திலீபராஜா | B.A, PGDE | SLTS - 2II |
| 68 | திருமதி.சு. ரூபிதன் | B.A, PGDE | SLTS - 2II |
| 69 | திருமதி.ஜெ. பாக்கியநாதன் | B.FA (Dance) | SLTS - 2II |
| 70 | திரு.ச. ராகுலன் | Dip.in. Teach (Art) | SLTS - 3I |
| 71 | திரு.I. கபிலேந்திரன் | Dip.in. Teach (Art) | SLTS - 3I |
| 72 | திரு.சி. கவியரசன் | B.A, PGDSNE, NDNT, Dip.in. Councelling, Dip. in Career MEd | SLTS - 2II |
| 73 | திரு.சு. கமலதாசன் | B.Sc, PGDE | SLTS - 2I |
| 74 | திருமதி.நி. யோககரன் | B.A, B.Ed, Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 75 | திருமதி.சு. ஜனேஸ்குமார் | B.A, Dip.in. Teach (Pri) | SLTS - 2II |
| 76 | திருமதி.நி. கருணாநிதி | Dip.in.Teach (Social Sc.), B.Ed | SLTS - 2II |
| 77 | திரு.மு. ஜெயக்குமார் | B.A, (Eco), M.A(Eco), PGDE | SLTS - 2I |
| 78 | திரு.ப. ஜெயதீபன் | B.A, PGDE | SLTS - 2II |
| 79 | திருமதி.உ.லவன் | B.Ed | SLTS - 2I |
| 80 | திருமதி.கு. கிஷாந் | Dip.in.Teach (Dance) | SLTS - 2II |
| 81 | திருமதி.கீ. சதீஸ்கரன் | B.A, Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 82 | திருமதி.கீ. ராகவன் | B.A, Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 83 | திருமதி.மு.மு. ஷஸ்னா | Dip.in.Teach (English) | SLTS - 2II |
| 84 | திரு.வே. பகிரதன் | Dip.in.Teach (ICT) | SLTS - 3I |
| 85 | திரு.சா. டிலோஜன் | Dip.in.Teach (Hindu) | SLTS - 2II |
| 86 | திருமதி. நி. சந்திரகுமார் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 87 | திருமதி.பி. புவிநீதன் | Dip.in.Teach (Sc) | SLTS - 2II |
| 88 | திருமதி.நி.அ. சந்திரகுமார் | Dip.in.Teach (ICT) | SLTS - 2II |
| 89 | திரு.வி. திவோஜன் | Dip.in.Teach (DT), B.Ed | SLTS - 2II |
| 90 | செல்வி.க. பிருந்தா | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 91 | திரு.கே. ஜதீஸ் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 92 | திருமதி.வி. அசோக் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 93 | செல்வி.ஜெ. யோகிதா | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 94 | திரு.மு.றா. ரோஸன் ஸஹ்னாஸ் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 95 | திருமதி.ட. சாஜில் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 96 | திருமதி.நி. டினேஸ் | Dip.in.Teach (Home Econs) | SLTS - 2II |
| 97 | திருமதி.இ. கமலவேந்தன் | Dip.in.Teach (Tamil) | SLTS - 2II |
| 98 | திரு.இ.மு. சஹீட் | Dip.in.Teach (Eng) | SLTS - 3I |
| 99 | திருமதி.ரி. குணசீலன் | Dip.in.Teach (History) | SLTS - 2II |
| 100 | திருமதி.லோ. பகீரதன் | Dip.in. Teach (Agri) | SLTS - 2II |
| 101 | திருமதி.கா. திருக்குமரன் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 102 | திரு.ம. அஜனன் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 103 | செல்வி.த. கோகுலசாந்தி | Dip.in.Teach (Science) | SLTS - 2II |
| 104 | திரு.ம.ஹ.ம. ஹனீஸ் | Dip.in.Teach (Commerce) | SLTS - 3I |
| 105 | திருமதி.ச. துஸ்ஜந்தன் | Dip.in.Teach (Art) | SLTS - 2II |
| 106 | திரு.க.சிறிலால் | Dip.in.Teach (2nd lang) | SLTS - 3I |
| 107 | திரு.இரா. பிரேம்நாத் | Dip.in.Teach (Tamil.lit) | SLTS - 2II |
| 108 | திருமதி.டி. பிரணவன் | B.B.M | SLTS - 2II |
| 109 | திருமதி.க. புவிகாந் | B.Sc, M.Sc | SLTS - 2II |
| 110 | செல்வி.இ. சுகன்யா | B.Sc, M.Sc | SLTS - 2II |
| 111 | திருமதி.செள. மதிதரன் | B.B.A | SLTS - 3I(A) |
| 112 | திருமதி.பி. சரண்ராஜ் | B.F.A | SLTS - 3I(A) |
| 113 | திருமதி.த. தேவரூபன் | B.F.A | SLTS - 3I(A) |
| 114 | திரு.எஸ். தேவகுமார் | B.Sc, P.G.Dip (Chem), RSC | SLTS - 3I(A) |
| 115 | திருமதி.ஹி. நரேந்திரகுமார் | B.IT | SLTS - 2II |
| 116 | திரு.த. யுதர்சன் | B.Sc | SLTS - 3I(A) |
| 117 | செல்வி.ம. டினோஜி | B.Sc (English) | SLTS - 3I(A) |
| 118 | திருமதி.சு. ரவிச்சந்திரன் | B.A | SLTS - 2II |
| 119 | திருமதி.வி. நிதாஜினி | B.A | SLTS - 2II |
| 120 | திருமதி.தே. ஜெயராஜசூரியன் | Sp.Trd. (Dance) | SLTS - 3II |
| 121 | செல்வி.த. நிறோஜா | Dip.in.Teach (DT) | SLTS - 2II |
| 122 | செல்வி.பு. நியுர்தா | Dip.in.Teach (Tamil.lit) | SLTS - 3I(B) |
| 123 | திருமதி.எம்.எஸ்.எப்.யு. ஹிஷோர் | Dip.in.Teach (English) | SLTS - 3I(B) |
| 124 | செல்வி.சி. சிவரஞ்சினி | Dip.in.Teach (Dr & Thr) | SLTS - 3I(B) |
| 125 | திருமதி.மே. ரமேஸ் | Dip.in.Teach (Dr & Thr) | SLTS - 3I(B) |
| 126 | திரு.தி. கோகுல்ராஜ் | B.A | SLTS - 3I(A) |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 127 | செல்வி.ப. டிஷாந்தி | Dip.in.Teach (Agri & Ft) | SLTS - 3I(B) |
| 128 | செல்வி.வி. கேதிஸ்சா | Dip.in.Teach (Sc) | SLTS - 3I(B) |
| 129 | திரு. ஜீன்ரொக்ஷன் | Dip.in.Teach (Phy.Edu) | SLTS - 3I(B) |
| 130 | செல்வி.பு. தீபா | Dip.in.Teach (DCT) | SLTS - 3I(B) |
| 131 | திரு.இ. சனோஜன் | Dip.in.Teach (Sc) | SLTS - 3I(B) |
| 132 | திருமதி. ஷஹீலா ஜூனைதீன் | Dip.in.Teach (Pri) | SLTS - I |
| 133 | திருமதி. ஹினாயா அப்துல்ஹனீம் | Dip.in.Teach (Pri) | SLTS - I |
| 134 | திரு.தே. சிறிதரன் | Dip.in.Teach (Pri) | SLTS - 2II |
| 135 | திருமதி. ஹம்சியா கத்தாப் | Dip.in.Teach (Pri) | SLTS - 2I |
| 136 | திருமதி. பாத்திமா றிப்கா முகம்மட் ஸஸீர் | Dip.in.Teach (Sc) | SLTS - 2I |
| 137 | திரு.சீ. ஜெயானந்தன் | Dip.in.Teach (Pri) | SLTS - I |
| 138 | திருமதி.அ.உ. உமேஸ்குமார் | Dip.in.Teach (Pri) | SLTS - 2I |
| 139 | திருமதி. றியாபா முஹம்மட் ஹல்மி | Dip.in.Teach (Pri) | SLTS - 2I |
| 140 | திரு.M. சுகிர்தராசா | Dip.in.Teach (Agri) | SLTS - 3I |
| 141 | திருமதி.J. அருண் | B.F.A | SLTS - 3(A) |
| 142 | திருமதி.K. நவதீபன் | B.F.A | SLTS - 3(A) |
| 143 | செல்வி.K. கார்த்திகா | B.F.A | SLTS - 3(A) |
| 144 | செல்வி.S. திருசாந்தினி | Dip.in.Teach (Phy.Edu) | SLTS - 3(B) |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விசாரா ஆளணி விபரம்

| தொ.இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு.சி. சிறிமுருகன் | நூலக உதவியாளர் |
| 02 | திரு.அ. உஷானந் | நூலக உதவியாளர் |
| 03 | திரு.ந. திவாகரன் | நூலக உதவியாளர் |
| 04 | திரு.என். தேவநாயகம் | நூலக உதவியாளர் |
| 05 | செல்வி.ஜீ. ஜீவநந்தினி | நூலக உதவியாளர் |
| 06 | திரு.கு. பார்த்தீபன் | நூலக உதவியாளர் |
| 07 | திரு.நோ. தேவப்பிரியன் | ஆய்வுகூட உதவியாளர் |
| 08 | திரு.ஆ.மெ. பௌசுல்லாஹ் | ஆய்வுகூட உதவியாளர் |
| 09 | செல்வி.க. தமிழினி | ஆய்வுகூட உதவியாளர் |
| 10 | திருமதி.ஜா. மகேசன் | ஆய்வுகூட உதவியாளர் |
| 11 | திரு.க. சந்திரலிங்கம் | ஆய்வுகூட உதவியாளர் |
| 12 | செல்வி.க. வசந்தராணி | ஆய்வுகூட உதவியாளர் |
| 13 | திரு.தி. பகிரதன் | ஆய்வுகூட உதவியாளர் |
| 14 | திரு.என். தியாகராஜா | ஆய்வுகூட உதவியாளர் |
| 15 | திரு.ஞா. சிவகுமார் | பாடசாலை சேவை உதவியாளர் |
| 16 | திரு.மூ. கிருபானந்தன் | பாடசாலை சேவை உதவியாளர் |
| 17 | செல்வி.மூ. சுதானந்தி | பாடசாலை சேவை உதவியாளர் |
| 18 | செல்வி.இ. உதயகிரி | பாடசாலை சேவை உதவியாளர் |
| 19 | செல்வி.இ. தனுசியா | பாடசாலை சேவை உதவியாளர் |
| 20 | திரு.இ. இளங்கோ | பாடசாலை சேவை உதவியாளர் |
| 21 | செல்வி.மூ. புஸ்பானந்தி | பாடசாலை சேவை உதவியாளர் |
| 22 | செல்வி.ம. மயுறி | பாடசாலை சேவை உதவியாளர் |
| 23 | திரு.த. தினேஸ்வர்தன் | விளையாட்டு பயிற்றுவிப்பாளர் |
| 24 | திரு.இ.ச. அசோக்குமார் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 25 | செல்வி.அ. அபிராமி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 26 | திருமதி.மு.க. பகுமிதா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 27 | செல்வி.அ. பவானி | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| 28 | திரு.ப. கிந்துஜன் | முகாமைத்துவசேவை உத்தியோகத்தர் |
| 29 | திரு.வ. ஜீவானந்தன் | காவலாளி |
| 30 | திரு.ம. பகலவன் | காவலாளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


DPMC

# KADAMPAN MOTORS

SALES DEALER

BAJAJ MOTORCYCLES





Dealers in 22 Kt Gold Jewellery

# J.P.L. WORK SHOP

# J.P.L. நகை தொழிலகம்

Market Road, Paddiruppu, Kaluwanchikudy. Mob.No. : +94 77 590 4896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செந்தமிழாம் தாய்மொழி

ஆதியிலே பேசிய அரும் பெரும் தமிழே
புலவர்கள் பேசும் செம்மொழியே
அந்தமில்லா பல்சுவையே
பேசத் தித்திக்கும் ஆசைத் தமிழே
நளவெண்பாவில் நளனது இசையே
நான் வியக்கும் இனிமையே.
மயிலுக்குப் போர்வை அளித்த - மான்பு மிகு
குமணன் திருமொழியே.

புலமைக் கவிகளின் புகழ்மொழியே
புத்துணர்வூட்டும் பேரமுதமே
இத்தனை காலம் அறியார் - இனி
அறிவார் உன் சிறப்பை
எத்தனை காலம் நீ வாழ
வாக்கேயகாரர் வல்லமை தான்.
காரணம் என்றால் மிகையாகுமோ
என் இனிய பழந்தமிழே.


வேறெந்த மொழியோ உனைவிடச் சிறப்பு
யான் அறிந்தவரை நீயே மனவிருப்பு
வார்த்தைகள் போதுமன்றோ உனை
நான் சிறப்பூட்ட எழுதுகிறேன் இக்கவிதையை
என்தாய் மொழி நீ இருக்க
இதர மொழியில் நாட்டம் கொள்வது தகுமோ?
இதை அறியாது நான் இருக்க

அதையும் விளக்குகிறாய் உன் இசையில்
அருமைக் கவிஞர் செந்நாவில்
நின்றொலித்த செம்மொழியே
அயல் நாட்டாரும் கேட்டு வியக்கும்
கரும்பினைய கனிமொழியே
தமிழ் என்றாலே சிறப்பு - அதில்
செந்தமிழென்றால் மிகைக் சிறப்பு
பேதைமைகளின் மிதித்திறப்பு - என்
அருமை மொழியே முதற்பிறப்பு.

எம் தலைமுறையின் தலை நிமிர்த்தும்
என் அன்னை மொழியே.
எம்மை தரமுயர்த்தும் தன்னலம்
இல்லாத் தமிழே
அறிஞர் அவையாம் தேனருவி - அதில்
திரையெழுப்பும் செந்தமிழே.
அருமைக் கவிமொழியே ஆரமுதே
என் இனிய செந்தமிழே.

**- நே. தருணிகா**
*தரம் - 11W*

# Dr. அப்துல் கலாமின் பொன்மொழிகள்



கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள்
எண்ணங்களை செயல்களாக மாற்றுங்கள்

நம்பிக்கை நிறைந்த ஒருவர்
யார்முன்னேயும்
எப்போதும் மண்டியிடுவதில்லை.

சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை
தேவையில்லை
துன்பங்களை சந்திக்க தெரிந்தவனுக்கு
வாழ்க்கையில் தோல்வியே இல்லை...

ஒரு நல்ல புத்தகம் ஆயிரம் நல்ல
நண்பர்களுக்குச் சமம். ஆனால்
ஒரு நல்ல நண்பன் ஒரு நூலகத்திற்கு
சமனாவான்.

பிறரைத் தோற்கடிப்பது சுலபம் ஆனால்
அவரை
வெற்றி கொள்வது சிரமமான விஷயம்.

உன் முதல் வெற்றியின் திருப்தியில் ஓய்வு
கொள்ளாதே,
உனக்கு கிடைத்த வெற்றி,
அதிர்ஷடத்தினால் மட்டுமே என்று
கூறுவதற்கு ஒரு கூட்டமே காத்திருக்கிறது.

உன் வாழ்வினுள் வரும் அனைத்து
சங்கடங்களும் உன்னை அழிக்க
வரவில்லை.
உன் திறமையையும் மற்றும் உள்மன
சக்தியையும் வெளிப்படுத்த ஒரு வாய்ப்பை
அளித்துச் செல்கிறது.

சவாலுக்கே தெரிவியுங்கள், நீங்களும்
வீழ்த்த முடியாத சவாலானவர் என்று.

நாட்டின் மிகச் சிறந்த மற்றும் திறமைமிக்க
மூளைகள்
பள்ளியறையின் கடைசி பெஞ்சில்
இருக்கத்தான் வாய்ப்பு அதிகம்

நீ தூங்கும் போது வருவது கனவல்ல,
உன்னை
தூங்கவிடாமல் செய்யும் கனவே
கனவாகும்.

வெல்வோம் சாதிப்போம் வேதனைகளைத்
துடைத்தெறிவோம்
எந்தை அருளால் எதுவும் வசமாகும்.

**- சுபாஸ்கரன் லுஜிதா**
*தரம் - 11Y*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வாழ்த்து



மாணவர்களின் கனவுகளை கைவசப்படுத்தி
கொடுக்க உதவும் தூண்டுகோலை
கை எடுத்து வணங்குகிறேன்
நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

நான் வாழ! நான் முன்னேற!
எனக்காக உழைத்தவர்கள்
நான் இன்று இன்பம் காண
அன்று துன்பம் பொறுத்தவர்கள்

உன்னைக் கண்டு பயம் எனக்கு ஏனென்றால்
காரணம் அந்த புரியாத கணக்கு
திக்கி படிப்பேன் தமிழை உயர்த்த
சொன்னாய் எனது குரலை!

தந்தை தோளுக்கு மேல் தூக்கி வைத்து
எனக்கு ஊரை காட்டினார்கள்
நான்கு சுவரிற்குள் என்னை உட்கார
வைத்தே உலகம் காட்டினார்கள் ஆசிரியர்.

நான் முத்து சேர்க்க மூச்சடக்கி முத்து
குளிர்ந்தவர்கள் நான் கண்ட
நடமாடும் தெய்வங்கள் என்
ஆசிரியர்களே!

**S. Karshagini**
*Grade -11K*

# இன்னும் நினைவிருக்கு!

அம்மாவிடம் அழுதுபுலம்பி அடிவாங்கி
கதற கதற கண்டிப்புடன் ஆரம்பித்தது
கல்விப்பயணம்
ஒன்றில் புத்தகத்தைத் தூக்கி
இரண்டில் வாசிக்கப் பழகி
மூன்றில் முட்டிபோட்டு
நான்கில் பேனையால் எழுதிய புத்தம்
புதிய அனுபவம்
ஐந்தில் புலமைப்பரிசில் எய்து
ஆறில் அறிவை வளர்த்து ஆசிரியர்களை
மதிக்கப்பழகி
ஏழில் இலக்கு என்னும் ஏணிப்படியில்
ஏறி நின்று
எட்டாம் தரத்தை எட்டிப்பார்த்த நாங்கள்
ஒன்பதாம் தரத்தில் கால்பதித்த வேளை
கொரோனா என்னும் உயிர்க்கொல்லி
உலகையே ஆட்டிப்படைத்ததோடு எங்கள்
கனவிற்கு தடை போட்டது.
பத்தில் தடைகளை தகர்த்தெறிந்து தரமான
இலக்குடன்
பதினொன்றில் பரீட்சையை
எதிர்நோக்கவிருக்கும்
பட்டிருப்பு தேசிய பாடசாலைப்
பறவைகள் நாங்கள்

அறிவை ஊட்டிய ஆசான்களே!
பசுமை நிறைந்த பள்ளி நினைவுகளே!
தேடிக் கொண்ட தோழர்களே!
நாம் பறந்து செல்கின்றோம்.

**2022(2023) O/L Batch**
*Grade -11P*
***N. Shathursana, S. Dayanika,***
***K. Kuganchaly , P. Sageeska***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா



நான் பென் பிடித்து எழுதிய முதல்
பெண்ணின் பெயர் அம்மா
நான் அடுத்த பிறப்பு எடுப்பேன் என்றால்
உன்னுடைய செருப்பாக பிறக்க வேண்டும்
ஏன் என்றால் என்னை இத்தனை
வருடமாக சுமந்த உன்னை நான் ஒரு
முறையாவது சுமப்பதற்கு

இரவை கூட பகலாக மாற்றி என்னைக்
காத்தவள்
இந்த உலகிற்கு என்னை முதலில்
அறிமுகம் செய்த தெய்வம் அவள்.
என் ஆசான் சொல்லித்தந்த மூன்று எழுத்து
முதற் சொல் அம்மா.
நோயுற்று நான் விழுந்தபோதிலும் நீ
உற்றதாய் துவண்டு மருந்தாகி தேய்வாய்.

பாசம் எனும் கயிற்றால் என்னை கட்டி
இழுத்தவள் நீ.
பசி என்று நான் உணரும் முன்பே என்பசி
உணர்ந்து அமுதம் நீ தருவாய்
மடியில் வளர்த்தாய் மனதால் சுமந்தாய்
தனது இரத்தத்தை உருக்கி என்பசியைப்
போக்கியது.
நான் இருக்கும் தவமே உனக்கு
பிள்ளையாக பிறக்கத்தான் சொர்க்கம்



நரகம் என்றாலும் நான் கைபிடித்து
வரவேண்டும்
நான் விடும் சிறுதுளி கண்ணீருக்கு நீ
விடுகின்றாய் மழைபோல கண்ணீரை
நீ என்னைவிட்டு பிரிந்தால் என் உயிரும்
என்னை விட்டுப் பிரியும்
நீ என்னோட இருந்து சிறுநிமிடம் போதும்
என் வாழ்வில் பொன்னான நிமிடம்
என் கவலைகளை ஆடைபோட்டு
மறைத்து என்னை மகிழ்விக்க ஆடிக்குக்
கொண்டு சிரிப்பாரே.

ஆயிரத்தில் ஒருத்தியாக வருவதற்கு ஆயிரம்
அவமானங்களை நீ ஏற்றுக் கொண்டாய்.
நான் உனக்காக வாழ்ந்த நிமிடங்களை விட
நீ எனக்காக வாழ்ந்த நாட்கள் அதிகம்..

**- Y. டினேஸ்கா**
*தரம் - 11K*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# "கற்றிடு கல்வியை"



கல்வி கற்க பள்ளியில் நுழைந்து
ஆசையுடன் பாடங்களை கற்கும் வேளை...
நடுவில் வந்து நிற்கிறது,
இதயத்தின் ஆசை...
வந்த இலக்கு மறந்து விட!
வேப்பங்காய் ஆனது
குருவின் அறிவுரைகள்
படித்த பாடம் பாதியில் போக...
வாழ்க்கையை உணரும் போது
வலிகள் மட்டுமே மிச்சமாய் இருக்கும்...
காலத்தை உணர்ந்து படித்து விட்டால்
வாழ்க்கையில் நீயும் வசந்தங்கள் காணலாம்...

**- கு. ஹஷாரகி**
*தரம் - 11w*

# நட்பு



சிப்பிக்குள் பிறப்பது சின்னச் சின்ன
சிரிப்பில் பிறப்பது நட்பு...
நாம் அறியாமையில் இருக்கும் போது
நம்மை அறிய வைப்பது நட்பு...
நாம் பலவீனமாக இருக்கும் போது நமக்கு
பலமாக நிற்பது நட்பு...
நீ தேடிப் போகும் நட்பு அழகானது
உன்னைத் தேடி வரும் நட்பு ஆழமானது...
இந்த நட்பு எனும் சிறந்த உறவு
இறைவனுக்கு கூட கிடைக்காத வரம்...
உப்பு இருந்தால் உணவு சுவைக்கும் நட்பு
இருந்தால் வாழ்வு இனிக்கும்...
மலருக்கு வாசனை அதிகம் நட்புக்கு
நம்மீது யோசனை அதிகம்...
நட்பை பெற அன்று யோசித்தேன் இன்று
தினமும் உன் நட்புக்காக இறைவனை
யாசித்தேன்...
செடியில் பூத்தமலர் கூட ஒருநாள் உதிர்ந்து
விடலாம் மனதில் பூத்த நட்பு உதிராது...
கவலைப்பட்ட இதயத்திற்கு கவிதை
மருந்து போன்றது காயப்பட்ட இதயத்திற்கு
நட்பு உயிர் போன்றது...

"மறக்க முடியாத நினைவும் வெறுக்க முடியாத
அன்பும் சிதைக்க முடியாத நிமிடமும் நிறைந்ததுதான்
நம் நட்பு எனும் வாழ்க்கை"

**- Y. டினேஸ்கா**
*தரம் - 11K*

# பிரியாவிடையிலும் இனிக்கிறதே...

பாடசாலை எனும் பூந்தோட்டத்தில்
ஆசிரியர்கள் எனும் மலர்களிலிருந்து
கல்வி எனும் தேனினைச் சேகரிக்க
தனித்தனியாய் வந்த தேன்பூச்சிகள் நாங்கள்
அங்குதான் சந்தித்தோம்
தோழர்கள் எனும் தேன்பூச்சிகளை
அறியாப்பருவத்தில் அறிமுகமில்லா
வளர்த்த நட்பினை இப்போது அறிந்த
பருவத்தில் பிரிந்து போக வருந்துகிறோம்.
துயரிலும் களிப்பு என்னவெனில்
மலர்களின் நினைவும் சொட்டுச்
சொட்டாய் சேமித்த தேனிலும் எப்போதும்
இனித்துக் கொண்டேயிருக்கும்.

**2022(2023) O/L Batch**
*Grade -11P*
*S. Dayanika, P. Sageeska,*
*N. Shathursana, K. Kuganchaly*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்றொரு நாள்...

அன்றொரு நாள் ஆசிரியர் தினம்
வளமையை விட வகுப்புகளும் கடமைகளும்
முடிவதற்கு அண்ணளவாக எட்டு மணி
ஆகிவிட்டது
இரவு வேளையில் தனியாக வருவதற்கு
பழகிவிட்டேன் அன்றைய நாள் ஏதோ வீடு
வரும் பொழுது ஓர் பதட்டம்.

வீடு சென்றதும் பாதணிகளை கழற்றி
முகம் கால்களை கழுவி வீட்டிற்குள்
நுழைந்தேன் எனது தம்பி "அவன் இறந்து
விட்டான்"
என்று கூறினான் எனது மனம்
அதனை ஏற்க மறுத்தது. இருப்பினும்
எனது தாயிடம் வினாவினேன்
அவள் ஆம் என்று கூறமுடியாமல்
தலையை மேலும் கீழுமாக அசைத்தாள்

நான் இடிந்து போனேன் என்னையே அறியாமல்
என் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது
இதற்கு காரணம் நான் அவன் மீது
வைத்திருந்த அளவு கடந்த பாசமும் அன்பும்
தான்
இந்த வலி எனக்கு புதிதாகவும் தாங்க
முடியாத அளவிற்கு வித்தியாசமாக இருந்தது.

என்ன நடந்திருக்கும் என இரவு முழுவதும்
அவன் எண்ணம்தான் இரவிலும் கனவிலும்
வந்து வந்து சென்றது அப்போது புரிந்து
கொண்டு ஓர் முடிவு எடுத்தேன் இனி
எவர் மீதும் அளவு கடந்த பாசம்
வைக்கக் கூடாது என்று இருப்பினும் என்
பையன்
நடந்தது தான் ஆதவன் உதயமானான்
விடிந்தும் அவன் எண்ணம் என்னை விட்டு
விலகவில்லை
அவன் நடந்து வரும் ஓசையும் அவன் அன்பாக
அழைக்கும் பாசையும் என் காதோரமாக ஒலித்துக்
கொண்டு இருந்தது எனது கவலையை எனது தாய்
புரிந்து கொண்டாள் இருப்பினும் பயனில்லை.

நேரங்கள் செல்லச் செல்ல அவள் வைத்த காலடித்
தடங்கள் எனது வீட்டின் முற்றத்தில் இருந்து
அகன்று செல்ல தொடங்கியது அவனுடைய
நினைவுகள் என்னை தல்லாடவைத்தன
என்னால் அத்துயரில் இருந்து மீள முடியவில்லை
காலம் எனக்கு அன்றைய துயரிற்கு ஒரு தீர்வை
வகுத்தது அதுதான் எல்லா மனிதனுக்கும்
இறைவனால் வளங்கப்பட்ட வரமாகிய
மறதியாகும்.

உங்கள் கேள்வி எனக்கு புரிகிறது
'யார் அந்த அவன்' அவன்
வேறு யாரும் இல்லை என் உயிர்த்தோழனாகிய
எனது வீட்டுச் ஒரே செல்லப்பிராணி

'தாய், தந்தை, நண்பர்கள் இவர்களைத்
தாண்டி நம்மை'
ஏமாற்றாத இன்னொரு உறவு நாம் வளர்க்கும்
**"செல்லப்பிராணி"**

- இப்படிக்கு,
உன் பிரிவை தாங்காமல்
வாழும் உன் உயிர்
**நண்பன்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு Letteru uuu... எழுத ஆசைப்பட்டேன்!

நேசமணி,
நாய் சேகர் வீதி,
அங்கோடை.
2222.02.22

அன்புள்ள வண்டுமுருகனுக்கு,

நான் இந்த கடிதத்தில் என் பாடசாலை நாட்களின் மறக்க முடியாத நினைவுகளை உன்னோடு பகிர நினைக்கிறேன். அதற்காக நீ Over ஆக எதிர்பார்க்காதே. பிறகு Simply Waste ஆக போய்விடும். வாழ்க்கை ஒரு வட்டம் என்பார்கள். ஆனால் என் வாழ்க்கையோ வங்காளவிரிகுடா போன்றது. என் அப்பா அழைத்துச் சென்றார் அங்கு ஓரிடம். ஆனால் அது ஒரு பரந்து விரிந்த நரகம் போல தெரிந்தது. அப்பா காட்டிய ஆசை வார்த்தை இன்னும் என் மனதில் ஒலிக்கிறது. அவையாவன, Trip கூட்டிட்டு போவாங்க; விளையாடுவாங்க என்டாங்க; அரண்மனை போல Bathroom இருக்கு என்டாங்க, ஆனால் நான் நினைச்சதொன்று நடந்தது மற்றொன்று. முதல் நாள் வகுப்பறையில் என் ஆசிரியர் என்னை விடிய விடிய வைத்து படிப்பித்தார். என் பிஞ்சு உடம்பு என்னவாகும் என்று ஒருவரும் யோசிக்கவில்லை. என் நண்பன் புலிக்கேசி கூறினான்; பாடசாலைக்கு வந்த லட்ச நிதியில் கழிப்பறை கட்டினார்கள் என்று. அதைப்பார்க்க நான் சுற்றுலா சென்றபோதுதான் தெரிந்தது அது கழிப்பறையல்ல சிகிரியா கிறுக்கல் கவிதையென்று. அகராதியில் இல்லாத வார்த்தை கூட அங்கு வாசனையோடு அடுக்கப்பட்டு அழியாத ஓவியங்களாக இருந்தன. FOGG சென்ட் கூடு அதன் மணத்தை தோற்றுப் போய்விடும். இப்பொழுது என் நிலையைக் கண்டு தான் புரிகிறது. ஏன் எனது சொர்க்கமே என்னைத் துரத்தியது என்று. வெந்து தணிந்தது காடு என் Letterukku ஒரு வணக்கத்தப்போடு.

இப்படிக்கு,
அன்பே சிவம்,
ஆருயிர் நேசமணி

பின்குறிப்பு: இது யார் மனதையும் புண் படுத்தும் நோக்கமல்ல

**- தரம் 11U மாணவிகள்**
*2022 O/L Batch*

# மறக்க முடியாத நாட்கள்

எங்கெங்கோ இருந்து வந்து
அறியாத பருவமதில் உறவாக
சேர்ந்த நாட்கள் தடம்புரள விடாமல்
தூண்களாக தாங்கி நிற்கும் நட்புகளை
சேர்த்த நாட்கள் அன்போடு ஆசான்கள்
பரிவு கலந்து ஊட்டிய பாடத்தை
கற்ற நாட்கள் தேடினாலும் கேட்டாலும்
திரும்பவும் கிடைக்காத அரிதான - அழகிய
நாட்கள் மறக்கவே முடியாத இந்த பள்ளிக்
கூட வாழ்நாட்கள்

**- க. கிருத்தனா**
*தரம் - 11V*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அப்பா

காலை எழுந்தவுடன் பகல்
எல்லாம் வேலை இரவில் நீ வீட்டிற்கு
திரும்புவாய் – அது
பறவையானது பொழுது விழுந்ததும்
கூட்டை விட்டு சென்று இரை தேடி
மாலை ஆனதும் தனது கூட்டிற்கு
சென்று
தன் குஞ்சுகளுக்கு அந்த இரையை
அளிப்பது போல்
உன் வலிகளை மறைத்து
பாசத்தை அள்ளித் தந்தாயே
அப்பா...


அம்மா என்னை வயிற்றில் சுமந்தாலும் ஆயுள் வரை
என்னை நெஞ்சில்
சுமப்பவர்தான் அப்பா...
பல கஷ்டங்கள், வலிகள் வந்த போதிலும்
அவற்றை தாண்டி அதனை வெளிப்படுத்தாமல்
வாழ்க்கையை நடத்தி செல்பவர் அப்பா...

ஆயிரம் வலிகள் உனது உடலில்
அதனை மறைத்து எனக்காக வாழ்கிறாய்
உன்னை தலைகுனியும் செயல் ஒரு நாளும்
செய்ய மாட்டேன்.
நித்தமும் நெஞ்சல் சுமந்து
நிலையான வாழ்வை தரவே
நடமாடிடும் உருவமே அப்பா...

வாழ்க்கையினை நடாத்தி செல்வதற்கு
பணத்தினை சம்பாதிப்பதற்காக
வெயிலுக்குள் நின்று வேலை செய்யும் போது
உன் உதிரத்தில் வெளியேறும் வியர்வை துளிகள்
அப்பா நீ எனக்காக சிந்தும் இரத்த துளிகள்

சில நேரங்களில் பகைவன் போல தெரிந்தாலும்
உனது பாசத்தை மிஞ்சிட யாருமில்லை
இவ் உலகில்... என் அப்பா...

**- ரமேஸ்குமார் வேணுஜா**
*தரம் - 11Y*



**- நதுஷா**
*தரம் - 11U*
*2022 O/L Batch*

## கைவிலங்கா? கைபேசியா?

தொட்டதும் தெரியவில்லை ஒட்டிப்பிடிக்கும்
என்று,தொட்டபின் புரிகிறது விட்டு நீங்காதென்று.
கள்ளமறியா நெஞ்சில் கபடத்தனம் புகுந்ததே
கைவிலங்காய் வந்த என் கைபேசியினாலே!
வரபோகும் பெறுபேறு கற்றவைக்கு மட்டுமல்ல
உன்னைக் கைப்பிடித்ததற்கும்தான்!

## என் கவலை

கருவறை விட்டு பூமியை கண் விழித்து கண்டநாள். முதல் எனது வயது 17 ஆகும். இந்தக்காலம் வரை என் கவலைகளும் கஸ்டங்களும் நீடித்துக் கொண்டேதான் உள்ளதே. ஒரு கணம் கூட ஓய்வடைந்து இல்லையே. முரண்பாடுகளும் சண்டைகளும் என் வாழ்க்கைக்கு படிகட்டு போல் மேலோங்கி சென்று கொண்டு இருக்கிறதே. என்ன என்னவோ கவலைகள் எவ்வளவோ சிந்தனைகள் என் மனச்சாட்சி கூட வெறுக்குதே! உறவுகளும் நண்பர்களும் சொல்லிடும் வார்த்தைகள் கவலை என்னும் பாதாளத்துக்குள் இழுத்து செல்லுதே.

**- T. Sheshathaki**
*Grade - 11W, 2023 O/L Batch*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "வலைத்தளம்"

தேடல்களில் முகவரிகள் மாறிவிட்டால்
தேவையற்றது நம்மைத் தேடிவரும்
அன்பும், பரிவும் ஆசையும் வலைத்தளத்தில்
வலையினை விரித்திடும்....
தூண்டில் மீனாய் மாட்டிவிட,
விருப்பதுடன் பயணித்து
இலக்குகள் திசைமாறி கண்முன்னே
சிதைந்து போக... உணர்ந்து கொண்டு
வெளியேற நினைக்கையில்
காலங்கள் கடந்து விட்டது கண்டு
யாரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்பாமல்
வாழ்க்கையை முடித்துக் கொள்ள
உன்னால் முடியுமென்றால்
உயிரை விட வலைத்தளம் உயர்வானதல்ல
புரிந்து கொண்டு நடந்திடு!
புத்தியுடன் வாழ்ந்திடு!

- கு. ஹிஷாரகி
*தரம் - 11W*

# ஆசிரியர் எனும் ஏணிப்படி

இன்னும் எத்தனை காலம் தான்
கற்பித்துக் கொண்டிருப்பீர்
"வாழ்க்கை" எனும் பாடத்தை
போதும் போது மென்றே நினைத்து
நானே கற்பதை நிறுத்த எண்ணிலாலும்
நித்தம் புதிது புதிதாய் கற்பிக்க
எங்கிருந்துதான் கிடைக்குமோ
உங்களுக்கு மட்டும் தினம் தினம் இத்தனை
கற்பனை வித்துக்கள்...

கைநீட்டி முதுகில் ரேகைகள் பதித்த
சற்று நேரத்திற்கெல்லாம் ஒன்றுமே
நடக்காததை போலே
சிரித்த முகமாய் முன்வந்து நின்று
வணக்கம் கூறி சக மனிதர்களோடு
சகிப்புத்தன்மையோடு நடக்க வேண்டுமென
உங்களை அறியாமல் எனக்குப் போதித்த
புத்தரும் நீர் தான்...

நடத்திய பாடத்தில் புரியாததென்றெதும்
கேட்டால் இருக்கையில் முகத்தினெதிரே
புரியவில்லை சார்... என்று கூறி
முன் ஒன்று பேசி புறமொன்று பேசித்
சிரியாது வாழ கற்பித்தவரும்
நீங்கள் தான்...

உழைப்பின் மகத்துவத்தையும் உதவுவதன்
அரிச்சுவடியையும் போதித்தோரும் நீரே...
என்னுள் ஊற்றெடுக்கும் வார்த்தைகளை
வார்த்தெடுக்க தாள்கள் போதாது...
கள்ளமில்லா உங்கள் பிள்ளை
மொழியில் கற்பித்து எனைச் செதுக்கிய
சிற்பிகளே... நீவிர் வாழ்க வளமுடன்.

**- K. Kathustika**
*Grade - 11W, 2023 O/L Batch*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வாழ்க்கை



பல கலைகள் கற்க சென்ற கூடம்
என் கனவுகளை நியமாக்க சென்ற கூடம்
அது தானடி பள்ளிக் கூடம்
கவலையை மறந்து உறவை மறந்து கற்றோமே பாடம்.
ஆசிரியர் எனும் அறிஞனிடம் பயின்ற படிப்பு.
இப்போதும் என் உயிருடன் உறங்கிக் கொண்டுதான் உள்ளது.
சிறகு முளைத்த பறவை போல் சுதந்திரமாய் இருந்தோமே.
காளனை போல் வந்தடி இடைகளாக.
பரீட்சை கஷ்டங்களும் கவலைகளும் என்
முகத்தின் முன் குடை பிடித்து நின்ற தடி.
கதிரவனின் முகம் விடிய முன் தூங்கிடுவேனே.
பதிவு எடுத்த புத்தகத்தை மீண்டும் ஒரு முறை
என் பள்ளி வாழ்க்கையுடன் இணைத்து
பயணிக்க நாதியுள்ளவனாக திகழ்ந்தேனே!

**- T. Sheshathaki**
*Grade - 11W, 2023 O/L Batch*

# சிக்ரெட் புகையுங்கள், மது அருந்துங்கள்




## பரிசுகளை வெல்லுங்கள்


| | |
|---|---|
| முதலாம் பரிசு | : மரணம் |
| இரண்டாம் பரிசு | : புற்றுநோய் |
| மூன்றாம் பரிசு | : காசநோய், பக்கவாதம் |
| ஆறுதல் பரிசு | : பண நஷ்டம் |
| பரிசளிப்பவர் | : எமதர்மராஜா |

**பரிசுகள் 100% உத்திரவாதம்**

**- S. Aruvika**
*Grade - 11W*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி



"படிக்கட்டு வழியாக மேல் நோக்கிச் செல்வதை விட
புத்தகப் படிப்பு வழியாக மேல் நோக்கிச் செல்வதே
வாழ்வை மேல் நோக்கி கொண்டு செல்லும்"

"Success is not Suffering"

"வெற்றி என்பது சிரமமான காரியமல்ல"

**- மே. கியூமிஹா -**
*தரம் - 11U*
*2022 O/L Batch*

# பாடசாலைப் பருவம்

ஆசானை வணங்கிட்டே அறிவுக்
கடலில் நாம் மிதப்போம்
முதல் நட்பு உருவாகிய காலமது
எம்மை அறியா ஆனந்தத்தில் வாழவைத்த
காலமது
இறைவன் கொடுத்த அழகிய காலமது
இறையடி சேரும் வரை நினைவுகள்
அழியாக் காலமது

பாடசாலை வாழ்க்கை பாழாகிப் போன
தென்று நினைப்பர் யாருமில்லை!
நினைப்பார் அவர் மனிதனில்ல.

சின்னஞ்சிறு பருவத்தில் சித்திரம் பேசுதடி
உடன் பிறவா உறவுகளை பாடசாலை
தனில் சந்தித்தோம்
உலகம் என்ற பாடசாலை ஒரு புதுமைதான்
கற்றுக் கொடுத்து வாழ்க்கை எனும்
தேர்வுக்கான விடையையும் அளிக்கிறது.

ஐந்து வயதினில் ஆசைகள் பல சுமந்து
அடி எடுத்து வைத்தன எம் பிஞ்சு
பாதங்கள் "பாடசாலை" எனும்
கருவறையினுள்.
அகத்தினில் சுமந்த ஆயிரம் கனவுகளை
நிஜத்தின் சுவடுகளாக மாற்றியதும்
பாடசாலையே.

எழுத்தறிவித்தவன் இறைவன்,
அந்த எழுத்தை எமக்கு அறிவித்தவன்
ஆசிரியன்.
கல்வியுடன், கலைகளும் எமக்கழித்து
அந்த பொன்னான அழகிய தருணங்களை
வண்ணமாக்கிய பாடசாலை நினைவுகளே
என்றும் அழியாதவை...

எம்மை ஆளாக்கிய பாடசாலைகள் வெறும்
கட்டிடங்கள் அல்ல,
எம்மை வளர்த்து விட்ட தாய்மாருக்கு
ஒப்பானவை.
அழியா நினைவுகளுடன்....

- பாடசாலை நினைவுகளுடன் மாணவி,
**மோகனதாஸ் டனுசிக்கா**
*தரம் - 11U*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அன்புடன் இளமைக்கு,

- **P. Shapthavi**
*Grade - 11U*
*(2022/O/L) Bt/ Paddiruppu M.M.V*

ஆறறிவுப் பிள்ளைக்கு ஆறுவயதாகும் முன்னே
அழைத்துச் சென்றாள் என் அன்னை - பாம்பு தன் வாயினுள்ளே
போக போக நீளம் இன்னும் நீண்டது - இதை அளக்க என்
இரு கைகள் போதவில்லை.

நீளவாக்கில் வேண்டாம் என்று கிடைவாக்கில் அளந்தேன்
கிடைத்ததே எனக்கிரு நல்லிரத்தினங்கள்
அம்மாவைப் பிரிந்து ஐந்து நிமிடம் இருத்தல் அரிசு - இதில்
ஐந்து மணி நேரமா என்று அலறினேன்.

கைபிடித்தேன், கால் பிடித்தேன் உதறிச் சென்றாள் என்னை
தாய்ப்பாசம் இல்லை என்று கண்ணில் நீர் நிரம்ப அண்ணாந்து
பார்த்தேன் அங்கும் என் பிரதிகள் - அழுகையில் தொடங்கிய
அழகான நட்பு - ஆழமாய் சென்றதே புதைக்குழியை போல

காத்திருந்தேன் காத்திருந்தேன் என் பாம்பாட்டி வருமட்டும்
வந்தபின் தொடங்கினாள் ஆசிரியர் தன் வேலையை
அப்பொழுது பார்க்கையிலே எட்டாத மலையாய்
இப்பொழுது ஏறிச்சென்றேன் அழியும் சிறு துகளாய்

தாரகை எண்ணும் முன்பே தவண்டு வரும் விடியல் போல்
நான் இங்கு பழகும் முன்பே காலங்கள் சென்றனவே
நிறைவேறாத ஆசைகள் நினைவாய் நீள்கின்றன
மீண்டும் ஓர் பகல்கனவாய் ஏக்கத்தில் கலைகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்லூரிச் சிறப்பு



என்றும் வாசிக்க விரும்பும் கவிதை
கல்லூரி நட்பு!
கடந்து வந்த நாட்களை காட்டிலும்
கரையாத நினைவுகள் இதில் அதிகம்

கல்வி எனும் மூன்றெழுத்து கிடைத்த போது
நட்பு எனும் மூன்றெழுத்து இலவசமாகியது – எமது
கல்லூரியில் கல்வி சுமையாய் தேய்பிறையாயிருந்து
எங்களை நட்பு சுமையால் வளர்பிறையாய்
ஆக்கியது கல்லூரி

முதன்முதலில் அருகருகே அமர்ந்த போது
தெரிந்து கொண்டோம் பெயர்களை
சேர்ந்து இடை உணவு அருந்தும் போது
தெரிந்து கொண்டோம் அடுத்தவர் வீட்டு சமையலை

மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை மட்டுமல்ல கல்லூரியின்
வகுப்பறையும் கூட
முடியும் வரையில் முடியுமா என்றிருக்கும்
முடிந்த பின்பு மீண்டும்
முடியுமா என்றிருக்கும் கல்லூரி நட்பு



**- J. Kithushiha**
*Grade - 11U*
*(2022/O/L Batch)*

# என் அப்பா

எனக்கு உயிர் தந்து என் உயிரை காத்து வரும் என் அப்பனுக்கு நான் எழுதும் ஒருசில வரிகள்

எண்ணிலடங்கா உன் ஆசைகள்
அரை குறையாய் நிற்க
என் ஆசைக்காய் ஓடினாய்
நீ கனவு கண்டு கண் திறக்க
உன் கனவினுள் ஏறி நான் குதித்தேன்
என் வாழ்வின் மாற்றத்திற்கு
உன் வாழ்வினை புதைத்தாய்
உன் புகழைப் பாட - அப்பா
என் இதயமே போதவில்லை.

நான் ஆசையாய் ஓடிவரும்போது
உன் துன்பத்தை மறைத்து - சிரித்து நின்றாய்
நீ சிந்தும் ஒவ்வொரு வியர்வை துளிகளும்
என் மனதை வியக்க வைக்கின்றது
அழகான உன் வாழ்க்கையை - நீ
அடியோடு எனக்காக விதைத்தாய்
விதையிலிருந்து முளையாக நான் தோன்ற
விதைக்கு பருவமாய் - நீ நின்றாய்

ஒருவேளை உணவிற்கு நீ ஓடினாய்
ஒரு காலமும் உனை மறவேனே
நீ வாழ்ந்த நாட்கள் யாவும்
உனக்கின்றி வாழ்ந்தாயே - அப்பா
இரவோடு நீ நின்றாய்
இரவானாலும் உனை வெறுக்குமோ
அழகான உன் பேச்சு - என்
அடிமனதை அழ வைக்கின்றதே.

அப்பா எனும் மூன்று எழுத்தில் கவிதை எழுத
இந்த இலக்கணமே போதவில்லையே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Rember Women

Rember women, you were born life giver
miracle creator magic maker ♥
You were born with the heart of thousand mothers.
Open and Fearless and sweet ♥
You were born with the fire of queens and conquerors.
warrioress blood you bleed ♥
You were with the wisdom of sager and shamans no wound can you not heal. ♥
You were born the teller of your own tale
Before none should you kneed. ♥
You were born with an immeasurable soul reaching out past infinity. ♥
You were born to desire with passion abandon and to name your own destiny. ♥

Rember women,Rember women you are more that you can see Rember women rember. You are loved and lessly.

Rember women your power and grace the depth of your deep see heart. never forget you are women,
divide as you have been from the start

**W** ♥ Wonderful mother

**O** ♥ Outstanding Friend

**M** ♥ Marvelous Daughter

**E** ♥ Andorable Sister

**N** ♥ Nicest Gift to men from God

# Dedicate to O/L Day

Friendship is good relationship in our school days. In our school days we learn not only lesson but also good friendship. But if we don't learn the meaning of friendship, then it turns our that we haven't learned anything in our school life.

எங்கள் பாடசாலை நாட்களில் நட்பு என்பது ஒரு நல்ல உறவு. நம் பாடசாலை வாழ்க்கையில் பாடம் மட்டுமல்ல. நல்ல நட்பினையும் கற்றுக் கொள்கிறோம். ஆனால் நட்பின் அர்த்தத்தினை நாம் கற்றுக் கொள்ளவில்லை என்றால், நம் பாடசாலை வாழ்க்கையில் நாம் எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்று ஆகிவிடும்.

අපේ හාසල් කාලයේ මිත්‍රත්වය හොඳ සම්බන්ධයක්. අපේ පාසලේ ජීවිතයේදී අපි හාඩම් පමනණක් නොව හොඳ මහොඳ මිත්‍රත්වයද ඉගෙන ගනිමු. නමුත් අපි මිත්‍රත්වයේ අරුත ඉගෙන නොගත්තොත්, අපි අපේ පාස්ලේ ජීවිතයේ කිසිවක් ඉගෙන ගෙන නැති බව පෙනේ.


Thank you teachers for being
my life's role model
Dedicate to
My all loving
Teachers

எமது
பாடசாலை
வாழ்க்கையில்
நாம் நட்பினை
மட்டுமல்ல சம்பாதித்தோம்.
எமது அன்பிற்குரிய ஆசிரியர்களின்
கனிவான மனதினையும் தான்...

**- By, Subaraj Jane Abigail**
*Grade - 11K*
*(2022/O/L Batch)*
*PNSK*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலித்துப்பார்

**- துசியந்தன் விஸ்ணுஜா-**
*தரம் - 11D, 2022 O/L Batch*

கண்டவரெல்லாம் காதலித்து - நிற்க
காணாதவரும் கறை படியாது வாழ்த்த
கடலளவு இருப்பினும் கடுகளவு வைத்து
காலத்தால் அழியாததை காதலித்துப்பார்...

பித்து பிடித்து பிதற்றி நிற்பார்
பத்தும் தெரியுமென பதறாது கேட்பார்
செத்தும் சிலையாக வாழ
பற்றுக் கொண்டு காதலித்துப்பார்...

நீயிருக்க நாலுபேர் நின்மதியடைவார்
பள்ளியில் கற்றவரும் பக்கத்து நண்பரும்
உன்னில் உறவாட உன்னிப்பாயிருப்பார்
ஒரு காலும் மாறாது உறுதியுடன்
காதலித்துப்பார்...

உற்றவரும் மற்றவரும் உள்ளவரை - நீ
உலகில் உயர்த்தி பேசிடவும் வாழ்த்திடவும்
உணவு, உடை, உரையுள் உறுப்படியாக
பெற்றிடவே உன்மதிப்பு உச்சம் தொட்டு
மிச்சமில்லாது வாழ...

- கல்வியை காதலித்துப்பார் -

---

# தமிழிற்கு கிடைத்த சொத்து
# திருக்குறள்



- திருக்குறளை எழுதியவர் - திருவள்ளுவர்
- திருக்குறளிலுள்ள மொத்த திருக்குறள்கள் - 1330
- திருக்குறளிலுள்ள இயல்களின் எண்ணிக்கை - 09
- திருக்குறளிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை - 133
- திருக்குறளிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை 42194
- திருவள்ளுவர் பிறந்த ஆண்டு - கி.மு 31
- திருக்குறள் முதன்முதல் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
- திருக்குறளின் முதல் பெயர் - முப்பால்
- திருக்குறளின் இடம் பெறாத சொல் - தமிழ்
- திருக்குறளின் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்
- திருக்குறள் வெளிவந்த மொழிகளின் எண்ணிக்கை - 100
- ஏழு என்ற சொல் இடம்பெற்ற குறட்பாக்கள் - 08
- வீரமாமுனிவர் திருக்குறளை மொழிபெயர்த்த மொழி - இலத்தீன்
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத உயிரெழுத்து - ஔ
- திருக்குறளின் பெருமையை போற்றிப்பாடும் நூல் - திருவள்ளுவமாலை

**- N. Rupeashana**
*Grade - 11Y*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரிக்க சில துளிகள்





அப்பா : என்னடா, மார்க்ஸ் எல்லாம் குறைவா எடுத்திருக்க நல்ல அடிச்சு வதைச்சாத்தான் சரிவரும்னு நினைக்கிறேன்.


மகன் : ஆமாம்பா... நானும் அதையே தான் நினைச்சேன் அந்த வாத்தியார் வீடு எனக்குத் தெரியும்பா வாங்க போகலாம்.




நோயாளி : டொக்டர்... என்னோட வலது கால் ரொம்ப வலிக்குது

டொக்டர் : வயசாயிட்டு தானே இப்பிடி அடிக்கடி வரும்.

நோயாளி : இடது காலுக்கு அதே வயசு தானே அது வலிக்கலையே டாக்டர்.



Some One : ஏன்பா, நீ அடிச்ச கள்ள நோட்டு அப்பிடியே Originalமாதிரியே இருந்ததே அப்புறம் எப்பிடி மாட்டுன?

That boy : அடிச்ச நோட்டுல காந்திக்கு கண்ணாடி போட மறந்துட்டேன்.



ஆசிரியர் : ஏன்டா இவ்வளவு நாளா ஸ்கூலுக்கு வரல்ல?

மாணவன் : எங்கப்பா தான் சொன்னார் ரீச்சர் ஒரு இடத்துக்கு நம்ம அடிக்கடி போனா நமக்கு மரியாதையே கிடைக்காதாம் அதான் வரல்ல.



Some one : உங்க பையன் எங்ககிட்ட தான் இருக்கான். ஒரு 28 ஆயிரம் ரூபா குடுத்திட்டு கூட்டிட்டு போங்க.

அப்பா : இருடா, போலீஸ் கிட்ட கம்பளைன்ட் குடுக்கிறேன்.

Some one : நாங்க போலீஸ் தான் பேசுறோம். ஹெல்மட், லைசன்ஸ், இன்சூரன்ஸ், RC book எதுவுமே இல்லாம வண்டி ஓட்டிருக்கர் வந்து Fine கட்டிட்டு கூட்டிட்டு போங்க.



Teacher : பக்டீரியாவோட படம் வரைய சொன்னா வெள்ளை பேப்பரை கட்டி குடுத்திருக்கயே ஏன்?

Student : விபரம் புரியாம பேசாதிங்க Teacher. இது கண்ணுக்குத் தெரியாத பக்டீரியா.



கடவுள் : எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையது ஆகின்றது.

மனிதன் : அப்புறம் ஏன் ஆண்டவா நான் வாங்கின கடன் மட்டும் என்னுடையதாகவே இருக்குது.



மாணவன் 1 : மச்சான், தமிழ் முதல் தாள்ல எப்பிடியும் 98 மார்க்ஸ் வந்திடும்டா...

மாணவன் 2 : எப்பிடி மச்சான்

மாணவன் 1 : கடைசி பக்கத்துல நீ உண்மையான தமிழனா இருந்து 98 மார்க்ஸ் போடுறான்னு எழுதி வச்சிட்டேன்டா...

(23ம் பக்கத்தில் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனவெழுச்சியும் மாணவர்களும்

தனியாட்களின் நடத்தையினை வழிப்படுத்தும் ஒரு சக்தி மனவெழுச்சி எனப் படும். உணர்வுகளையும் மனோ பாவாங்க ளையும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் வெளிப்படுத்தும் திறன் கொண்டதாக இது காணப்படுகின்றது. மனவெழுச்சியானது, சிறுவர், முதியோர் என்ற எல்லா வயதுப் பிரிவினர் மத்தியிலும் தூண்டல் துலங்கல் அடிப்படையில் ஏதோ ஒரு வழியில் இடையூறு விளைவிக்கின்ற தன்மையை குறிக்கின்றது.

குழந்தைப் பருவம், ஆரம்பப் பிள்ளைப் பருவம், பிந்திய பிள்ளைப் பருவம், யௌவனப் பருவம் எனும் நான்கு மனவெழுச்சிப் பருவங்களும் மனித வாழ்வில் மாணவப் பருவத்தையே குறித்து நிற்கின்றது. இக் காலத்தில் உடலியல் ரீதியான துலங்கலும் மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றின் அடிப்படையில் உணர்வு ரீதியான துலங்கலும் வெளிப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் சமூக நுட்பத்திற்கும், கட்டமைப்புக் குள்ளும் உணர்வுகளை பகிர்ந்து கட்டுப்படுத்தி மாணவர்கள் செயற்படுகின்றனர்.

மாணவர்கள் மனவெழுச்சியின் காரணமாக ஒழுங்கற்ற உணர்வுகளினால் விரும்பத்தகாத பழக்க வழக்கங்களுக்கும் உள்ளாகின்றனர். குறிப்பாக மது, போதைவஸ்துப் பாவனை மற்றும் பாலியல் நடத்தைகள், கொலை, கொள்ளை, கடத்தல், கற்பளிப்பு போன்ற சட்ட விரோத செயல்களிலும் ஈடுபடும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு பொருள் மீது கொண்ட ஈர்ப்பினால் நேரான, எதிரான மனவெழுச்சிப் பண்புகளை கொண்டவர்களாக மாணவர்கள் வேறுபடுகின்றனர். ஒரு நல்லாசிரியரை தாய், தந்தையரை, அறிநரை, மகானை, கலைஞனை, மேதையைப் பின்பற்றி செயற்படுவதன் ஊடாக அம் மாணவர்கள் சிறந்த தேர்ச்சி மட்டத்தை எய்துவதுடன் ஒழுக்க சீலர்களாகவும் தமது உயரிய இலக்கினை எழுதில் அடையக் கூடியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

எதிரான மனவெழுச்சிப் பண்புகளைக் கொண்டவர்கள் அதிக நேரம் தொலைபேசிப் பாவனையில் ஈடுபடுபவர்களாகவும் இதில் தேவையற்ற விடயங்களிலும் விளையாட்டுக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களிலும் நேரத்தை வீண் விரயம் செய்பவர்களாகவும் பொருத்தமற்றவைகளை தேடுபவர்களாகவும் பதிவிளக்கம் செய்பவர்களாகவும் இனத் தெரியாதவர்களுடன் நண்பர்களாகுபவர்களாகவும், பந்தயம் கட்டல் போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் இவர்களின் கல்வியடைவு அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் தாழ்ந்த மட்டத்தினை நோகிச் செல்கின்ற நிலை உருவாகின்றது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் பொறுப்புக்களை ஒப்படைக்கும் பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பொறுப்புக்களையும் கடமைகளையும் ஒப்படைக்க வேண்டியது கட்டாயமானதாகும். அப்போதுதான் மாணவர்களின் மனவெழுச்சிகளை இனங்கண்டு அவர்களை வழிப்படுத்துவதற்கு ஏதுவாய் அமையும்.

புன்னகையுடனான பிரவேசம், உதவுதல், விட்டுக் கொடுத்தல், தட்டிக் கொடுத்தல், பாராட்டுதல், அமைதி, சாந்தம், சந்தோசம், சிரிப்பு போன்ற மனவெழுச்சிகளை வெளிக்காட்டல், சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தித்தல், ஏற்படும் முரன்பாடு பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்விளை முன்வைத்தல் மாணவர்களின் இயலுமைக்கு ஏற்ற வகையில் பாடத்தை அவர்கள் விரும்பும் அடிப்படையில் கட்டியெடுப்புதல், மறந்தும் எதிர்மறையான வார்த்தைகளைக் கூறாதிருத்தல் போன்ற செயற்பாடுகளை ஆசிரியர்கள் தினமும் நிறைவேற்றுவதனூடாக மாணவர்கள் மகிழ்ச்சியடைவதுடன் சிறந்த கல்விமான் களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் உருவாக வழி சமைக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

கோபம், பயம், அட்டகாசம், பொறாமை முதலான மனவெழுச்சிகளை வெளிக்காட்டல் மாணவர்களை அணுகி பொருத்தமான ஆலோசனைகளையும், நுட்ப முறைகளையும், பயன்படுத்துவதன் மூலம் சமூகத்திற்குப் பொருத்தமான சாதனை மிக்க மாணவர்களை உருவாக்க முடியும்.


மாணவப் பருவத்தில் ஓமோன்களின் உற்பத்தி வளர்ச்சியானது உடலில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. கட்டிளமைப் பருவ மாணவர்கள் பொழுது போக்கினை பெற்றொருடன் கழிக்க விரும்பாதவர்களாகவும், தாங்கள் பணம் எவ்வளவு வைத்திருக்க வேண்டும் எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பதனைத் தாங்களே தீர்மானிப்பவர்களாகவும், பாலியல் நடத்தைகள், சிந்தனைகள், தூரநோக்கு, எதிர்கால பழக்க வழக்கங்கள் போன்ற விடயங்களை தாங்களே முடிவு செய்து வாழ எத்தணிக்கும் நிலைமை காணப்படுகின்றது

எனவே ஆசிரியர்கள் பிள்ளைகளின் மனவெழுச்சியை அறிந்து பொருத்தமான விதத்தில் பாடத் தெரிவுகளை மேற்கொண்டு அவர்களின் இயலுமை, இயலாமை, பலம், பலவீனங்களை அறிந்து வழிகாட்டுவதன் மூலம் சிக்கலான மனவெழுச்சியினையும் சாதகமாகப் பயன்படுத்த இயலும்.

தற்காலத்தில் மாணவர்களில் சிலர் கூட்டுப் பொறுப்பு விடாமுயற்சி, தன்னம்பிக்கை, ஆராய்வுச் சிந்தனை போன்ற உயரிய இலக்கை நோக்கிச் செயற்படுவதற்கான மனவெழுச்சியை கொண்டவர்களாக காணப்படுகின்றமை. சிலர் வாழ்க்கை கஷ்டமானது என நினைத்து தவறான தீர்மானங்களை மேற்கொள்பவர்களாகவும், குறைவான கிரகித்தல் கொண்டவர்களாகவும், சிந்தனைகளை சிதற விடல், தீங்கு செய்வதனைப் பற்றிக் கவலைப் படாமை, தீய கனவுகளைக் காணல், எதிர்காலம் பற்றிய சிந்தனை இல்லாதவர்களாகவும், மனவெழுச்சிகளை அவர்களது கட்டுப் பாட்டிற்குள் கட்டுப்படுத்த தவறுபவர்களாகவும் காணப்படுகின்றமை.

எனவே இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் திட்டமிட்டச் செயற்படுவதன் மூலம் சிறந்த வெளியீடுகளை இச் சமூகத்திற்கு பெற்றுக் கொடுக்க முடியும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Time is the most valuable thing humans have. But, without knowing the value of time most of us fail to use our time in useful ways. We waste our time in unwanted matters. The success and failure of our lives depends on how we use our time.

We must know how to use our time wisely. We should learn to do the right thing at the right time. Nowadays, most of the students waste their time in playing video games, watching television and using smartphones. Only at the last moment. They start to prepare for their exams. So, they are not able to get good grades. They should allocate more time for their studies.

We should all spend our free time useful ways. We can spend our free time in activities such as reading books. writing poems, painting, etc. We will get many benifits by doing these things.

We should not forget that time is gold. If we lose our time. We cannot get it back. We should plan our time to do our work. We should be punctual in our work. The successful people in our societies are good at managing time. Let us use valuable time in useful ways to be successful in our lives.

**- G. Bovilaashini**

*Grade - 11Y*

# தமிழ் மொழி ஒலி ஓங்கட்டும்

*செந்தமிழ் எம் தமிழே*
*பைந்தமிழ் நீயானாய்..*
*பாரெங்கும் நிலையானாய்*
*பணிவாக உறவானாய்*

*எம் தமிழ் தழைத்தோங்க*
*எத்திசையும் கம கமக்க*
*நல்லிசையாய் நீயிருக்க*
*நாம் எதுக்கு பயம் கொள்ள*

*தீவினைகள் அகன்றோட*
*புதுக்கவிதை செழித்தோங்க*
*பாமரனும் கவிபாட*
*பாரெங்கும் தமிழ் லோங்க.*

*ஏர் பிடிக்கும் உழவனுடன்*
*வேர் பிடிக்கும் தமிழ்பாட்டு*
*எழுத்தாணி தீட்டுகையில்*
*எழுந்தாடும் தோகை மயில்*

*இசையில் கவிபூட்டும் விழிகள்*
*தானாய் தாலாட்டும் தமிழ்பாட்டு*
*என்றும் எம்மொழி எங்கும் ஒலிக்கட்டும்*
*தமிழ் மொழி ஒலி ஓங்கட்டும்.*

---

# வெற்றி

*மாயமான உலகில் தோல்வியை கண்டு*
*கலங்கிவிடாதே*
*அச்சம் இன்றி நடைபோடு*
*தோல்வி எல்லாம்*
*வெற்றியின் பாதையாக மாறும்....*

**- கீ. டஸ்வினி**

*தரம் - 11Y*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த உலகத்திற்கு நம்மை அறிமுகப்படுத்திய அம்மாவை தன்கரம் பிடித்து அம்மா என எழுதக் கற்றுக் கொடுத்தது நம் ஆசான்

மெழுகாய் இருந்து உருகி கல்வி எனும் ஒளியை மட்டும் வழங்காது வாழ்க்கை கல்வியை கற்று கொடுத்து. எமது இலட்சிய பாதையை அமைத்து, அந்த பாதைக்கு அறிரவனும் விளக்கேற்றி அன் பெனும் வழிகாட்டி எம்மை நல்வழியில் இட்டு செல்பவர் ஆசான்.

நம் வாழ்க்கைக்கு கல்வி எனும் அத்திபாரமிட்டு நற்பண்புகள் எனுக்கட்டடம் அமைத்து - அதில் ஒவ்வொரு படிக்கட்டுகளாக இருந்து சிகரத்தை அடையச் செய்பவர்கள் நம் ஆசான்.

தடுமாறும் போது தாங்கி தாயாகவும் - தடம் மாறும் போது தட்டி கேட்டு தந்தையாகவும் பிரச்சினைகள் வரும் போது சாய தோள் கொடுக்கும் தோழனாக இருக்கும் ஒரே ஜீவன் ஆசான்.

நம் வாழ்வில் உயரமான நிலையை
அடையும் போது தன் நிலைமாறாமல்
அதே இடத்தில் நின்று ரசிப்பவர் நம் ஆசான்

**- கீ. டஸ்வினி**

*தரம் - 11Y*




மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசையில் தாய் தந்தைக்கு அடுத்தபடி தெய்வத்திற்கு முதற்படி...

உள்ளிருக்கும் திறமையை நாம் பூட்டி வைக்க திறந்து விடும் சாவி அவர்கள்....

கல் நெஞ்சினை கல்வியினால் கடைந்து சிற்பம் செய்தவர்கள்...

அறியாமை எனும் நோய்க்கு அறிவு எனும் மருந்தை ஊட்டியவர்கள்...

தன் கோபத்தை சாந்தப்படுத்தி பொறுமையாக வாழும் புத்தர் அவர்கள்...

மாணவர்கள் வேம்பாக நினைக்கும் கல்வியை தேனாக இனிக்க வைத்தவர்கள்...

எத்தனை விடைத்தால் திருத்திய அவர்களது விரல்கள் ஒரு நாள் கூட ஓய்வெடுக்க நினைத்தது இல்லை...

கடலைை கூட ஒரு நாள் ஓய்ந்து போகும் ஆனால் ஆசிரியர் பணி எப்போதும் ஓயாது...

எவரஸ்டின் உயரம் கூடத்தோற்றுப் போகும் ஆசிரியரின் அறப்பணியின் உயர்வுக்கு முன்னால்....

நாம் கற்கும் கல்வி அறையை கருவறையாக்கிய தாம் அவர்கள்...


T - Talanted
E - Educated
A - Adoratle
C - Chaming
H - Helpful
E - Encouraging
R - Responsible

**- Dineshka**

*Grade - 11K*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் வாழ்வே அவர்களது கல்வி

விமர்சனத்திடையே வாழும் பிள்ளை
கண்டனம் செய்யக் கற்றுக் கொள்கிறது

பகைமையிடையே வாழும் பிள்ளை
சண்டையிடுவதற்குக் கற்றுக் கொள்கிறது

நேர்மையிடையே வாழும் பிள்ளை
நீதியைக் கற்றுக் கொள்கிறது.

கேலிப் பேச்சுக்களிடையே வாழும் பிள்ளை
கூச்சப்படவும் ஒதுங்கிக் கொள்ளவும் பழகும்

பொறாமையிடையே வாழும் பிள்ளை
குற்ற உணர்வு கொள்ளப் பழகுகிறது.

அவநம்பிக்கையிடையே வாழும் பிள்ளை
சூழ்ச்சி மிக்கதாக இருக்கக் கற்றுக் கொள்கிறது.

சகிப்புத் தன்மையிடையே வாழும் பிள்ளை
பொறுமையாக இருக்கக் கற்றுக் கொள்கிறது.

பகிர்ந்து கொடுப்புக்களிடையே வாழும் பிள்ளை
பிறர் உணர்வை மதிக்கக் கற்றுக் கொள்கிறது.

உற்சாகப்படுத்தலிடையே வாழும் பிள்ளை
தன்னம்பிக்கையை கற்றுக் கொள்கிறது.

புகழ்ச்சியிடையே வாழும் பிள்ளை
பாராட்டக் கற்றுக் கொள்கிறது.

பாதுகாப்பினிடையே வாழும் பிள்ளை
நம்பிக்கைத் தன்மையை பெற கற்றுக் கொள்கிறது.


மதிப்போடு வாழும் பிள்ளை தன்னை நேசிக்கக்
கற்றுக் கொள்கிறது.

கல்வியறிவினிடையே வாழும் பிள்ளை
மெய்யறிவைக் கற்றுக் கொள்கிறது.


வரவேற்புடனும் நட்புடனும் வாழும் பிள்ளை
இப்புவியில் அன்பைத் தேடக் கற்றுக் கொள்கிறது.

பரிகசிப்பினிடையே வாழும் பிள்ளை
பயந்தாங் கொள்ளியாக இருக்கக் கற்றுக் கொள்கிறது.

**- S. Piyeshanth**
*Grade - 11K*



*ஆசிரியர் : வல்லாரை சாப்பிட்டா ஞாபகசக்தி அதிகரிக்குமாம்...*
*மாணவன் : போன மாசம் வல்லாரை சாப்பிட்டேன் அது மட்டும் தான் ஞாபகம் இருக்க மத்ததெல்லாம் மறந்து போச்சு.*



Students : *நீங்க புது 2000 ரூபாய் நோட்டு மாதிரி* Teacher.
Teachers : *நான் உங்களுக்கு அவ்வளவு மதிப்புள்ளவரா பிள்ளைகள்?*
Students : *நீங்க வேற, மாத்தவும் முடியல! தூக்கி எறியவும் முடியல! அத சொன்னேன்* Teacher

**- K. Kathustika**
*Grade - 11W*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# School Life Like a Cutlet





கென்டின் கட்லட்டில் கண்டேனே
என் பள்ளிச் சுவையை - உருளைக்கிழங்காய்
உருண்டு வருகையிலே என்னை
பிடித்தெடுத்தார் ஆசிரியை

கற்பிக்கும் போது வெந்ததே உடல்
கற்றபின் மகிழ்ந்ததே மனம்
அடித்து தோலுரித்தார் ஐந்து நிமிடம் தாமதமாகையில்
அணைத்து அரவணைத்தார் என் மனம் துவண்டு போகையில்

சுவைச்சரக்கு பலசேர்த்து சுவைசேர்த்தார் என் வாழ்வை
சுவாரசியமாகியது என் போக்கு அந்நாளில்
பரீட்சைகள் புயலாக வந்தென்னை தாக்க
பரிட்சயமாகியது புலல்காற்றும் கூட.

ஐந்தாறு படைகளிலே அலைமோதி திரிந்தேன்
ஐந்தடி கிணற்றினிலே அடி மூழ்கி எழுந்தேன்
தத்தளித்த எனக்கு தங்கத்துடுப்பாய் வந்ததே
கல்வி எனும் படகு
வெறுமையாய் வந்தென்னை வெகுமதியாய்
மாற்றியதே இந்த சிறகு
பொன்னிறமாய் வெந்த கட்லட் போல்
பொன் மயமாய் ஆனதே என் கல்லூரி வாழ்க்கை

பாதைகள் முடிந்த பின்னும் பயணங்கள் தொடருமே
ஆனால் வந்த பாதை மறக்க மனம் எனக்கில்லையே
பள்ளி எனும் கோலத்தில் இணைந்தோமே
புள்ளிகளாய்
அழியாத கோலத்தில் நினைவுகளை புதைத்தோமே


**- தரம் - $11^{U}$ மாணவர்கள்**
*2022 O/L Batch*

குறிப்பு: உணவுப் பிரியர்களால் மட்டும் விளங்கக்கூடிய உண்மைக் கதை




- Solar என்ற சொல் பெறப்பட்ட வார்த்தை - இலத்தீன்
- சூரய குடும்பத்திலுள்ள மொத்த கோள்கள் - 08
- சூரியக் குடும்பத்தினை கண்டுபிடித்தவர் - கொபர் நிக்கஸ்
- சூரியக் குடும்பத்தில் தானே ஒளிரும் தன்மை கொண்டது - சூரியன்
- மிகப் பெரிய விண்மீன் - சூரியன்
- சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோள் - புதன்
- சூரியக் குடும்பத்தில் மிக வெப்பமான கோள் - வெள்ளி
- புவியின் துணைக்கோள் - நிலவு
- சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை - 6000டிகிரி செல்சியஸ்
- ரோமானியப் போர்க் கடவுளின் பேரால் அழைக்கப்படும் கோள் - செவ்வாய்
- சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோள் - வியாழன்
- சூரியனை கிழக்கிலிருந்து மேற்காக சுற்றி வரும் கோள் - வெள்ளி
- விடி வெள்ளி என அழைக்கப்படும் கோள் - வெள்ளி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாணவர்களின் எதிர்காலத்தை
நனவாக்குபவர்கள்
மாணவர்களுக்காக தன்னையே
தியாகம் செய்பவர்கள்

ஆசிரியர்கள் கல்லாதவர்களை
பட்டைதீட்டி வைரமாக்குபவர்கள்
தெளிந்த நீரோடை போல
புதியாததை புரிய வைப்பவர்
ஆன்மீகக் கருத்துக்கள் பகிர்ந்து
நல்வழிப்படுத்துவர்
மனச்சுமைகளைக் கண்டறிந்து
தீர்வு காண்பவர்கள்.

# ஆசிரியர் கவிதை

நாம் வாழ நாம் முன்னேற
அவர்களின் திறன் கொண்டு
கற்க வந்த நம்மை உயர வைத்து
உயர்ந்த நம்மை உயர்ந்து பார்க்கும்
உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள்
நம் ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் அறியாமை இருளகற்றி
அறிவொளியேற்றுபவர்கள்
அகத்தின் உணர்வுகளை முகத்தில்
கண்டறிபவர்கள்
அறநெறியோடு நல்லெண்ணங்களை
விதைப்பவர்கள்
அன்போடு ஒழுக்கங்களையும் கற்று
கொடுப்பவர்கள்

ஆசிரியர்கள் கலைஞர்களை உருவாக்கும்
படைப்பாளர்கள்
புதிய புதிய சிந்தனைகளை நல்கும்
ஆலோசகர்கள்
தலைவர்களையும் மேதைகளையும்
உருவாக்கும் கல்வியாளர்
உலக செய்திகளை பகிரும்
செய்தியாளர்

எழுத்தின் அகராதியை
அறிமுகப்படுத்தியவர்கள்
கல்வி கற்க ஆக்கமும் ஊக்கமும்
அளிப்பவர்கள்

உளிபடாத கல்
சிலையாவதில்லை.
கண்டிப்பில்லாத மாணவர்கள்
திருந்துவதில்லை
விடைத்தாள்களைத்
திருத்துவதோடு மாணவர்களின்
தவறுகளைத் திருத்துவர்.

இன்று வரலாறு படைப்பவன
நாளை வரலாறு படைக்க
போராடுபவர் ஆசிரியர்கள்

ஆசிரியர் பணி
மாணவர்களை
பண்புள்ள மனிதனாக
உயர்த்தும் உன்னதபணி
சிந்திக்க தெரிந்த
தலைமுறைகளாக
உருவாக்கும் பணி

சிறந்த ஆசிரியர்
ஒரு தேசத்துக்கான சொத்து
உயர்ந்த எண்ணங்களோடு
நூல்களைக் கற்று
மாணவர்களை நல்வழிப்படுத்துவோம்.

வாழ்க ஆசிரியர்கள்!
வளர்க அனைவரின் புகழ்!

**- அ. டிலக்ஷிகா**
*Grade - 11W*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்வி என்றால் என்ன???

**க**ல்வி என்றால் என்ன? புத்தகங்களைப் படிப்பதா? இல்லை. அல்லது அது பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன்தரும் வகையில் அமைகிறதோ அந்தப்பயிற்சிதான் கல்வி ஆகும்.

கல்வி என்பது உன்னுடைய மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதில்லை. அப்படித்திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணிக்காமல் உனக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கும்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத்தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் எமக்குத் தேவை.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதுதான் வாழ்க்கை. அதாவது விரிவடைதல், அததான் அன்பாகும். எனவே அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஒரே நியதியாகும். எல்லாவிதமான சுயநலமும் மரணம்தான்.

குருகுல முறையில் ஆசிரியனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவதுதான் சிறந்த கல்விமுறை என்பது எனது கருத்து. ஆசிரியரின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமையாமல் எந்தவிதக் கல்வியையும் பெறமுடியாது.

*சுவாமி விவேகானந்தரின்*
*- அருள்வாக்கு -*

**- செல்வி - இளங்கோ பூர்ஜிதா**
*Grade - 11K*

# Sunflower Oil Extraction Process

- Head of the Sunflower turn yellow at maturity.
- Maturity period is after petals drop but before seeds shatter.
- After heads are dried in sun, seeds can be seperated easily by hands/ multi - crop thresher with the capacity of 900kg/ha

**Process:**

1) **Cleaning seeds:** Seeds are passed over magnets to removal of metal traces & impurities are being get rid off by cleaning sieve & destones.

2) **De-hulling:** Seeds contain 20 - 30% hulls. that are removed before oil extraction to ensure the quality of oil & meal.

3) **Griding:** Hammer mills/ groved rollers used to crush large particles converted info smaller particles to increase the surface area.

4) **Pressing & Extraction:** Crushed seeds are used for oil recovery in 2 process.

1. Hard pressing: Exerting high pressure on prepared seed to seperate oil from solid fraction recovery about 25% oil.

2. Pre-pressing solvent Extraction : Exerting medium pressure or seed to seperate majority of oil, followed by solvent extraction to seperate addition oil from solid fraction.
Recovery over 40%

5) **Removal of solvent traces.**
- A stripping column used to - recover the remaining sovent.
- Oil is boiled by stream, Solvent evaporates, condenses & collected seperately.

6) **Oil Refineding:** Extracted & de-solvenized sunflower oil. Edible oil are refined to develop flavor, odor, colour & solidity using degum, neutralize, bleach & deodorize.

**- E. Poorjith,** *Grade - 11K*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை உனக்கிருந்தால்
தரையிலும் நடக்கலாம்
தாராளமாய் நீ வானிலும் பறக்கலாம்


விதைகூட விருட்ஷமாவது
மண்முட்டி மார் தட்டி
மன்றாடி எழுவதால்தான்

வாய்ப்பு என்பது
வரமாகக் கிடைப்பதால்
வலியோடு போராடு
வானம் உன் வசமே

குறையும் குற்றமும்
கூறுவோர் மத்தியில்
குனிந்து போகாதே
குறிக்கோள் கொண்டு
குவலயம் வென்றிடு

நாளை எண்ணி
நகர்த்தாதே நங்காய்
நாணாய் இருந்து
நகர்த்திடு அம்பை


1) கையில் ஆயுதம் இல்லாத ஒரு வீரன் மீண்டும் ஆயுதம் ஏந்தும் வரை அவனை எதிர்த்து போரிடக் கூடாது.
2) ஆண்மை ஆற்றவர்களிடம் போரிடக்கூடாது.
3) போரிலே காயப்பட்டு போர்க்களத்தில் இருந்து வெளியேறும் வீரனை தாக்கக்கூடாது.
4) காயமடைந்த வீரனையும் அவனை காக்கும் வீரனையும் எதிர்த்து போரிட கூடாது.
5) கதிரவன் உதயத்தில் இருந்து மறையும் வரை மட்டும் போரிட வேண்டும்.
6) போரில் சரணடைந்தவரை கொல்லாது போரில் வென்றவரை காக்க வேண்டும்.
7) போரிடாத வீரனை தாக்கக்கூடாது.
8) காலாட்படை, தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை வீரர்கள் தத்தமது படைகளுடன் மட்டுமே போரிட வேண்டும்.
9) மகாரதர்கள் மகாரதர்களுடனும், அதிரதர்கள் அதிரதர்களுடன்மட்டுமே போரிட வேண்டும்.
10) போரின் இரவு வேளையில் இரு அணிப் படையினர் ஒருவரை ஒருவர் சந்திக்க விரும்பினால் சந்திக்கலாம்.




# பீஷ்மர் வகுத்த போர் முறைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோ. சங்கீர்த்தனன்**
2022 (2023) O/L



# ஆன்மீகத்தின் விழிப்புணர்வு

ஆன்மீக உணர்வு இல்லாத ஒரு மனிதனுடைய சடலத்தைப் போன்றது. ஆன்மீகம் என்பது இறைவனுடைய தெய்வீகக் குணமான அன்பு, அமைதி, சந்தோஷம், ஞானம், பேரானந்தம், சக்தி, தூய்மை இவைகளே ஆகும். இதற்கு எதிர்மறையான குணம் காமம், கோபம்பேராசை பற்று அங்காரம். இந்தக் குணங்களில் எதை நாம் தெரிவு செய்வது எதை நாம் கற்றுக்கொள்வது இது நம்முடைய விருப்பமாகும்.

இந்தத் தெய்வீகக் குணத்திலும், எதிர் மறையான குணத்திலும் எதை நான் தெரிவு செய்கின்றேனோ? அதுவே எனது சுபாவமாகும். ஓர் அலரி விதையை விதைத்தால் அவ் அலரி விதையே எமக்கு விளைச்சல் ஆகும். அதே போல் மாவினுடைய விதையினை விதைத்தால் அதுவே எமக்கு இனிமையான கனியைக் கொடுக்கும். இதுவே எங்களுடைய தெரிவாகும். இதில் நான் எதைத் தெரிவு செய்வது.

அலரி விதையை விதைத்துவிட்டு இனிமையான மாங்கனியின் சுவைப்பை எதிர்பார்க்கின்றது. இவ் உலகம் இதுவே அவர்களின் சந்தோஷமும் துக்கமும் கொண்ட கர்மாவின் வாழ்க்கை என்பதை மக்கள் அறியாது உள்ளார்கள்.

சிவராத்திரி என்பதும் இருளில் கிடக்கும் மனிதனை வெளிச்சத்துக்குள் கொண்டு வருவதாகும். அதாவது அறியாமை என்னும் இருளில் இருந்து பகலுக்குக் கொடுவருவதாகம். பகல் என்பது ஞானம், அறிவு என்று பொருள்படும்.

இன்று இவ்வுலகில் மனிதர்கள் அனுபவிக்கும் துன்பத்திற்கும் எல்லாம் காரணம் அவர்கள் செய்த கர்மவினைப் பயனே. இதற்கும் இறைவனுக்கும் எந்தத் தொடர்வம் இல்லை பாவங்களை செய்துவிட்டு கங்கையில் நீராடுவதால் பாவத்தை அழிக்கமுடியாது. சரீரமே சுத்தப்படும் அன்றி பாவத்திற்குப் பொறுப்பான ஆத்மா சுத்தப்படாது.

இதனை அறியாமல் மனிதர்கள் ஞானம் எனும் நீரை மறந்து பௌதீக நீரில் மூழ்கி எழுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஞானக் கண்ணை திறந்தால் மட்டுமே தன்னை மாற்றிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் களிடம் இருந்து அன்பையும் மரியாதையையும் எதிர்பார்க்கும் நாம் அதையே மற்றவர்களும் எதிர் பார்ப்பார்கள் என்பதை மறந்து விடுகின்றோம்.

தற்காலத்தில் எல்லோருடைய வாழ்க்கையிலும் தேவைப்படுவது அன்பும் அமைதியும், சந்தோஷசமும் ஆகும். இதனை அடைவதற்காக பௌதீக வசதிகளைப் பயன்படுத்துகின்றோம். உதாரணமாக வீட்டில் பக்கத்தில் இருக்கும் உறவுகளோடு கதைப்பதற்குப் பதிலாக கடல் கடந்திருக்கு நண்பரோடு உரையாடுகின்றோம். ஆன்மீக அன்பை உறவுகளோடுன பகிர்ந்து கொள்ளாமல் அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களிடம் அன்பை எதிர்பார்ப்பது அவர்களுடைய தவறு என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

யார் அன்பாக, அமைதியாக, இராஜரீகமாக நடக்கின்றார்களோ அவர்களை நோக்கி நட்பு வட்டாரம் அதிகரிக்கும். யார் மற்றவர்களுக்கு மனம் நோகும்படி இழிவான செயல்களை செய்கின்றார்களோ அவர்களை விட்டு நல்பவர்கள் இயல்பாகவே தாமாகவே பிரிந்து விடுவார்கள். இதனைப் புரிந்து கொள்ளாமல் எனக்கு மற்றவர்கள் மரியாதை தருவதில்லை. என்னைக் கண்டு கொள்வதில்லை என்னை அலட்சியப் படுத்துகின்றார்கள் என்று நாம் மற்றவர்கள் மீது குறைகூறுவோம். என்னுடைய குறை எனக்குத் தெரிவதில்லை. "இனிப்பு இருக்கும் இடத்தை நோக்கித்தான் எறும்பு வரும்" என்பதைப் போல் எம்முடைய சுபாவத்திற்கு என்பதுதான் எம்முடைய உறவினர்களும் அமைவார்கள்.

ஒவ்வொருவரும் தாங்கள் செய்யும் பாவ புண்ணிய கர்மாவில் இருந்து விடுபட முடியாது. புண்ணியங்கள் செய்து ஆசீர்வாதங்களை உருவாக்குவோமானால் "தலையோடு போவது தலைப்பாவோடு போய்விடம்" என்பது போல் நாங்கள் பாதுகாக்கப்டுவோம். சாபங்கள் எமக்கு அதிகரித்தால் முள் குத்துவதற்குப் பதிலாக காலே போய்விடும். கொள்ளையடிப்பது மற்றும் கொலை செய்வது மட்டும் பாவமல்ல மற்றவர்களை இழிவாகப் பேசுவது, மட்டம்தட்டி கதைத்து சிரிப்பது, சின்னச் சின்ன பொய் சொல்வது. இதுகூட கர்ம தத்துவத்தில் பெரும் பாவமேயாகும். கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து விளக்கேற்றி எம்முடைய துன்பத்தை அழிக்கலாம் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். முதலில் மனக் கண்ணிற்கு விளக்கேற்றுங்கள் உங்களுடைய வீடும் ஒளியேற்றப்படும் சுற்றமும் ஒளியேற்றப்படும் சமூகமும் ஒளியேற்றப்படும்.

தனி மனித மாற்றமே உலக மாற்றமே என்பதைக் கருத்திற் கொண்டு நாம் ஒவ்வொருவரும் மாறுவோமானால் சொர்க்கத்தை எங்கும் தேடித் தேவையில்லை சொர்க்கம் நம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கும் என்பதை கருத்திற் கொள்வோம்.

இந்த உலக நாடக சக்கரத்தில் நாம் ஒவ்வொருவரும் நடிகர்கள் கதாநாயகப் பாகம் அனைவருக்கும் பிடிக்கும் வில்லன் பாகம் யாருக்கும் பிடிக்காது கதா நாயகன் என்பவன் எல்லோருடைய இதயத்திலும் இடம்பிடிக்கும் கருணை கொண்டவன், அன்பானவன், நர்மையானவன், நானும் ஒரு கதா நாயகனே. இந்த நாடகத்தில் நானும் இவ்வாறு மற்றவர்களின் இதயத்தில் இடம்பிடிக்க வேண்டும். நல்லவர்கள் உடலை விட்டாலும் மற்றவர்களின் உள்ளத்தில் வளர்ந்து கொண்டிருப்பார்கள். கெட்டவர்கள் புதைக்கப்பட்டவுடன் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்தும் புதைந்து விடும்.

நான் ஒரு விவேகானந்தராய் வாழ வேண்டும் என்றில்லை. அப்துல்கலாம் போல் வாழவேண்டு மென்றில்லை. அயலவர்களின் மனங்களில் வாழும் ஒருவகை என்றாலும் என்னை நான் நல்ல சிறப்பியல்வுகளோடும் தெய்வீக குணங்களோடும் சிறந்த சிற்பமாக செதுக்கிக் கொள்ள வேண்டும். சிற்பத்தை அனைவரும் இரசிப்பார்கள் சிற்பம் உளியால் தாக்கப்படும். ஆனால் அது இரசிக்கப்படும்.

அதேபோல், நாமும் கால காலத்திற்கு மற்றவர்களின் மனங்களில் வாழ வலிகளை சகித்துக் கொண்டு சிற்பமாக உருமாறுவோமாக.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகத்தில் ஆன்மாக்கள்


ஞானி ஒருவர் ஒரு மரத்தின் அடியில் வசித்து வந்தார். அவர் இருந்த வழியாக விறகு வெட்டி ஒருவன் அவரைக் கடந்து செல்வது வழக்கம்.

நான் முழுதும் மரங்களை வெட்டி அவற்றை விற்று அதன்மூலம் மனைவி மக்களைக் காப்பாற்றி வந்தான். சிரமமான வாழ்க்கை! இப்படி பல வருடங்கள்!

ஒரு நாள் அந்த ஞானி அவனை அழைத்து, "நான் சொல்கிறபடி கேட்பாயா?" என்று கேட்டார்.

தினமும் காலையில் வணங்கி விட்டும், மாலையில் திரும்பும்போது அவரை, வணங்கி விட்டே செல்வான்.

மரத்தை வெட்டுவதிலேயே உன் வாழ்க்கையை வீணாக்காதே! இன்னும் கொஞ்ச தூரம் காட்டில் முன்னேறிச் செல்! ஒரு செம்புச் சுரங்கத்தைக் காண்பாய். அதல் ஒரு நாள் மட்டும் வேலை செய்தால் போதும். ஏழு நாட்களுக்கு உன் குடும்பம் வசதியாக வாழலாம். இப் படியே ஒவ்வொரு தினமும் விறகு வெட்டிச் சம்பாதிக்கத் தேவையில்லை என்றார் ஞானி!



அந்த ஞானி சொல்வதில் விறக வெட்டிக்கு நம்பிக்கை வரவில்லை. இவர் இந்த மரத்தை விட்டு எங்கேயும் செல்லாமல் இப்படியே உட்கார்ந்தபடி இருப்பவர் இவருக்கு என்ன தெரியும்? என்று நினைத்தான்.

மறுபடியும்ஒரு சமயம்முயற்சிசெய்து தான் பார்க்கலாமே... என்று நினைத்தான்.

மறுநாள் வழக்கமான காட்டை விட்டு மேலும் சற்று தூரம் சென்றான் செம்புச் சுரங்கம் தென்பட்டது.

மிக்க மகிழ்ச்சி அடைந்தான். சுரங்கத்தில் இறங்கித் தேவையான செம்மை வெட்டி எடுத்துச் சென்று விற்றுப்பணம் சம்பாதித்தான். வசதியான வாழ்வு கிடைத்தது.

"நீ என்ன இன்னும் முட்டாளகவே இருக்கிறாய். இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல்! அங்கே ஒரு வெள்ளிச் சுரங்கத்தைக் காண்பாய். அங்கு வேலைசெய்தாலே போதும்! ஆறு மாதங்களுக்கு வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை என்றார் ஞானி!

விறகு வெட்டிக்கு மீண்டும் சந்தேகம்! முயற்சித்து பார்ப்போம்என்று மேலும் கொஞ்ச தூரம் சென்றான். வெள்ளிச் சுரங்கம் தென்பட்டது. வெள்ளியை வெட்டிச் சென்று விற்றான், மேலும் வசதிவாய்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப்புள்ள வாழ்க்கை கிடைத்தது. இனி ஆறு மாதம் கவலையில்லாமல் வாழலாம் என எண்ணி ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தி வந்தான்.

மீண்டும் ஒரு நாள் ஞானியிடம் வந்தான். இன்னும் முட்டாளாக இருக்கிறாயே.... இன்னும் முன்னேறிச் செல்! தங்கச் சுரங்கத்தைப் பார்க்கலாம் என்றார் ஞானி.

ஆசை யாரை விட்டது? ஞானி சொன்னபடி மேலும் முன்னேறிச் சென்றுத் தங்கச் சுரங்கத்தைக் கண்டான்.

இப்போது அவன் மிகப்பெரிய பணக்காரனாகி விட்டான். அனேக ஆண்டுகள் அந்தச் சுரங்கப் பக்கம் வரவேயில்லை. அப்படி வந்தபோது அவன் ஞானியை வணங்கிவில்லை.

இந்த ஞானி சுத்த முட்டாளாக இருக்கிறாரே தங்கச் சுரங்கம் இருப்பதை தெரிந்ததும் அந்த மரத்தடியிலேயே இன்னமும் உட்கார்ந்திருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டான்.

ஒருநாள் அந்த ஞானி அவனை அழைத்துச் சொன்னார் “நீ இதுவரை என்னை வந்து பார்க்க வில்லை. எனக்கு ஒரு வணக்கமும் செலுத்தவில்லை.

எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிறிது தூரம் நீ முன்னேறிச் சென்றால் வைரச்சுரங்கத்தைக் காணலாம். ஏன் தங்கத்தோடு மட்டுமே நீ உனது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றாய்? நீ வைரங்களையே கண்டு பிடிக்க முடியும்.

அவ்வாறே அவன் முன்னேறிச் சென்று வைரங்களைக் கண்டு பிடித்தான் அனேக ஆண்டுகள் அவன் ஞானியைச் சந்திக்க வரவேயில்லை.

ஒருநாள் அந்த ஞானி அவனுக்கு ஒரு செய்தி அனுப்பினார். சீக்கிரமாக வா! ஏனெனில் நான் மரணப்படுக்கையில் உள்ளேன். உன்னிடம் கடைசி ரகசியம் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

அவனால் நம்பவே முடியவில்லை. வைரங்களைவிட சிறந்தது எதுவாக இருக்கும்? அதுவே முடிவானது அல்லவா? மீண்டும் ஞானியிடம் வந்தான் என்ன விஷயம்? இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல்! என்று சொல்லப் போகிறீர்களா? என்று கேட்டான்.

ஆம்!... இன்னும் கொஞ்சம் முன்னேறி சென்றால் அள்ள அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷத்தைக் காண்பாய்! வைரச் சுரங்கம் சீக்கிரம் தீர்ந்து போகும் என்றார் ஞானி!

நான் இனிமேலும் உங்களை நம்பப் போவதில்லை. நான் முற்றிலும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அப்படியிருக்க நான் ஏன் இன்னமும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அங்கு அப்படிப்பட்ட பொக்கிஷம் இருக்குமானால் நீங்கள் ஏன் இன்னமும் இந்த மரத்தடியிலையே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? என்றான் அவன்.

அந்த அழிவற்ற பொக்கிஷம் எனக்குள்ளேயே இருக்கிறது. அதற்காகத்தான் நான் உன்னை அழைத்தேன்.

இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல்! என்பதை உனக்குச் சொல்லத்தான் நான் உன்னை அழைத்தேன்.

“நீ இன்னும் கொஞ்சம் முன்னேறி உன்னிலேயே சூழ்ந்தால் உன்னையே நீ அறிவாய்! அதுதான் உண்மையான பொக்கிஷம்!” என்றார் ஞானி.

ஞானி இறந்துவிட்டார் அனேக ஆண்டுக்குப் பிறகு மரணம் விறகு வெட்டியையும் நெருங்கிக் கொண்டிருந்தது.

அவன் இன்னும் கொஞ்சம் முன்னேறிச் சென்று ஒரு அழகான காட்டை அடைந்தான். அங்குள்ள மரத்தடியில் அமர விரும்பினான். கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று விருப்பும் அளவு அக்காடு மிக அமைதியாக இருந்தது.

அவனுக்குள்ளேயே அவன் மூழ்கி விடும் அளவுக்கு அங்கு அற்புதமான


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சாந்தமான அமைதியான சூழ்நிலை நிலவியது.

ஞானி கூறிய அந்த பொக்கிஷத்தை அவன் கண்டு கொண்டான்.

அவன் கண்டுகொண்டது அவனுக் குள்ளேயே....!

(ஓஷோ - ஈசாக உபநிஷத உரை - பக்கம் 159-162)

உள்ளே இருக்கும் பொக்கிஷத்தின் பெயர்...?

ஆன்மா! இதுநாள் வரை நீ என்னுள் இருப்பதை அறிந்து கொள்ளாமல் போனேனே என்று ஞானிகள் புலம்புகிறார்கள்.

எனக்குள்ளே நீ இருக்க
உனக்குள்ளே நான் இருக்க
மனக்கவலை தீர வரம்
அருள்வாய் பூரணமே!
நானே நீ! நீயே நான்!
நாமிரண்டும் ஒன்றானால்
தேனின் ருசியது போல்
தெவிட்டாய்! பூரணமே
என்கிறார் பட்டினத்தார். (பூரணமாலை-33)

உடலுக்குள் நீ நின்று
உலவினதைக் காணாமல்
கடல் மலை தோறும்
திரிந்து அலுத்தேன் பூரணமே
பட்டினத்தார். (பூரணமாலை - 31)

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பெர பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பிளில் கூடி அதுஒன் றாகுமாறு போல
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே!
என்பார் திருமூலர் (திருமந்திரம் 136)

கடல்நீரிலுள்ள உப்புத்தன்மையானது சூரிய வெப்பத்தால் உப்பெனப் பெயர் பெறுகிறது. உப்பு எனப்பட்ட அந்த உருவப் பொருள் மீண்டும் நீரில் சேர்ந்து அவ்வுருவம் கரைந்து நீராக மாறுவது போல சிவன் சிவத்துள் அடங்கியிருக்கும்.

நீரினில் உப்பு கலந்திருப்பது போல சீவனில் கலந்திருக்கும் என்கிறார் திருமூலர். உன் ஆன்மாவே கடவுள் என்கிறார். உனக்குள் ளேயே பெரிய பொக்கிஷம் இருக்கிறது என்று ஞானி விறகு வெட்டிக்கு உணர்த்தினார்.

இந்த உண்மையை நாம் ஏன் அறிந்து கொள்ள முடியவில்லை...?
விவேகானந்தர் சொல்கிறார்.

நாம் வீண் பேச்சினாலும் புலன் இன்பத்தில் மட்டுமே திருப்தி அடைவதாலும் ஆசைகளை பின் தொடர்ந்து ஓடுவதாலும், ஒரு பனிப்படலத்தைப் போல் உண்மையை மறந்து விடுகிறோம் என்பதே அதற்குப் பதில்.

நாம் அறியாமைக்குக் காரணம் நமக்கும் உண்மைக்கும் இடையே தோன்றிய ஒருவகையான திரையே!
அதை மாயத்திரை என்கிறார் விவேகானந்தர்.

"இயற்கையே ஒரு மாயை என்பதையும் அதை ஆட்டிப்படைப்பவன் பரம்பொருளே என்பதையும் அறிந்து கொள்!" என்று சுவேதாஸ் வதர உபநிடதம சொல்கிறது.

**M. Vithurshika (11D)**
**சக்தி மகளிர் இல்லம்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்பு



நட்பு என்பது உணர்ச்சி மேலீட்டினால் உருவாகும். ஒருவகை உறவு என்பது வள்ளுவனார் கழுத்து. அதாவது ஒத்த உணர்ச்சியையுடைய இருவரி டையே அன்பின் நிமித்தம் உருவாகும். உரிமையுறவுதான் நட்பு எனப்படும். எப்போமும் தம் இருவருக்கிடையில் வேறுபாடில்லாமல் தம்மால் இயலும் சந்தர்ப்பங்களி லெல்லாம் உதவிசெய்து ஒருவருக்கொருவர் தாங்கதல் நிலைதான் நட்பின் அரிய பண்பு! தோழமை எனப்படுவதும் அதுதான்.

ஒரு நண்பன் தீயவழியில் செல்கிறான் என அறியும்போது அவனுக்கு ஏற்றவேளையில் பொருத்தமான அறிவரை கூறி அவனை நல்வழிப்படுத்துபன் உண்மை நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் உலகில் உயர்ந் தோராகக் கணிக்கப்படுகின்றார்கள். தமிழில் வந்த இதிகாசமான மகாபாரதம், கர்ணன், துரியோதனனுக்கிடை யிலான அற்புதமான நட்பு இதுவே நட்பு எனும் உறவின் விசித்திரத்தை காண்பிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு என்கின்ற கிழமை உணர்வு பயில்தோறும் இன்பம் தரும் நல்ல நூல்கள் போன்றதாகும். அது மட்டுமல்ல இவற்றில் நல்லவைகளை அறிந்து கொள்ளலாம். எமக்காக பக்கதுணையாக இப்பவன் நண்பனோ அல்லது நண்பியோ ஆகலாம். ஆனால் அவனின் தேவைக்கு எம்மளை பயன்படுத்துவது. நட்பு அல்ல, நல்ல நட்பு எவ்வாறு இருக்கும் என்றால் எமக்கு ஒரு தீயவை நடந்து விட்டால். அதில் இருந்து நம்மலை நல்லதாக காப்பாற்றுவான். எமக்கு உண்மையானவனாகவும் இருப்பான்.

நட்பு எமக்கு ஒரு நிரந்தரம் இல்லாத ஒரு விடயம் ஆகும். ஏன் என்றால், நாம் எங்கு சென்றாலும் கிடைக்காது. எமக்கு அது குறுகிய காலத்தில் மட்டும் கிடைக்கும். பாடசாலையில், பல்கலைக்கழகங்களில், தொழில் இடங்களில் போன்றவற்றில் இருக்கலாம். இவ்வாறான இடங்களிலும் இருந்தாலும் கூட சில சிலருக்கு உண்மையாக இருக்கலாம். இருவருக்கிடையில் நட்பு என்பது வந்தால், அதில் பிரச்சினைக்குரிய சந்தேகம் இருக்கக் கூடாது. நாம் உண்மையான நம்பிக்கை வைத்து உயிராக இருக்கலாம். அது நம்ம அவர்களின் மீது வைக்கும் அன்பு. ஆனால் அவர் பொய்யாக எம்மலுடன் இருந்தால் அவர் இவ்வாறு அன்பு வைக்க மாட்டார்கள்.

நம்மலுடைய வாழ்வில் பிறக்கும் பொழுதோ அல்லது இறக்கும் பொழுதோ இந்த நட்பு எம்மலுடன் இல்லை. ஆனால் நாம் வாழும் அந்த நாட்களில் எவ்வாறு நம்மலோடு சேர்க்கின்றது. நமக்கில் நட்பு என்று தோன்றுகின்றது. நட்பு செய்தல் என்றால் அது ஒருவரோடு ஒருவர் சிரித்துப்பேசி மகிழும் தன்மை உடையதாக இருக்க வேண்டும். நட்பானது உள்ளுணர்வோடு கலந்த அன்புரிமையாகும்.

உண்மையான நண்பர்கள் யார் என்ற விடயத்தில் எமக்கு விழிப்புணர்வூட்ட பல சம்பவம் போதுமானது. நட்பாராய்தல் என்ற ஒரு அதிகாரத்தில் ஆராயாது ஒருவருடன் நட்புச் செய்தலை விடக் கெடுதலைத் தருவது வேறில்லை ஆகும். நல்ல நண்பரை பெறுவது என்பது கூட எமது புண்ணியம் ஆகும். வகுத்தும் தொகுத்தும் பார்க்கும்பொழுது நட்பானது ஒரு புனிதமான உறவு என்பது தெரிவரும். மாணவர்களாகிய நாம் படிக்கும் வேளைகளிலே நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வோம். நல்ல நண்பர்களை பெற்று கொண்டு நாட்டில் நல்ல பிரஜையாக வாழ்வோம். வளம் பெறும் சமுதாயத்தை உயர்த்துவோம்.

நன்றி.

**K. Pinolina**
11$^{Y}$ (2022) O/L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமும் பணிவும்


மனிதருக்கு இருக்க வேண்டிய பல குணங்களுள் அடக்கமுடைமை ஒன்றாகும். ஒரு சிலருக்கு கல்வி, கேள்வி, பொருள், பணம், பட்டம், பதவி போன்றன இருப்பினும் அவர்களிடம் அடக்கம் இல்லாதிருக்குமானால் அவர்கள் சிறப்படைய மாட்டார்கள். உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாததாகும்.

அடக்கமுடைமையாவது எமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் பிறரிடம் பணிவாக நடந்து கொள்ளும் பண்பாகும். மற்றவர்களிடம் அன்புகாட்டி பணிவாக நடந்து கொள்ளும் எம்மிடத்தில் அகம்பாவம் வராது. இந்த அரிய குணம் எம்மில் பலருக்கு அமைவதில்லை. அடக்கமானது நமக்கு ஒரு அரிய செல்வமாகும்.

இந்த உண்மையை எமது முன்னோர்கள் அவர்கள் வாழும் காலத்தில் எடுத்துரைக்கின்றார்கள். திருவள்ளுவர் அவரின் திருக்குறலான நூலில் "அடக்கமுடைமை" என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். எமது வயதை உயர்ந்தவரோ அல்லது பணிவானதோ சந்தர்ப்பத்தில் சினந்து, கடிந்து, வெட்டென பேசுவது அடக்கமுடைமை பண்பாகாது. அவ்வாறு பேசுவதன் மூலம் எதையும் சாதிக்கவும் முடியாது. இவ்வாறு பேசுவதையல்லாம் தவிர்க்க வேண்டும். "தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்டவடு" என்ற குறளானது அடக்கமிழந்து நாம் கூறும் வெஞ்சொற்களின் கொடூரம் பற்றிக் கூறுகிறது.

மனிதருக்கு இருக்க வேண்டிய விழுமியங்களிலெல்லாம் தலையாது எனக்கொள்ளத்தக்க அடக்கமுடைமையை நாம் நம் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் கடைபிடித்து ஒழுகினால் நம் வாழ்வு ஒளிரும் இனிமை பெறும் என்பதில் ஐயமேதும்

K. Pinolina
11Y (2022) O/L





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


இல்லை. அடக்கமும் பணிவும் என்று எம் வாழ்வுக்கு விருத்தியையே தழும்.

பணிவாக - அடக்கமாக நாம் நடப்பதால் எமக்கு எந்த வேளையிலும் இழிவு வராது. மாறாக நமது பெருமையை உயர்வை நாகரீகத்தை அது புலப்படுத்துவதாய் அமையும் என்பதை நம்ம வேண்டும். அதுமட்டுமல்ல தண்ணீரைக் கிணற்றலிருந்து வெளிக்கொண்டு வருவதற்குத் துலா கிணற்றுள் பணிந்து செல்வதை பார்க்கிறோம். அதுபோல நாமும் கற்றோரையும் பயனுள்ளோரையும் பணிந்து நடக்கும் போது அவர்களிடத்தே தேங்கிக் கிடக்கும் நற்பண்புகளையும், அறிவுப் பொக்கிஷங்களையும் பெற்றக்கொள்ளலாம்.

“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உயத்து விடும்” என்று பொய்யா மொழிப்புலவர் உபதேசிக்கிறார். அடக்கமானது ஒருவனுக்கு சகல பேறுகளும் கிடைக்கும் மகிழ்ச்சி நிறைந்த தேவருலக வாழ்வைத் தரும் என்று கூறும் அவர். அடக்கமின்மையானது எம் வாழ்வை இருளடையச் செய்யக்கூடியது என்று எச்சரிக்கின்றார். எமது பேச்சிலே முக்கியமாக அடக்கம் இருத்தல் வேண்டும். எமது வயதிற்கு மூத்தவர்களிடம் அடக்கமாகவும், பணிவாகவும் இருத்தல் வேண்டும்.

நம் வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை நம் மாணப்பருவத்திலேயே அறிந்து கடைப்பிடித்து வர நாம் பயிலுதல் அவசியம். எமக்கு வேண்டிய பெரியவர்களை சந்திக்கச் செல்லுமிடத்தில் பணிவாக நடத்தல் வேண்டும். மாணவர்களாகிய நாங்கள் நல்ல பழக்கவழக்கங்களை கடைப்பிடித்து நாட்டில் நற்பிரஜையாக வருவோம்.

நன்றி.



# வறுமை

*வன் முறை ஒழிந்து - பல*
*ஆண்டு நாளாகியும்*
*வறுமை ஒழியவில்லை*
*நம் மண்ணில்*


*காலையிலே துயில் எழுந்து*
*கை தனிலே களை எடுத்து*
*வயல் வளர்க்கச் - சென்றிடுவர்*

*தொட்டிலிலே கைக் குழந்தை*
*தூங்கு தந்த மர நிழலில்*
*கட்டறுத்த காளை போல*
*களை பிடுங்கம்*
*பெண்களெங்கே*

*முப்பது நாள் உழைத்து வந்தும்*
*மூன்று நாளில் முடித்து விட்டு*
*மீதி நாளை பட்டினியால்*
*முடித்து விடும்*
*குடும்பமெல்லாம்*

*நிம்மதியாய் சோறு உண்ணும்*
*நல் நாள்தான் எப்போதோ*

**த. ஜனுஷியா – 11K**
**சக்தி மகளிர் இல்லம்.**



# தாய்மை பொருளாதாரம்

தற்போது உள்ள பொருளாதாரம் வேற மாதிரியாகவுள்ளது. தனக்குரியதாக வாழ்கிறது ஒரு வாழ்க்கை. தானும் வாழ்ந்து பிறரும் வாழனும் என்கிறது. மற்றுமொரு வாழ்க்கை பிறருக்காகவே வாழனும் என்கிறது இன்னும் ஒரு வாழ்க்கை.

இந்த பிறருக்காகவே வாழனும் என்கிறதுதான் பெருமளவிலே சொல்லப் படுகின்றது. பிறருக்காகவே வாழ்கிறது. அது உயர்வான உன்னதமான வாழ்க்கை. அதைத் தான் தர்மங்கள் சொல்கிறது. பிறருக்காக வாழ வேண்டும் என்று அறம் சொல்கிறது. இருப் பினும் நீங்களும் வாழுங்கள் பிறரையும் வாழ விடுங்கள் என்று பெரியோர்கள் செல்கிறார்கள். இதனைத்தான் தாய்மைப் பொருளாதாரம் என்று சொல்கிறார்கள்.

ஒரு தாய் எப்படி தன் குழந்தைக்கு கிடைப்பதை பகிர்ந்து கொடுத்து தானும் மகிழ்ந்து குழந்தையையும் மகிழ்விக்கின்றாளோ அதைப் போன்ற பொருளாதார அமைப்பு இயற்கையான பொருளாதார அமைப்பாகும்.

மரத்திலே பழம் பழுத்து இருக்கின்றது. குருவி ஒன்றிற்கு பசிக்கிறது. அந்தப்பறவை அங்கே சென்று மரத்தில் இருக்கின்ற பழத்தை சாப்பிடுகின்றது. அதற்க பிறகு எங்கேயோ பறந்து போகிறது. அந்தப் பறவை சாப்பிட்ட வற்றை எச்சமிடுகிறது. பின் வதை கீழே விழுகிறது. மறுபடியும் மரமாக முளைக்கின்றது. அப்போ அந்த மரத்தினுடைய தேவையும் பூர்த்தியடைந்து போகிறது. பறவையின் தேவையும் பூர்த்தியடைகிறது.

"இயற்கையே ஒன்றுக்கு ஒன்று விட்டுக்
கொடுத்து, வாழக்கூடிய
வழிமுறை அதுதான் உன்னதமான வழி"

- M. Rupa
சக்தி மகளிர் இல்லம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகைத்தலால் விளையும் கேடு

**போ**தையை ஊட்டும் வஸ்துக்களால் மனிதனின் உடலுக்கு மட்டுமல்ல சமுதாயத்துக்கும் அச்சுறுத்தலிருப்பதை நாம் அறிவோம். போதை வஸ்துக்கள் தனி மனித வாழ்வுக்கும், உலக ஆரோக்கிய வளர்ச்சிக்கும் கேடுவிளைவிப்பன. இந்த அடிப்படையில் புகைத்தல் பழக்கமும், நவீன உலகில் பெரும் அச்சுறுத்தலாக இருப்பது அறியப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியுள்ள இன்றைய வேளையில் இளைய தலை முறையினர் புகைத்தலை ஒரு நவநாகரிக நடவடிக்கையாக உணர்வது வியக்கத்தக்கதாகும். "இளங்கன்று பயமறியாது" என்பதற்கிணங்க இன்றைய இளைஞர் சமுதாயம் இப்புகைத்தற் பழக்கத்தால் தம் ஆரோக்கிய வாழ்வைக் கொடுத்துக் கொள்வதுடன் சமுதாயத்துக்கும் கேடுவிளைவிக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது ஆயிரத்து நூறுமில்லியன் மக்கள் இப்புகைத்தற் பழக்கத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அதே வேளையில் வருடாந்தம் முப்பத்தைந்து லட்சம் பேர் இக்கொடிய பழக்கத்தினால் சேரப் பெற்ற நோய்களினால் இறந்து விடுகின்றனர் என்றும் அறிகிறோம். இப்போக்கானது கவனிக்கப்படாது விடப்படுமானால், வருடாந்தம் இந்த எண்ணிக்கை மூன்று மடங்காகும் சாத்திய மேற்படுமென்றும் அவ்வறிக்கை மேலும் எச்சரிக்கின்றது. புகைத்தலினால் மனிதல், ஒருவகைப் போதை உணர்வைப் பெறுகிறான். அது அவனிடத்து தற்காலிக இன்பத்தையும், புதிய கிளர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது என்பதை மட்டும் நாமறிவோம். ஆனால், இப்பழக்கமானது படிப்படியாக தன் ஆதிக்கத்தை மனித உடலில் செலுத்தத் தொடங்கும் போது அவன் பல்வேறு கொடிய நோய்களுக்கும் ஆளாகுகிறான். சிலர் உல்லாசமான வாழ்க்கைக்கு சிகரட் அவசியம் என்ற கருத்தைக் கூட திணிக்க முயல்கின்றனர். கூடுதலான வரியை அரசிற்கு தேடித்தரும். ஒன்றாக சிகரட்டும் மற்றும் புகைத்தல் மூலம் இன்பம் தரும் பொருள்களும் விளங்குவதால் இந்நிலை மறைமுகமாக ஊக்குவிக்கப்படுகிறது எனக் கூறலாம். இந்த வகையில் பார்க்கும் போதுன இலங்கையிலும் அரசின் சில நிபந்தனைகள், விதிமுறைகளின் காரணத்தால் இளவயதிகளிடையே மட்டுமல்ல, பெரியவர்கள் மட்டத்திலும் புகைத்தற் பழக்கம் குறைவடைந்து வருவதை இப்போது காண்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, கொடிய நோய்களை மாத்திரமல்ல, பல அகால மரணங்களுக்கும் இப்புகைத்தலே காரணமென்ற உண்மை புலப்பட்டுள்ளது. இவ்வாறிருந்தும் இன்றைய உலகிலே பல நாடுகளில் உள்ள புகையிலைக் கம்பனிகள் தங்களது பலவகையான சிகரட்டுக்களை, பல கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன என்பதையும் நாம் அறிவோம். புகைத்தலினால் நுரையீரல் புற்றுநோய், மார்புப் புற்றுநோய், மாரடைப்பு (யுபெயெ) உயர்குருதிய மத்தம் என்புருக்கி நோய், பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இன்னும் உயிருக்கும் உடலை வைக்கக்கூடிய பல வருத்தங்கள் உடலில் தோற்றுகின்றன.

சிகரட் புகையிலையில், உள்ள இனங்காணப்பட்ட பல்வேறு இரசாயனப் பதார்த்தங்களுள் அதிகமானவை நச்சுத்தன்மை வாய்ந்தலையாக இருக்கின்றன. இதுவே மனிதனுடைய உடலில் புற்றுநோய்கள், பரம்பரை அலகுவிகாரங்கள் தோற்றக் காரணமாயிருக்கின்றன. சிகரட் புகையிலையினால் உண்டாகம். புகையில், அறுபது வீதம் வாயுக்களும், சுவாச நொதியங்களை அழிக்கும் நச்சுப் பொருளான ஐதரசன் சயனைட்டு வாயுவும் காணப்படுகிறது. அதிக புகைத்தல் வாய், தொண்டை, களம் சதையி, சிறுநீர்ப்பை போன்ற உறுப்புகளிலும் நோயை ஏற்படுத்துகிறது.

புகைத்தலானது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் குறைந்துவரும் அதேவேளையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது என்பது கவனிக்கத்தக்க விடயமாகும். சிகரெட் என்றவுடன் எங்களெல்லோருக்கும் நினைவு வருவது "தூய நிக்கட்டீன்" என்ற கடுமையான நஞ்சு ஆகும். மிகவிரைவாக மூளையையும், தசையிலுள்ள இழையங்களையும் பாதிப்படையச் செய்வதில் நிக்கட்டீன் பங்கே பெரியது. இந்நஞ்சுப் பதார்த்தமானது இதயத் துடிப்பு வேகத்தை மாற்றமடையச் செய்வது. அத்தோடு தோல் வெப்பநிலை மாற்றமடைதல் குருதியமுக்கம் அதிகரித்தல் போன்ற பல நோய்களுக்கும் காரணமாகிறது. ஆட்கொல்லி நோயான நுரையீரல் புற்ற நோய்க்கு, புகைத்தற் பழக்கமே காரணமாக அமைகிறது என்பதை கவனித்தல் வைத்திருக்க வேண்டும்.

மேற்கத்திய நாடுகளில் பெண்களும் அதிகமாகப் புகைப்பிடிக்கும் பழக்கமுடையவர்களாயிருக்கின்றனர். எனவே அந் நாடுகளில் கருச்சிதைவு குறைமாதப் பிறப்புக்கள், இறந்து பிறக்கும் பிள்ளைகள் போன்றவை அதிகரித்துக் காணப்படுகின்றன. இன்னுமொரு விடயம், புகைத்தலானது புகைப்பவரை மட்டுமன்றி அருகிலுள்ளோரையும் பாதிக்கிறது. சூழலையும் மாற்றமடையச் செய்து கேடு விளைவிக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும். நமது தாய்நாடாகிய இலங்கையில் மதுபோதை தரும் பொருள் விற்பனையை விடை, புகைத்தல் பாவனைக்குரிய பொருள்களின் விற்பனையில் பாரிய பின்னடைவு நிலவுவதையும் நாம் இப்போது அவதானிக்க முடிகிறது. இளைய வயதினருக்கு புகைத்தல் பழக்கத்தைத் தூண்டும் சிகரட், சுருட்டு, பீடி போன்றவற்றை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகத் தண்டனைகள் வழங்கப்படுவதுடன், பொது இடங்களில் எவருமே சிகரட், பீடி, சுருட்டு போன்ற பொருட்களை உபயோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விதிகளை மீறுவோருக்கு அரசு கடும் தண்டனையும் வழங்கி வருவது நல்ல சகுனமாகும்.

எனவே, கொடிய பழக்கவழக்கமான புகைத்தலிருந்து அனைத்து மக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்பட வேண்டும். முக்கியமாக, வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தையும், குறிப்பாக கல்வி கற்கும் பாடசாலை மாணவர் சமுதாயத்தையும் நல்ல வகையில் வழிப்படுத்த வேண்டும். விழிப்புணர்பூட்டும் நடவடிக்கை களை ஆசிரியர்களும், சுகாதாரத் துறையினரும் மாத்திரமல்ல. சமுதாய நலன்விரும்பும் அனைத்து தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும்.

புகைத்தலுக்காக மக்கள் தம் வரு மானத்தில் பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து, தம் செல்வத்தை அழப்பதுடன் தம் ஆரோக்கியத்துக்கும் கேடுவிளைவித்துக் கொள்ளும் துர்ப்பாக்கியம் துரத்தியடிக்கப்பட வேண்டும். புகைத்தலைத் தடுக்க உதவும் மருந்துகளைப் புகைப்பவர்களிடையே விற்பனை செய்வதன் மூலம் இக்கொடிய பழக்கத்திலிருந்து விடுபடலாம். போதை தரும் புகைத்தலை நவநாகரிகமெனக்கருதி, பணத்தையும் கரியாக்கி, உடலாரோக்கியத் துக்கும்தாமே கேடுதேடும் இளைஞர்களுக்கும், மற்றவர்க்கும் புகைத்தலினால் உண்டாகும் பாதக விளைவுகள் பற்றிய அறிவு மிக அவசியம் என்பதை மறுப்பார் இருக்க முடியாது. புகைத்தலால் உண்டாகும் கேடு பற்றி சிகரட் ஒன்றை.

எனவே புகைத்தல் பழக்கத்தை முற்றாகவே கைவிடுவதன் மூலம் மிகப்பாரிய முன்னேற்றத்தை நாமும் எமது நாடும் உடனடியாகவே கண்டுகொள்ள முடியும் என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

**- த. ஜனுஷியா - 11K**




*இரண்டாயிரத்து பன்னிரண்டு தனில்*
*இரு விழிகள் ததும்ப*
*அரவணைத்த அன்னையை விலக்கி*
*ஆசிரியர் பாதம் தொட்டேன்*

*வண்ணத்துப் பூச்சிகளாய்*
*வர்ண ஜாலத்து நண்பர்கள்*
*வாரி அள்ளி இறைத்தனர்*
*வளம் கொடுக்கும் நட்புக்களை*
*வருடங்கள் கழிந்தன ஞாதுரு வளர்ந்தது*

*கால நீரோடையில் - பட்டிருப்பு*
*மத்திய மகா வித்தியாலயத்தில்*
*பதின் ஓராம் தரத்தை*
*பண்போடு எட்டினோம்*
*போற்றும் இலட்சியப் பயணத்திற்காக*

*பாடித் திரிந்த பறவைகள் நாம்*
*பிரியும் வேளை தனில்*
*பிரியாத கேண்மைகளையும்*
*இணைந்த இனிய நினைவுகளையும்*
*இதயத் தாமரையில் எடுத்துச் செல்கிறோம்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



– ப. பிரணவன்
11D

# நட்பு

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

"நட்பு" இந் நட்பு எனும் மூன்றெழுத்து இவ்வுலகத்தினை இறுகக்கட்டி தன்வசப்படுத்தி வைத்துள்ளது. உலகமெங்கும் வியாபித்து விஷ்வரூபம் எடுத்திருப்பது இந்நட்பு. நட்புக்கும் இல்லை இவ்வலகில் இல்லை.

உண்மையான நட்பானது ஒருவன் அணிந்துள்ள உடையானது தன் உடலை விட்டு நழுவுகையில் அவன் கை உடனே உதவிக் காப்பது போலானது இதுவே மேலுள்ள குறளில் பொதிந்துள்ள புதையல் நட்பிலும் அருமையானது எது? நட்பையும் ஆராய்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நட்புடையவருக்கு அதிலிருந்து மீட்சி கிடையாது. எனவே நாம் உயர் குடியில் பிறந்து தன்னிடம் வரும் பழக்கு நாணுகின்றவை. நாடி ஒன்றைக் கொடுத்தாவது நட்புக் கொள்ள வேண்டும்.

பிறையானது வளர்ந்து, பூரணமாகி, தூய்மையாய் வடிவாகி ஒளிவீசும் தன்மையானது நல்லவர் நட்பு. இது கரும்பின் நுனியிலிருந்து அடிநோக்கி செல்லுவதனை ஒத்தது. எனவே பௌர்ணமி நிலவானது தேய்ந்து சிறிதாக நிர்மலமான இருட்டு வானை ஒத்த தன்மையான நட்பை நாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். நட்பானது முகத்தினை மட்டுமன்றி நெஞ்சகத்தையும் மலரச் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பானது தன்னலமறியாதது, தவறுகளுக்கு இடங்கொடுக்காதது உண்மையான நட்பானது உயர்ந்த சிகரம் போன்று அசைக்க முடியாது நிலைத்திருப்பது கேடில் ஒருவகை நன்மை உண்டு யாதெனில் கேடு ஏற்படுகையில் தன் நண்பரின் இயல்புகளை வெளிக்காட்டி அளந்து பார்ப்பதற்கான நல்லதொரு சந்தர்ப்பமாய் அளவுகோலாய் அமைகின்றது.

நட்பிலும் இருவகையுண்டு என்கிறது நாலடியார். ஒன்று யானை போன்ற வருடனான நட்பு. மற்றையது நாய் போன்ற வருடனான நட்பு. விளக்கம் இதுவே, யானையானது தன்னை அறிந்தறிந்து பழகிய பாகனை கொல்லு மளவிற்கு நன்றியுணர்வற்றது. எவ்வளவோ நன்மை செய்தும் செய்த சிறு தீமையை பாராட்டி தீங்கு செய்வது. நாயானது நன்றி உணர்வுடன் நன்மைகளைப் பாராட்டி செய்த தீமைகளைப் பொருட்படுத்தாது தீனியிட்டவர் மீது விசுவாசத்துடனிருக்கும். ஆகவே நாய் போன்றவர் நட்பையே நாம் நாடுவோம் நலன் பெறுவோம்.

நட்புக்கு மிகச் சிறந்த உதாரணம் ஒன்று தன்மேல் நட்புப் பாராட்டிய துரியோதனனுக்குக்காகத் தன் சகோதரர்களான பஞ்ச பாண்டவரையே எதிர்த்தான் செஞ்சோற்றுக்கடன் தீர்த்தான் கர்ணன்.

தன் நண்பன் நெறி கடந்து செல்கையில் முற்றிடப்பட்டு சென்று அவன் தன் பிழை எண்ணி வருந்தும் படியாகச் செய்வதே நட்பு. ஒரு நன் நூலானது சிறந்த நண்பனாகக் கருதப்படும். அந்நூலை மேலும் கற்கக் கற்க இன்பம் உண்டாகம். இத்தன்மையானது மெய் நட்பு. அழிவை தரும் தீமைகளினின்றும் நீங்கி நன்னெறியில் ஒழுக வைத்து அழிவு அந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுத்தலும் எப்போதும் வேறுபாடின்றி முடியும் போதெல் லாம் உதவி தாங்கும் நிலையே நட்பின் இலட்சினைகளாகும். எனவே நன் நட்பை நாடி நலம் பலபெற்று நானிலம் சிறக்க நட்பெனும் மூன்றெழுத்தை பூமியில் நிலை நிறுத்துவோமாக...

**– ப. பிரணவன் (11D)**

| | | |
|---|---|---|
| அம்மா | - | இயற்கை எமக்களித்த கற்பகத்தரு |
| கடிகாரம் | - | காலம் என்னைத் துரத்துகிறது. நீயும் காலத்தைத் துரத்துகிறாய். யாரை யார் பிடிப்பது என்பதுதான் இவ்வட்டத்துக்குள் போட்டி |
| தோல்வி | - | விழுந்த தழும்புகளை மறைக்கும் புதிய நாகரிகச் சொல் |
| பெண் | - | சிற்பியான இறைவன் படைத்துவிட்டு வியந்து பார்க்கும் சிலை |
| நம்பிக்கை | - | நாளைய உலகை உனதாக்கும் புதிய ஒரு ஆயுதம் |
| விருட்சம் | - | ஊர் வெயிலை தன் தலையில் தாங்கி இயற்கை தந்த பெரிய குடை |
| திருமணம் | - | கழுத்தில் தாலி என்றால் மீதி என்ன? காலில் சுற்றி வேலி தான். |
| குழந்தை | - | புன்னகையில் கதை பேசத் தெரிந்த ஒரு மலர்ப் பருவம் |
| புன்னகை | - | ஒவ்வொரு மனங்களும் திறந்து பேசும் தேசிய மௌன மொழி |
| நண்பன் | - | இருந்தால் நிழல் பிரிந்தால் உயிர் |
| காதல் | - | அன்பு என்ற போர்வையில் ஒருவரை ஒருவர் விற்கும் தன்னியல்பான நாகரிக வியாபாரம் |

# நீங்களுமா? என் அகராதியில்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ப. பிரணவன் (11D)

# சதுரங்கத்தின் வரலாறு



சதுரங்கம் (Chess) 1500 ஆண்டுகள் வரலாற்றை கொண்ட விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்தியாவில் விளையாடப்பட்டு வந்த வல்லாட்டம், சதுரங்கம் போன்ற விளையாட்டிலிருந்து வளர்ச்சி பெற்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. இங்கிருந்து மேற்கே ஐரோப்பாவுக்கும், கிழக்கே கொரியா வரையும் பல வேறுபாடுகளுடன் பரவியது அங்கே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளையாடப்பட்டதாக தெரிகிறது. இந்தியாவிலிருந்து பாரசீகத்திற்கு பரவிய இவ்விளையாட்டு பாரசீகத்தை இஸ்லாமியர்கள் கைபற்றிய பின்னர் இஸ்லாமிய நாடுகள் பலவற்றிலும் பரவியது.

முஸ்லிம்களால் பத்தாம் நூற்றாண்டு அளவில் இது ஸ்பெயினில் அறிமுகம் செய்யப்பட்டது. 13ம் நூற்றாண்டில் காஸ்ட்டில்லின் அல்போன்சா Xஇன் ஆதரவில் செஸ், பாக்கம்மொன், டைஸ் என்றும் விளையாட்டுக்கள் தொடர்பான நூலொன்று எழுதப்பட்டது. 11ம் நூற்றாண்டில் செஸ் இந்தியாவை எட்டியது. அங்கே அது கூரியர் முதலிய வேறு பட்ட வடிவங்களாக உருவெடுத்தது. இந்த விளையாட்டை இருவர் ஆடலாம். ஒவ்வொருவருக்கும் 16 காய்கள் உண்டு (King, Queen, Rook, Bishop, Knight, Pawn) என்பவை ஒருவர் கறுப்பு நிறக்காய்களையும் மற்றையவர் வெள்ளை நிறக்காய்களையும் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் 16 காய்கள் உண்டு.

| பெயர் | ராஜா | ராணி | யானை | மந்திரி | குதிரை | வீரன் |
|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 1 | 1 | 2 | 2 | 2 | 8 |
| குறியீடு | ♔ ♚ | ♕ ♛ | ♗ ♝ | ♘ ♞ | ♖ ♜ | ♙ ♟ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ம் நூற்றாண்டின் இறுதியில் செஸ் காய்களின் பயன்பாட்டுக்கு வந்தன. "போன்"கள் (வீரர்) முதல் நகர்த்தியின் போது இரண்டு கட்டங்கள் முன் நகரலாம் என்ற விதி ஏற்பட்டது. "பிஷப்" திறந்த கட்டங்களின் மூலம் விட்டம் வழியாக எவ்வளவு தூரமும் செல்லலாம் என்ற விதியும் புழக்கத்திற்கு வந்தது.

முன்னர் இவை மூலை விட்டம் வழியாக ஒரு கட்டம் மட்டுமே நகரலாம் என "இராணிக்கு" இருந்த சக்தி கூடப்பட்டு திறந்த கட்டங்களினூடாக எத்திசையிலும் எவ்வளவு தூரமும் நகரலாம் என அனுமதிக்கப்பட்டு இராணி மிக சக்திவாய்ந்த காயாக மாற்றப்பட்டது.

மேற்படி மாற்றங்கள் செஸ்ஸை கூடுதலாக பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகுத்ததின் மூலம், பல ஈடுபாடுள்ள செஸ் ஆர்வலர்களை உருவாக்கியது. அக்காலம் தொட்டு ஐரோப்பாவில் செஸ் அதிகம் மாற்றமில்லாது இன்று விளையாடப்படுவது போலவே இருந்து வருகிறது. சமநிலைக்கான நிபந்தனைகள் தவிர்ந்த ஏனைய, தற்போது புழக்கத்திலுள்ள வரைமுறைகள் யாவும் 19ம் நூற்றாண்டு ஆரம்பத்தில்ல முடிவு செய்யப்பட்டன.

# HOW DANCING CAN IMPROVE YOU

**A. Pugaliny - 11[P]**

There are may reasons why dance can be great for your mental health. Dance can also be a fun way to express yourself. It can help you feel more confident and comfortable in your own skin, when you are feeling down, dancing can help you feel happier and more positive. It can also help to improve your overall mood. Dancing is a great way to socialize and meet new people. Spending time with others can help reduce stress levels and promote positive emotions.



When you dance, you are releasing endorphins and other positive hormones into your system. This can help to reduce stress and anxiety levels. Dancing can be a great way to boost your mood. It is a fund and social activity that can make you feel happier and more positive. Dancing is a great form of exercise and can help to improve your overall cardiovascular health. And Dancing can help to reduce pain and stiffness in the body. It is a great form of exercise. Dance can be a great way to relax and unwind after a long day. It can help to improve your sleep quality and make you feel more rested.

Dancing is a universal language. Dance allows us to unite our body, mind, and spirit, improving connection and strengthening self-esteem. A study conducted by M.Joe Verghese demonstrated that dance favors neural synapses, slowing the loss of volume in the hippocampus that happens naturally as a part of aging. It helps protect the brain in the long run. This scientist also found is his other studies that it stimulates the central nervous system and brain activity.

"The truest expressions of a people are in its dance and in its music. Bodies never lie." - ***Agnes de mille***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Importance of Learning ENGLISH LANGUAGE

What is a language for? Language is medium for communication English is the most widely used Language in the world. It is used by two third of the world population. English is important not only as an international language but also as a language of trade, as alink language, as a language of mass, communication, as a second language, as a language of everyday life and as means of obtaining foreign employment.

English language plays a vital role in Sri Lanka, as a ling language. It promotes good relationship among the communities. If we know English well we can exchange our ideas with ethnic groups easily. As the world is highly advanced in Science and Teahnology, English is a must, all most all the books are written in English language. So by knowing English we can read and understand the facts and we too follow the higher studies easily.


Now we use the modern methods of communication such as Telex, Fax, E-mail and internet. So English is the main language that is used in al these media. As far as I am concern there is a language today that is full, rich, universal and helps every one in some ways or others. "It is certainly English"

- Miss. R. Dinah - 11K *(2022 O/L Batch)*

# ஆலயம்

எங்குமுள்ள இறைவனை நாம் மனமொன்றி இலகுவாக வழிபடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா லயப்படும் இடம் என்பதே. உயிர்கள் ஆகிய நாமே ஆன்மா எனச் சொல்லப்படுகிறோம். லயப்படுதல் என்றால் வேறு நினைவு இல்லாமல் இறைவனையே மனத்தை ஒருங்கு குவித்து வழிப்படுதல் ஆகும்.

ஆலயத்தில் பெரிய மண்டபங்கள் பல அமைந்திருக்கும். எல்லோரும் கூடி வழிபாடு செய்வதற்கு அவை உதவுகின்றன. உயர்ந்த கோபுரங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலிய. நமது மனதைக் கவரும். மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.



ஆலயத்தில் ஒலிக்கின்ற மந்திர ஒலிகளும் திருமுறைப் பாடல்களும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. அவற்றோடு அங்கே ஒலிக்கின்ற மணி, ஒலி மேளம், நாதஸ்வரம் முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலி, சாம்பிராணி வாசணை முதலியன நமது உள்ளத்தில் பக்தி உணர்வினை எழும்புகின்றன.

ஆலயம் எனும் சொல்லிற்கு ஒத்ததாகவும் ஒரு சொல் காணப்படுகிறது. அது கோவில் ஆகும். கோ என்பது கடவுள் இல் என்பது இருப்பிடம் எனவே கடவுளின் இருப்பிடம் கோவிலாகும்.

- Miss. E. Poorjitha - 11K *(2022 O/L Batch)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முது மொழிக் காஞ்சி

முது மொழி என்பது பழமொழி என்னும் சொற்பொருளோடு தொடர்புடையது. காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் ஒரு வகை அணிகலக் கோவையையும் குறிக்கும்.

பல மணிகள் கோர்த்த காஞ்சி அணி போல முது மொழிகள் பல கோர்த்த நூல் முது மொழிக் காஞ்சி எனப் பெயர் பெற்றது எனச் சிலர் கூறுவர்.

இந் நூலை இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார். இந்நூல் பத்துப் பத்துக்களும், ஒவ்வொரு பத்திலும் பத்து முது மொழிகளும் உள்ளன. ஒவ்வொரு செய்யுளின் முதல் அடியும் "ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்" என்றும் தொடங்குவதால் இந்நூல் நூறு குறள் வெண் செந்துரையாலானது எனலாம்.

முது மொழிக் காஞ்சி பத்து முது மொழிகளும் ஆவன,


1. சிறந்த பத்து
2. அறிவுப் பத்து
3. பழியாப் பத்து
4. துவ்வாப் பத்து
5. அல்ல பத்து
6. இல்லைப் பத்து
7. பொய்ப் பத்து
8. எளிய பத்து
9. நல்கூர்ந்த பத்து
10. தண்டாப் பத்து

நூறதாம் சிறுபஞ்ச மூலம் நூறு
சேர் முதுமொழிக் காஞ்சி

எனவரும் பிரபந்த தீபிகைக் குறிப்பதனால் முதுமொழிக்காஞ்சி நூறு எண்ணிக்கை உடையதாகக் கருதப் பெறுதலும் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒழுக்கமே உயர்வைத் தரும்

– சி. ஏஞ்சலா ஜெயசாதனா (11[K])

"ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என வான் மறை தந்த வள்ளுவர் பெருந்தகை கூறிச் சென்றார். ஒழுக்கம் மனித வாழ்வில் உயர்வுக்கு காரணம் அது உயிரை விட மேலானது. ஒழுக்கம் இல்லா கல்வியும் விளைச்சலைத் தராது வீண் போகும் என சான்றோர் கூறிச் சென்றுள்ளனர். கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம். மனிதர்கள் ஒழுக்க சீலராகவே வாழ வேண்டும். இதையெ உயர்ந்தோர். எமக்கு ஆழமாக சொல்லிச் சென்றனர்.

ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனான ஆபிரகாம் லிங்கன் புகழ் வாய்ந்த கல்வியில், செல்வத்தில், இராணுவ மயத்தில் உலகில் உயர்ந்து நின்றுகொண்டு இருக்கும் அமெரிக்காவின் ஜனாதிபதியாகக் காரணம் அவர் ஒரு ஒழுக்க சீலராய் இருந்ததே ஆகும்.

அதே போல தமிழகத்தை ஒரே கொடியில் இணைத்த திரு.சி. என். அண்ணாத்துரையின் ஒழுக்க நடவடிக்கையே அவரது தாரக மந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடே ஆகும்.

சுய ஒழுக்கத்தோடு முன்னேறியவர்கள் ஏராளமானவர்கள் பத்திரிகை போட்ட சிறுவன் பின்னால் விஞ்ஞானியானது போன்று பலரது ஒழுக்க வாழ்வே அவர்களது உயர்விற்கு காரணம்.


"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்"

நன்றிக்கு வித்து நல்லொழுக்கம் ஆனால் தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும். நல்லொழுக்கம் மனிதனை பெரிய இடத்துக்கு கொண்டு செல்லும் ஆனால் தீயொழுக்கம் நடப்பவர்கள் முன்னேறாது துன்பங்கள் அனுபவிப்பர்.

ஆகவே நாமும் தீயவழியில் செல்லாது நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நல்வழியையும் நல்லொழுக்கத்தையும் கூறி நல்வழிப் படுத்தவே நாம் எதிர்கால சந்ததிக்கு செய்யும் நன்றிக் கடனாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு



– க. பேமசாலினி (11^K)

1. இதனை Break bone disease/ Fever எனவும் அழைப்பர். ஏனெனில் இந் நோயால் என்பிலும், தசையிலும் அதிக வலி ஏற்படும்.
2. இது நுளம்பால் ஏற்படும் வைரஸ் நோயாகும்
3. நோய்த் தொற்றுள்ள நுளம்பு மனிதனைக் குற்றி 3 தொடக்கம் 14 நாட்களும் நோயறிகுறி தென்படும்

   கடுமையான காய்ச்சல்

   வாந்தி பேசி

   தலைவலி

   தோலில் அரிப்புகள் என்பன ஏற்படும்.
4. சிலவேளை உயிர் ஆபத்து நிலையான ஹுநபெரந ஈநஅழசசாயபஉை கநளநச ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் உடலிலிருந்து குருதியும், குருதி முதலும் வெளியேறும் அதே வேளை குருதியமுக்கும், குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கையும், குறைவடையும். இவை யாவும் ஒருமித்து Dengue Shock Syndrome எனப்படுகிறது.
5. இந் நோயைப் பரப்பும் நுளம்புகள் பெண் Aedes aegypti, பெண் Aedas albopictus போன்றவையாகும்.
6. டெங்கு நோயைக் கண்டுபிடிக்க டெங்கு ஏசைரஎ இன் (Human blood இல்) பாரம் பரியப் பொருளான RNA இருப்பதும், டெங்கு Virusஐ எதிர்க்கும் antibodies இருப்பதும் பரிசோதனை மூலம் கண்டறியப்படும்.
7. நோய்த்தாக்கம் உள்ளவர்க்கு திரவத் தன்மையாக உணவுகள் அதிகம் வழங்கப்பட வேண்டும்.
8. இவ் உணவுகளை வாயுடாகவோ, நாளங்களூடாகவோ வழங்க முடியும்.
9. டெங்கு நோய்த் தொற்றை பின்வரும் 03 அவத்தைகளால் பிரிக்கலாம்.

   ஆரம்ப காய்ச்சல் நிலை (Febrile phase)

   ஆபத்தான நிலை (Critical Phase)

   தேறிவரும் அவத்தை (Recovery Phase)
10. டெங்கு நோய் தாக்கத்தால் இதயம், ஈரல் செயலிழக்கும்.
11. இந்நோய் பெரும்பாலும் போசாக்கற்ற பிள்ளைகள், சிறு பிள்ளைகள், பெண்கள், BMI அதிகமுள்ளவர்களுக்கு விரைவாக ஏற்படும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

12. இந்நோய் ஏற்பட்டால் நோயாளி ஓய்வாக இருக்காது சுறுசுறுப்பாக செயற்பாட்டால் உடல் களைப்பாக போக வைரஸ் விரைவாக பெருகி நோய்த்தாக்கம் தீவிரமாகும்.
13. நோய் உள்ளவரின் உள்ளங்கையும், காலும் சிவந்திருக்கும், முரசு, வாயூடாக குருதி வெளியேறும், சிவப்பு புள்ளிகள் தோன்றும், கறுப்பு மலம் வெளியேறும்.

**நோய்க்கட்டுப்பாடுகள்**

- நுளம்பு கடிப்பதை தவிர்க்க வேண்டும்.
- நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க வேண்டும்.
- நீர் தேங்கியுள்ள இடங்களுக்கு பூச்சி நாசினிகளை விசிற வேண்டும்.
- நுளம்புக் குடம்பிகளை உணவாக உட்கொள்ளும் மீன்களை வளர்க்க வேண்டும்.
- திறந்த நீர் நிலைகளை நுளம்பு வலையால் மூட வேண்டும்.
- டெங்கு நோய் உள்ளவருக்கு காய்ச்சலின் போது பப்பாசி இலைச் சாறை வழங்கல். இது குருதிச் சிறுதட்டுக்களை அதிகரிக்கும்.

# MANAGE YOUR TIME TO REACH GOALS



Good time - management skills help you to prioritize tasks so you are able to complete work and assignments on time, here are some tips to effectively manage your time and improve you study.

I. Create a daily, weekly and monthly schedule.
II. Avoid distractions while you're studying.
III. Set goals for every study session.
IV. Start working on projects or tasks early.
V. Make a project plan.
VI. Work on one task at a time.
VII. Start early in the day

- Mr. S. Merukaasan


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வயதும் வாழ்வும் பொன்னானது

– க. கபிராஜ் (11D)

பிறந்து வாழும் உயிரினங்கள் ஒவ் வொ ன்றிற்கும் வயது உள்ளது. பிறந்ததி லிருந்து நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாட்கள், மாதங்கள், வருடங்களாகி வயதைக் கூட்டிக் கொண்டு போகின்றது. இதனையே வள்ளுவர்,

"நாளது ஒன்று போல் காட்டி உயிர் ஈரும்
வாள் அது உணர்வார்ப் பெறின்"

இந்த வயது என்பது ஒரு கால அளவு போல் காட்டி உயிரை உடம்பிலலிருந்து பிரித்து அறுப்பது. நம் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் பொன்னானது. நிமிடங்கள் ஒவ்வொன்றையும் அருமையாகப் பயன் படுத்துவோமானால் நாம் இறந்தாலும் வாழ்ந்து கொண்டே இருப்போம். முப்ப தொன்பது வயது வரை வாழ்ந்த விவேகா னந்தர் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டி ருக்கிறார். வயது என்பது எமது செயல்களைப் பாதிப்பதில்லை. அறுபது வயதிற்குப் பின் தன் இல்லறத்தை விட்டு வெளியேறிய சுவாமி பிரபு பாதா அறுநூறுக்கு மேற்பட்ட புத்தகங் களை எழுதியது மட்டுமன்றி உலகம் முழு வதும் ஹரே கிருஷ்ணா இயக்கத்தை உருவாக்கி இந்து மதத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்தினார்.

திருஞானசம்பந்தர் மூன்று வயதில் பதிகங்களைப் பாடினார். திருநாவுக்கரசர் வயது சென்ற காலத்தில் பதிகங்கள் பாடினார். இன்று எம்மில் பலர் படித்தவர்கள் வசதியு ள்ளவர்கள் வயது போய்விட்டது என்று மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள். உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் திறமைகளுண்டு. திறமைகளுக்கு வயது ஒருபோதும் தடையில்லை. ஆகையால் திறமைகளை வெளிக் கொண்டு வருவதனால் நீங்களும் மற்றவர்களும் இன்பமாக வாழ முடியும். ஆயுளை அதிகரிப்பதற்கு மூச்சுப் பயிற்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால் 120 வயது வரை வாழ முடியும் என எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். அதிக ஆயுளை உடைய ஆமை, பாம்பு, யானை, தேரை போன்றன மூச்சினை நன்கு இழுத்து விடுகின்றன. நாம் எமது உடலைப் பற்றி சிந்திக்காமல் உலக இன்பங்களில் மனதைச் செலுத்துவதனால் சஞ்சலப்படுகின்றோம். நம் ஆசைகளை துறந்து ஆண்டவனைச் சந்தித்தால் ஆயுளை அதிகரிப்பதனையும் சுகமான வாழ்வினையும், கடவுளையும் காணலாம்.

# தமிழரும் அறிவியலும்

1. குளங்கள், எரிகளில் படிக்கட்டுகள் அமைத்தல்
   - உடல் சூடு படிப்படியாக குறைவதற்கு.
   - தலையில் நேரடியாக நீரை, ஊற்றுவதால் தலையில் சூடு தேங்கும்.
2. அரைஞான் கயிறு கட்டுதல்
   - குடல் இழப்பு நோயை தடுத்தல்
3. உண்ணாவிரதம்
   - நோய் எதிர்ப்பாற்றல் ஏற்படல்
   - உடல் நச்சுத்தன்மை அழிவடைதல்
   - நோய்க்கிருமிகள் அழிவடைதல்
4. அதிகாலையில் துயில் எழுதல்
   - அதிகாலையில் சுத்தமான வளியை சுவாசித்தல்
5. கோலம் போடுதல்
   - கண்ணுக்கு தெரியாத சிறிய உயிரினம் கூட உணவாக உண்ணல்.
6. மரம் வளர்த்தல்
   - வேம்பு - காற்றை தூய்மைப்படுத்தல்
   - வில்வை - ஐம்புலன்களை சமநிலைப்படுத்தல்
   - வாழை - கண்களுக்கு நன்மை
7. அமர்ந்திருந்து உணவு உண்ணுதல்
   - கால்களுக்கான இரத்த ஓட்டத்தை குறைப்பதனால் பூரண இரத்த ஓட்டமும் சமிபாட்டுத் தொகுதியில் இடம்பெற்று பூரண சமிபாடு நிகழ்தல்.

**- Miss. P. Shapthavi - 11U**

*(2022 O/L Batch)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினங்கள்

- Miss. P. Sageeska - 11[P]

| | | | |
|---|---|---|---|
| 1. ஜனவரி | 12 | - | தேசிய இளைஞர்கள் தினம் |
| 2. பெப்ரவரி | 04 | - | இலங்கை சுதந்திரமடைந்த தினம் |
| | 28 | - | தேசிய அறிவியல் தினம் |
| 3. மார்ச் | 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| | 22 | - | உலக நீர் தினம் |
| 4. ஏப்ரல் | 04 | - | உலக சுகாதார தினம் |
| | 23 | - | உலக புத்தக தினம்/ வாசிப்பு தினம் |
| 5. மே | 01 | - | தொழிலாளர் தினம் |
| | 12 | - | உலக செவிலியர் தினம் |
| | 14 | - | சர்வதேச அன்னையர் தினம் |
| | 15 | - | சர்வதேச குடும்ப தினம் |
| 6. ஜூன் | 01 | - | சர்வதேச குழந்தைகள் தினம் |
| | 12 | - | உலக குழந்தை தொழிலாளர் எதிரப்பு தினம் |
| | 18 | - | சர்வதேச தந்தையர் தினம் |
| | 23 | - | சர்வதேச ஒலிம்பிக் திகம் |
| | 26 | - | உலக போதைப் பொருள் ஒழிப்புத் தினம் |
| | 27 | - | உலக நீரிழிவு நோய் தினம் |
| 7. ஜூலை | 07 | - | உலக கூட்டுறவாளர் தினம் |
| | 11 | - | உலக சனத்தொகை தினம், உலக குடிசன தினம் |
| 8. ஆகஸ்ட் | 01 | - | காகித தினம் |
| | 12 | - | சர்வதேச யானைகள் தினம் |
| 9. செப்டெம்பர் | 11 | - | சர்வதேச முதலுதவி தினம் |
| | 16 | - | உலக ஓசோன் தினம் |
| | 27 | - | உலக சுற்றுலா தினம் |
| 10. ஒக்டோபர் | 01 | - | சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச முதியோர் தினம் |
| | 04 | - | உலக விலங்கு தினம் |
| | 05 | - | சர்வதேச ஆசிரியர் தினம் |
| | 06 | - | (இலங்கை) ஆசிரியர் தினம் |
| | 15 | - | சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் |
| | 16 | - | உலக உணவு தினம் |
| | 31 | - | உலக சிக்கன தினம் |
| 11. டிசெம்பர் | 04 | - | சர்வதேச எரிசக்தி சேமிப்பு தினம் |
| | 09 | - | உலக ஊழல் எதிர்ப்பு தினம் |
| | 10 | - | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| | 11 | - | சர்வதேச மலைகள் ஒலிபரப்பு தினம் |
| | 13 | - | சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு விருந்து...

1. இரவல் கிடைக்காதது; ஆனால் இரவில் கிடைப்பது அது என்ன?
2. நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?
3. கையும் இல்லை, காலும் இல்லை, ஓடிக்கொண்டே இருப்பேன் நான் யார்?
4. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியில்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கியிருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்?
5. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அவன் யார்?
6. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு ரத்தம் கூட வராது அது என்ன?
7. கூரை வீட்டை பிரித்தால் ஓட்டு வீடு; ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை; அதன் நடுவே ஒரு குளம் அது என்ன?
8. கொதிக்கும் கிணற்றில் குதித்து குண்டாகி வருவான் அவன் யார்?
9. வாள் இல்லாமல் கேடயம் மட்டும் எப்போதும் வைத்திருக்கும் போருக்கு போகும் வீரன் அவன் யார்?
10. வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?
11. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
12. முதுகிலே சுமை தூக்கி முணுமுணுக்காமல் அசைந்து வரும் அது என்ன?
13. குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல் அது என்ன?
14. ழவ ழழழழழழழழ இது எதைக் குறிக்கிறது?
15. 7 ஒன்றுகளை கொண்டு 25ஐ பெறுவது எப்படி?
16. எட்டு 8 களை கொண்டு 1000ஐ பெறுவது எப்படி?
17. 5 அடுக்கு 4 இருக்கு அது என்ன?
18. அமைதியான பையன் ஆனால் அடிக்காமலேயே அழுவான் அவன் யார்?
19. இலையுண்டு கிளையில்லை; பூ உண்டு மணமில்லை; காய் உண்டு விதையில்லை; பட்டை உண்டு எட்டை இல்லை; கன்று உண்டு பசு இல்லை அது என்ன?
20. தொடாமல் அழுவான்; தொட்டால் பேசுவான் அவன் யார்?
21. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் அவன் யார்?
22. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான், ஒருவன் நடப்பான் அவன் யார்?
23. இவனுக்கு ஒரு பேப்பர் தான் ஆனால் மதிப்பாக இருப்பான் அவன் யார்?
24. உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன?
25. 3 பெண்களுக்கு ஒரே முகம். முதல் பெண் ஆற்றிலே, நடுப்பெண் காட்டிலே, கடைசிப் பெண் வீட்டிலே அவர்கள் யார்?

**விடைகள்:**

*1. தூக்கம் 2. மின்விசிறி 3. தலைமுடி 4. நேரம் 5. சிலந்தி 6. முட்டை*
*7. ஊசல் 8. தேங்காய் 9. பூறி 10. வழுக்கை 11. தேள் 12. நத்தை 13. மாதுளை*
*14. Potatoes (Pot + 8 o' s) 15. 11 + 11+ 1+ 1+ 1 = 25 16. 888 + 88 + 8 + 8 + 8 = 1000*
*17. விரல்கள் 18. ஐஸ்கட்டி 19. வாழை 20. தொலைபேசி 21. அஞ்சல்பெட்டி*
*22. கடிகாரம் 23. பணம் 24. பாய் 25. முதலை, உடும்பு, பல்லி*

**– வசந்தராசா நதுஷா (11[U])** *2022 O/L Batch*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏமது நாட்டில் பொருளாதார பிரச்சினை காரணமாக பணம் இருந்தும் பொருட்களை வாங்க முடியவில்லை. ஏன் எனில் பொருட்களை அதிக விலைக்கு விற்கின்றார்கள். அவற்றோடு பெற்றோல், டீசல் பிரச்சினையும் அதிகமாக நாட்டில் காணப்படுகின்றது.

இந்தப் பொருளாதார பிரச்சினை காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். டீசல், பெற்றோல் என்பவற்றுக்கு மக்கள் வரிசையில் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். மண்ணெண்ணெய்க்கு கூட மக்கள் வரிசையில் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் வீட்டில் சமைக்காமல் பிள்ளைகள் சாப்பாடு இல்லாமல் பட்டினியாக இருக்கிறார்கள்.

டீசல், பெற்றோல் தட்டுப்பாட்டால் பெற்றோர்கள் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருக்கிறார்கள். பெற்றோர்கள் வேலைக்கு செல்லாமல் இருப்பதால் வீட்டில் வருமாணம் இல்லாமல் போயிற்று. பெற்றோல் வந்தால் கூட பெற்றோலை வாங்குவதற்கு 3, 4 நாள் என்று வரிசையில் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நாளில் பெற்றோலை பெற்றாலும் 1 நாள் அல்லது 2 நாள் தான் வேலைக்கு செல்லுகின்றார்கள். பின்பு பெற்றோல் இல்லாமல் வீட்டில் இருக்கின்றார்கள். இதனால் பெரும் பிரச்சினை ஏற்படுகின்றது.

இந்த டீசல் பிரச்சினை காரணமாக போக்குவரத்து குறைந்து கொண்டு வருகின்றது. ஏனெனில் பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக வேலைக்கு செல்வோர், வியாபாரத்திற்கு செல்வோர் போக்குவரத்தை நம்பி இருக்கிறார்கள். ஆனாலும் இந்த

# எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மாணவர் கல்வியில் ஏற்படும் தாக்கங்கள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து சேவையால் வைத்திய சாலைக்கு கூட செல்ல முடியாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

பொருளாதார பிரச்சினையில் மிக முக்கியமானதாக மாணவர்களது கல்வி மிகவும் பாதிப்புற்றுள்ளது. மாணவர்களின் படிப்பு, அவர்களின் திறமை என்பவை மிகவும் குறைந்து வருகின்றது. பெற்றோல், டீசல் காரணமாக ஆசிரியரின் வருகை குறைந்து காணப்படுகின்றது. அதை போல் பிள்ளை களின் வரவும் பாடசாலையில் குறைந்து காணப்படுகின்றது.

1 கிழமையில் ஒரு 3 நாள் தான் பாடசாலை நடைபெறுகின்றது. அந்த 3 நாட்க ளில் பாடசாலை நடைபெற்றாலும் ஆசிரியர், மாணவர் வருகை மிகவும் குறைந்து காணப் படுகின்றது. ஏன் தெரியுமா? பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக இருக்கின்றது.

2022 பரீட்சை எழுதும் மாணவர் களுக்காக கணிப்பீட்டு முறையில் பரீட்சை நடத்தினாலும் அதில் குறைவான பிள்ளை கள்தான் காணப்படுகின்றார்கள். 1ம் தவணைப் பரீட்சை நடத்த இருப்பினும் மாணவர்கள் பரீட்சை தாள்கள் இல்லாமல் தவணைப் பரீட்சை தள்ளிப் போடப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களின் கல்விமுறை பாஸ் போன்றது. மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை வீட்டில் மேற்கொண்டாலும் மின் துண்டிப்பால் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனாலும் கல்வி நடவடிக்கை குறைந்து போகின்றது. இதனால் இந்த முறை பரீட்சை எழுதும் உயர்தர மாணவர்கள் கல்வி இன்றி மிகவும் சிரமப்படுகின்றார்கள்.


பொருளாதார பிரச்சினை காரணமாக பிள்ளைகளின் வாழ்க்கை நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. பொருளாதார பிரச்சி னையே யார் மாற்றுவர். இப்போது பொரு ளாதார நிலைமாறி எமது நாடு, கல்வி எமக்குத் தேவையான பொருட்கள் என்பவை எமக்கு எப்போது கிடைக்கும் யார் மாற்றித் தருவார்?

# பொன் மொழிகள்

1. முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும்முயலாமை வெல்லாது.
2. சிந்திப்பது முடிவெடுப்பதற்கே முடிவெடுத்த பின் சிந்தித்தலாகாது.
3. தோல்வியைக் கண்டு தூர விலகாதே உனது இலக்கை அடையும் வரை
4. கல் கல் உன்னை நீ கற்றுக் கொள்ளும் வரை.
5. பயிற்சியின் விளைவே பரீட்சையின் முடிவு.
6. உனது வாழ்வின் தடைகளை படிகளாக்கு உனக்கு வழி பிறப்பது நிச்சயம்.
7. உன் உயர்வு உனது கையில் முடிந்தவரை உழை. முயற்சி திருவினையாக்கும்.
8. பீழையைக் கண்டு அஞ்சாதே. பதியைக் கண்டு அஞ்சு.
9. கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது.
10. உன்னை நீ நம்பு வெற்றி உன்னைத் தேடி வரும்.

**- Miss. P. Sageeska - 11[P]**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மிகம் என்பது மனதில் எந்த சலனமும் சலசலப்பும் ஏற்படுத்தாத ஒன்றாகும். கோவிலின் வாசலுக்குப் படிக்கல் முக்கியம். நீ உன்னை ஆன்மிகத்தில் ஈடுபடுத்தி கொள்ளும் போது படிக்கல் போல் தான் இருக்க வேண்டுமே தவிர படிக்கும் கல்லாக இருக்க கூடாது.

நீ வெறும் கருவிதான். கருவியென்றால் ஆதாரம். நீ ஆன்மிகத்தில் ஒரு கருவியாக இருந்து செயல்பட வேண்டுமே தவிர சரியாகிவிடக் கூடாது. கருவிக்கு அர்த்தம் தெரியுமா உங்களுக்கு?

கருவியின் கடைசி எழுத்தை நீக்கினால் கரு. இடையில் உள்ள எழுத்தை நீக்கினால் கவி.

ஒரு கவி கவிதை எழுதத் தேவைப்படுவது மூலக்கரு. கவிக்கு எப்படி கரு முக்கியமோ அதே போல் நம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கும் நம் இறைவன்தான் நமக்கு மூலக்கரு என்ற எண்ணம் உங்களுக்கு வர வேண்டும். நம்மை கருவியாக வைத்து இறைவன்தான். கவி எழுதுகிறான் என்று அனைவரும் நினைக்க வேண்டும்.

ஆக நாம் ஒரு கருவியாக தான் இருக்க வேண்டுமே தவிர எரிந்து சாம்பலாகி விடுகிற கரியாக மாறக் கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு வர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடவுளைக் காண உண்மையான விருப்பம் எம் மனதிலும் ஆன்மிகத்திலும் உண்டாக வேண்டும்.**

பண ஆசை பிடித்து அலைபவர்கள் போல, உன் மனம் கடவுளின் மீது ஆசை கொண்டு அலைய வேண்டும்.

தண்ணீரில் மூழ்கி விட்டவன், மூச்சு விடுவதற்கு மிகவும் தவிப்பதைப் போல கடவுளைக் காண்பதற்கு முன்னால், ஒருவருடைய மனம் அதற்காக மிகவும் ஆசை கொள்ள வேண்டும்.

தண்ணீருக்குள் இருக்கும் போது மூச்சு விடுவதற்கு ஒருவனுக்கு இருப்பது போன்ற தவிப்பு, கடவுளைக் காண்பதற்கு இருக்குமானால் நிச்சயமாக அவன் கடவுளை காணலாம்.

## கடவுளை காண வேண்டும் என்ற நாட்டம்

மக்கள் பேறு கிடைக்கவில்லை என்று அழுபவர்களும் செல்வத்தை பெறவில்லை என்று மனம் புழுங்குபவர்களும் பலர் உண்டு. ஆனால் கடவுளை காண வேண்டும் என்று அழுபவர்கள் வெகு சிலரே. தேடுகிறவனுக்குத்தான் பொருள் கிடைக்கும். கடவுளுக்காக அழுபவன்தான் கடவுளை காண்பான்.

கடவுளை பற்றி எப்போதும் ஆவலுடன் சிந்திருப்பவனுக்குப் பசி, தாகம் முதலியவைகளில் மனம் செல்வதில்லை.

## கடவுள் ஏன் காணப்படுவது இல்லை?

சூரியன் பூமியை காட்டிலும், பல மடங்கு பெரியதாயினும் வெகுதூரத்துக்கப்பால் இருப்பதால் ஒரு சிறிய தட்டைப் போலக் காணப்படுகிறது. கடவுள் அளவற்ற ஆற்றலுடையவராயிருந்தும் நமக்கும் அவருக்கும் உள்ள தூரத்தினால் நாம் அவருடைய உண்மையான ஆற்றலை அறிய சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.

நாணலும், பாசியும் மூடிய குளத்தில் துள்ளியோடும் மீன்களை வெளியிலிருந்து காணமுடியாது. அது போல மனிதனுடைய இருதயத்தில் விளையாடும் கடவுளைக் காணவொட்டாதபடி மாயை மறைக்கின்றது.

போலீஸ் காவலர், தனது விளக்கின் வெளிச்சம் எவர் மீது படும்படி திரும்புகிறதோ, அவரை பார்க்க கூடும். ஆனால் அந்த விளக்கத்தை தன் மீக திருப்பாதிருக்கும் வரையில் அவரை ஒருவராலும் பார்க்க முடியாது. அதுபோல கடவுள் எல்லோரையும் பார்க்கிறார். ஆனால் அவரது அருள் இல்லாமல் ஒருவராலும் அவரைக் காண முடியாது.

## கடவுளை அனுபவிக்க ஒரே வழி!

எவனிடம் ஆன்மிக நாட்டமும், அருள் தாகமும் இருக்கின்றனவோ அவன் கடவுளை வெகு சீக்கிரத்தில் காண்பான்.

இந்தக் கலியுகத்தில் கடவுளுடைய அருளைப் பெறுவதற்கு மூன்று நாள் தீவிரமான பக்தி செலுத்தினால் போதுமானது.

சந்திரன் எல்லாக் குழந்தைகளுக்கும் சொந்த மாமாவாக விளங்குகிறான். அது போல கடவுளும் அனைவருக்கும் சொந்தமானவர். எவனொருவன் விரும்பி அழைக்கிறானோ அவன்கடவுளை அடைந்து ஆனந்தம் பெறுவான். இதுவே கடவுளை அடைவதற்கான ஒரே வழி.

**- S. Pirintha - 11[P]**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பல கற்போம்! நுண் அறிவு பெறுவோம்!



இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் கிரிக்கெட் போட்டிகளையும், திரைப்படங்களையும் பார்ப்பதற்காகப் பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிப்படைகின்றது. கற்க வேண்டிய நேரம் வீண்விரயமாகின்றது. இதன் பேறாக அவர்களது கல்வித்தரமே குன்றுகிறது. மாணவர்கள் நமது பொழுதைப் போக்கத் தொலைக்காட்சியே நம்பியுள்ளனர். அதேவேளை நல்ல நண்பர்கள் எனக் கருதத்தரும் நூல்களை வாசிக்கத் தவறிவிடுகின்றனர். மிக அருமையாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

“நூல்கள் பலகல்” என்றார் ஒளவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். “கண்டது கற்க பண்டிதன் ஆவான்” என்பது நம் ஆன்றோர் வாக்கு “ரஸ்கின்” என்கிற ஆங்கில அறிஞர் புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது எனக் கூறுகிறார். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்களை பொதுவாகக் களவாடப்படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்து விட முடியாது.

வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும். வாசிப்பதன் மூலம் அறிவு விருத்தியடைகிறது. மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் கிரகித்துக் கொள்ளவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகிறது. வாழ்வு வளம் பெற அறிவு தேவை அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகும். நூல்களை வாசிக்கும் போது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேண்டும். அப்போது தான் நாம் விரும்பிய மன நிறைவைப் பெற முடியும். வாசித்தல் சிறந்த ஒரு பொழுதுபோக்கு. மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களையேயாகும். மாணவர்கள் இதனை மனதில் கொள்ளுதல் அவசியமாகும்.

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லாதவர்"

என்கிறார் வள்ளுவர். ஊனக் கண்ணிலும் ஞானக் கண்ணே (அறிவுக்கண்ணே) சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. கல்விப் பெருஞ் செல்வத்தை வழங்குபவன் நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும்.

நூல்கள் வாசிக்கும் பழக்கும் உடையவர்கள் தனிமை உணர்வை ஒருபோதும் பெறுவதில்லை. ஓய்வுகிடைக்கும் போதெல்லாம் நூல்களை அவர்கள் நாடிச் சென்றுவிட முடியும். வாழ்வில் சலிப்போ சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் விரும்பிய நூல்களைப் படிப்பதன் மூலம் அவற்றைப் போக்கிக் கொள்ள முடியும். என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பது அரிது. எமது நண்பர்கள் மனமாற்றமடைந்து நம்மை விட்டுப் பிரிந்து விடலாம். ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்து உரையாடக் காத்திருப்பவை. நம்மை அவை கோபித்துக் கொள்வதோ, வெறுப்பதோ இல்லை. நமக்கு இன்பம் தர எப்போதும் தயாராகக் காத்திருக்கின்றன. நமக்கு அறிவு புகட்டும் ஆசானாகப் புத்தகங்கள் இருக்கின்றனர். அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு முக்கிய கடமையாக இதனைக் கொள்ளுதல் வேண்டும். வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமைய நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிடவேண்டும். நாம் இளமைமுதல் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும் பண்பும் ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அது வழிகாட்டும். வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை நாம் அறிந்திட முடியும்.

நூல்களில் பலவகை உண்டு. வாழ்க்கை வரலாறு, தத்துவம், சமயம், அரசியல், அறிவியல் சார்ந்த நூல்கள் பலவுள்ளன. புனைக்கதை இலக்கியங்கள் பலவுள்ளன. நமது விருப்பத்துக்கு ஏற்றபடி நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட நாம் பழகுதல் வேண்டும். வெறும் பொழுது போக்குக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது வாழ்க்கைக்குப் பயன்தரும் நூல்களைக் கற்றிட முற்பட வேண்டும். அன்னப்பறவையானது நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுதல் போன்று மாணவர்கள் தேவையற்ற நூல்களை விலக்கி விட்டுத் தேவையான, பொருத்தமான பயன்தரும் நூல்களை மட்டுமே வாசித்தல் வேண்டும்.

"தொட்டனத்தூறும் மணக்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்றார் வள்ளுவர்.

நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றைப் படித்து அதன் வழி ஒழுகளும் பழகிக் கொள்ளல் வேண்டும். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக, மனிதத் தன்மையுடையோராக மாண்புடன் வாழ முடியும் என்பதை உள்ளத்திற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சு. கனிஸ்கா (11^U) *2022 O/L Batch*

# வெற்றிக்கான பொன்மொழிகள்

1) உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.
- சுவாமி விவேகானந்தர்

2) நாம் அனைவரும் ஒரே மாதிரி இருக்கலாம். ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புகள் உள்ளன.
- அப்துல் கலாம்

3) நேர்மறை எண்ணங்களே சாதனைக்கு வழிகாட்டும் - ஹெலன் கெல்லர்

4) நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை முழுப்படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை.
- மார்டின் லூதர் கிங்

5) கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.
- சுவாமி விவேகானந்தர்

6) அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையால் அல்ல. விடாமுயற்சியால் தான்.
- ஜேம்ஸ் ஆலன்

7) உங்களால் முடியும் என்று நம்புங்கள், அதுவே உங்களுக்கான பாதி வெற்றி.
- தியோடோர் ரூஸ்வெல்ட்

8) அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால் சிறிய குட்டையைக் கூட கடக்க முடியாது.
- சாணக்கியன்

9) சோர்ந்து விடாதீர்கள் வெற்றிக் களத்திற்கு இன்னும் சில மைல்களே உள்ளன. முன்னேறிச் செல்லுங்கள்.
- ரூதர்ஃபோர்டு

10) நம்பிக்கை என்பது மரத்தின் நிழல் போன்றது. எதை நினைக்கின்றோமோ அதையே பிரதிபலிக்கும்.
- ஆபிரகாம் லிங்கன்

# What does EDUCATION Mean?

E : Energy
D : Discipline
U : Unity
C : Confidence
A : Aim
T : Talent
I : Interest
O : Opportunity
N : Nationality

**- Vasantharasa Nathusha - 11^U**
*2022 O/L Batch*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

01. உங்களுக்கு சொந்தமான ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள். அது என்ன?
பெயர்

02. மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல. அது என்ன?
விழுது

03. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க, திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை. அவன் யார்?
மூச்சு

04. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்?
பூரி

05. சிறு தூசி விழுத்ததும் குளமே கலங்கியது அது என்ன?
கண்

05. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அவள் யார்?
முட்டை

07. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
இமை

08. வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது. அது என்ன?
நாய்

09. வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளதை எறிந்தான். அது என்ன?
சோளம்

10. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கறுப்பு அது என்ன?
அடுப்புக்கரி

**– கி. ரேவந்தியா (11W)**

## பொன்மொழிகள்

1) சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப் படுகின்றன.
- அப்துல்கலாம்

2) படித்தல்என்பது ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான அடிப்படை கருவியாகும்.
- ஜோசப் அடிசன்

3) பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே, உண்மையைச் சொல்லி மாட்டி கொள், ஏனென்றால் பொய் வாழ விடாது. உண்மை சாக விடாது.
- விவேகானந்தர்

4) அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால், சிறிய குட்டையைக்கூட கடக்க முடியாது.
- சாணக்கியன்

5) கடந்த காலத்தை நினைத்து வாழ வேண்டாம், எதிர்காலத்தை நினைத்து கனவும் காண வேண்டாம், இந்த தருணத்தை மனதில் கவனித்திருங்கள்.
- கௌதம புத்தர்

6) ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.
- ஜார்ஜ் ஹெர்பெர்ட்

7) செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்.
- பெர்னாட்ஷா

8) தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை ஒரு சிற்பமாக்கும் என்று கல்லுக்குத் தெரியாது.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

**– கி. ரேவந்தியா (11W)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

கல்வி என்பது அகல் விளக்கு - அது
கற்றோர் விரும்பும் ஒரு விளக்கு
இருளை அகற்றும் ஒரு விளக்கு - அது
இறைவன் அளித்திடும் அருள் விளக்கு

உலகம் போற்றிடும் நல் விளக்கு - அது
உயர்வை அளித்திடும் பெரு விளக்கு
அறிவொளி தந்திடும் அகல் விளக்கு - அது
அனைத்தையும் காட்டிடும் அருள் விளக்கு

அறிவாம் விளக்கை ஏற்றுடுமாம் - அதன்
அன்பால் உலகை இணைத்திடுமாம்
கல்வி விளக்கை ஏற்றிடுமாம் - அதன்
காலம் தோறும் காத்திடுமாம்.

**- M. Thinustika - 11U**



# Motivation Quotes!

**- Vasantharasa Nathusha - 11U**
*2022 O/L Batch*

"Out of the Mountain of despair, a stone of hope."

We will success in our life not immediately but definitely

NOTHING IS IMPOSSIBLE THE WORD IT SELF SAYS "I'M POSSIBLE

When you have a dream, you've got to grab it and never let go.

Education is the most powerful weapon which you can use to change the world



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவர்களின் கடமைகள்

காலையில் சீக்கிரம் எழுந்திடுவோம்
எழுந்து சிறிது படித்திடுவோம்
பின்னர் பல்லை துலக்கிடுவோம்
குளித்து சீருடை அணிந்திடுவோம்

உரிய நேரத்துடன் உண்டு
நாமும் பள்ளி சென்றிடுவோம்
சுத்தம் சுகம் தருவதனால்
பாடசாலை சுத்தம் பேணிடுவோம்.

உரிய வேலை முடிந்தவுடன்
பாடங்களை கவனமாக கற்றிடுவோம்
தரும் இடைவேளை நேரத்தில்
கொஞ்சம் நாமும் விளையாடிடுவோம்.


பின்னர் வீடு சென்றிடுவோம்
மதிய உணவு உண்டிடுவோம்
மீண்டும் படித்ததை மீட்டிடுவோம்
பரீட்சையில் நூறு புள்ளி வாங்கிடுவோம்.



- Vino - $11^{D}$

## அப்துல்கலாமின் பொன்மொழிகளில் சில...

1. வாய்ப்புகாக காத்திருக்காதே... உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்...
2. கஷ்டம் வரும் போது கண்ணே மூடாதே அது உன்னை கொன்று விடும்
கண்ணை திறந்து பார் நீ அதை வென்று விடலாம்...!
3. உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து
விடாதே.. ஏனென்றால்கை இல்லாதவனுக்கு கூட
எதிர்காலம் உண்டு.
4. கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை
கனவு மட்டுமே காண்பவர்கள் தான் தோற்கிறார்கள்
5. இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும்
வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம்
ஒதுக்கப்பட்டுள்ளது.... ஆனால் அந்தப்
பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது
உங்கள் கைகளில் தான் உள்ளது!



"Education is the most powerful weapon
in the world"

**– வசந்தராசா நதுஷா ($11^{U}$)** *2022 O/L Batch*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

- முடங்கி கிடந்தால் சிலந்தியும் உன்னைக் சிறைப்பிடிக்கும் எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழி கொடுக்கும்.

  - கவிதாசன்

- கனவு என்பது நாம் தூக்கத்தில் காண்பவை அல்ல. நம்மை ஒருபோதும் தூங்க விடாமல் பார்த்துக்கொள்பவைதான். நம் கனவாக இருக்க வேண்டும்.

  - அப்துல்கலாம்

- முயற்சி என்பது விதை போல விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையென்றால் மண்ணுக்கு உரம்.

  - நம்மாழ்வார்.

- வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதை விட நீ தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார் நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்.

  - அப்துல்கலாம்

- கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல தன் குற்றம் குறையை எவன் உணராமல் இருக்கின்றானோ அவனே சரியான குருடன்.

  - மகாத்மா காந்தி

- நம்பிக்கையை இழந்தவன் வெல்வது கடினம் நம்பிக்கையோடு இருப்பவன் வீழ்வது கடினம்.

  - மகாத்மா காந்தி

- உன்னை நீயே வீண் என நினைத்தால் விடியலே கிடையாது. நீயே உலகிற்கு தூண் நினைத்தால் உன் வாழ்வில் இருளே கிடையாது.

  - விவேகானந்தர்

- நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை நீ எண்ணுவது விண்மீனாக உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்து சேரும் நீ நீயாகவே இரு.

  - அப்துல் கலாம்

- எது நடந்தாலும் அதை ஏற்றுக்கொள். இன்பம், துன்பம் எது வந்தாலும் மன அமைதியை மட்டும் இழந்து விடாதே.

  - விவேகானந்தர்

- உங்களை உலகம் தூற்றினாலும் கொண்ட இலட்சியத்திலிருந்து விலகாமல் உறுதியுடன் செயற்படுங்கள். நிச்சயம் உங்களால் சாதிக்க முடியும்.

  - விவேகானந்தர்

சக்தி இல்லம்.

**- P. Nilaksika - 11D**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாயின் தலைமகள் அறிஞர் அண்ணா

- S. Pirintha

தமிழ் தாயின் தலைமகன், பெரியாரின் போர்படைத் தளபதி காஞ்சிபுரம் தந்த தனிப் பெரும் தலைவன், சாமானிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் என்றெல்லாம் புகழுக்கு உரியவர் பேரறிஞர் அண்ணா ஆவார்.

சிறந்த தமிழ் சொற்பொழிவாளர், மேடைப் பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் அரசியல் வாதி என பல முகம் கொண்டவர். ஜவஹர்லால் நேரு ஒருமுறை தமிழகம் வந்திருந்தபோது பாடசாலை ஒன்றில் ஆங்கிலத்தில் உரையாற்ற மொழி பெயர்ப்பாளர் அதைத் தமிழ் மொழி பெயர்த்தார். ஒரு கட்டத்தில் நேரு அவர்கள் "வேறு யாராவது மொழி பெயர்க்கிறீர்களா? எனக் கேட்டார். அப்போது அங்கிருந்த பாடசாலை மாணவர்களில் ஒருவன் எழுந்து சென்று அவருடைய பேச்சை மொழி பெயர்த்தான். அம் மாணவன் தான் பிற்காலத்தில் அறிஞர் அண்ணா. 1909 செப்டெம்பர் 16ம் திகதி அண்ணா பிறந்தார். அவர் சென்றை பச்சையப்பன் உயர் நிலை பள்ளியிலும் பின்னர் பச்சையப்பன் கல்லூரியிலும் கல்வி கற்றார். 1939 தனது 21வயது ராணியை மணமுடித்தார். 1934இல் B.A பட்டமும் பிறது M.A (பொருளாதாரம் மற்றும் அரசியல்) முதுகலை பட்டமும் பெற்றார். திராவிட முன்னேற்றக் கழகம் சொந்த காட்சியை 1949 உருவாக்கினார்.



## பொன் மொழிகள்

- Vino - 11D

1) அனுபவம் ஓர் உயர்ந்த நகை அது அரியதாகத்தான் இருக்கும். எனெனில் மிகவும் கூடுதலான விலைகொடுத்தே வாங்கப்பட்டிருக்கிறது.

-ஷேக்ஸ்பியர்

2) அழகு என்பது முகத்தைப் பார்த்து தீர்மானிப்பதல்ல. உண்மையான மனதைப் பார்த்து தீர்மானிப்பதே உண்மையான அழகு. இதைப் புரிந்து கொள்ளாதவன் மனிதனே இல்லை.

- அன்னை தெரேசா

3) உன் வாழ்க்கையின் எந்தவொரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன் செல்கிறாயோ அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

- சுவாமி விவேகானந்தர்

4) மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்குகிறான் என்றால், அவன் வாழ்க்கையின் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம்.

- டார்வின்

5) அழகைப் பற்றிக் கனவு காணாதீர்கள். அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப் பற்றிக் கனவு காணுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

- அப்துல்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

- S. Pirintha

1) விரிக்காத வரை சிறகுகள் கூட பாரம் தான் விரித்து பறந்தால் வானம் கூட தொடும் தூரம் தான்.

- அப்துல்கலாம்

2) புன்னகையே அன்பின் சின்னம். அதுவே நாம் பிறருக்கு கொடுக்கும் அழகிய பரிசு.

- அன்னை தெரேசா

3) பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக உன்னிடமே திரும்பி வரும்.

- விவேகானந்தர்

4) எதிர்பார்ப்புகள் இல்லை என்றால் வாழ்க்கையில் ஏமாற்றம் இல்லை.

- சோக்ரட்டீஸ்

5) நீங்கள் செய்யும் தர்மம் ஒரு போதும் உங்கள் செல்வத்தை குறைக்காது.

- நபிகள் நாயகம்

6) எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.

- அப்துல் கலாம்

7) உன் வாழ்க்கையின் எந்த ஒருநாளில் உன் முன்னால் எந்த பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன் செல்கின்றாயோ, அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.


- விவேகானந்தர்

8) அனுபவர் ஓர் உயர்ந்த நகை. அது அரியதாகத்தான் இருக்கும். ஏனெனில் மிகவும் கூடுதலான விலை கொடுத்தோ வாங்கப்பட்டிருக்கிறது.

- ஷேக்ஸ்பியர்

## ஆங்கிலப் பதங்களுக்கான தமிழ்ப் பதங்களைப் பூர்த்தி செய்க

1. Feather (3)
3. Forceps (4)
4. Sparrow (3)
6. End (3)
7. Hesitation (5)
9. Excess (4)




1. Here (3)
2. Care (4)
5. Lamp (4)
6. Peace (4)
7. Wrong (3)
8. We (2)

Answers:

1. இங்கு
2. அக்கறை
5. விளக்கு
6. நிம்மதி
7. தவறு
8. நாம்

Answers:

1. இறகு
2. இடுக்கி
4. குருவி
6. நிறைவு
7. தயக்கம்
9. அதிகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Complete the verb form of the past tense for the following verbs in the grid

↓

1. save (5)
3. wear (4)
4. have (3)
10. see (3)
12. dig (3)
13. begin (5)
14. get (3)
15. fall (4)
16. lose (4)




→

1. send (4)
2. win (3)
4. hang (4)
6. give (4)
7. run (3)
8. read (4)
9. do (3)
10. draw (4)
11. cut (3)
13. buy (6)
15. fly (4)
17. keep (4)
18. take (4)
19. sing (4)
20. gring (6)
21. tell (6)

Answers:

→

1. sent
2. won
4. hung
5. gave
7. ran
8. read
9. did
10. drew
11. cut
13. bought
15. flew
17. kept
18. took
19. sang
20. ground
21. taught

↓

1. saved
3. wore
4. had
10. saw
12. dug
13. began
14. got
15. fell
16. lost

**Vasantharasa Nathusa**
Grade- 11U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
# தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.

## தரம் - 11K

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | வ. கிருதஞ்சன் |
| 02 | ச. அனோஷன் |
| 03 | ர. சோமிதன் |
| 04 | ச. ஷஜை |
| 05 | ம. கினுஜன் |
| 06 | ம. பர்வதன் |
| 07 | லி. மேனுஜன் |
| 08 | ச. ஐதுர்சனன் |
| 09 | சி. பியஷாந் |
| 10 | ர. ரக்ஷிகன் |
| 11 | க. டிலுஜன் |
| 12 | தி. போல். ஜேம்ஸ் சுபான் |
| 13 | ந. அபிஷாந் |
| 14 | அ. ரமேந்திரா |
| 15 | ந. சங்கீத் |
| 16 | கு. திவேசன் |
| 17 | கு. அனுஜன் |
| 18 | யு. ரிக்ஷனன் |
| 19 | நா. தனுசிக்கா |
| 20 | சு. ஜேன் அபிகாயில் |
| 21 | த. தஷானிக்கா |
| 22 | ந. தரணிகா |
| 23 | சே. கர்ஷாயினி |
| 24 | யு. டினேஸ்கா |
| 25 | த. கிருஷாலினி |
| 26 | ரா. டினா |
| 27 | கி. கிருஷ்ரிகா |
| 28 | சு. திலோத்திகா |
| 29 | மு. சாம்பவி |
| 30 | ம. ஹேஷாகினி |
| 31 | வபெசிலிக்கா ஏஞ்சலின் |
| 32 | இ. பூர்ஜிதா |
| 33 | சி. ஏஞ்சலா ஜெயசாதனா |
| 34 | உ. லுஜித்தா |
| 35 | த. ஜனுசிகா |
| 36 | மோ. ரூபா |

## தரம் - 11W

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | ர. கதுஜன் |
| 02 | ர. கிதுர்ஷன் |
| 03 | சி. தனுஜன் |
| 04 | நா. டிகாசனன் |
| 05 | தே. சிபோஜன் |
| 06 | த. தனுஷ்ரிகன் |
| 07 | கோ. டிலோஜன் |
| 08 | சி. ஸஜாந்த் |
| 09 | ச. ரதீஸ் |
| 10 | ஜீ. ஷனுஜன் |
| 11 | ச. விதுர்சன் |
| 12 | த. வினேஸ் |
| 13 | ஜெ. ஜர்சன் |
| 14 | பி. அங்கிதன் |
| 15 | நே. தருணிகா |
| 16 | க. தேஷாஹினி |
| 17 | கே. மதுஷாணு |
| 18 | கோ. டிசாளினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 19 | வி. கலைநிலா |
| 20 | அ. டிலக்ஷிகா |
| 21 | க. பவுஷாலினி |
| 22 | இ. ஹோமிகா |
| 23 | கி. சதுர்ஷிகா |
| 24 | ச. அருவிகா |
| 25 | கு. ஹிஷாரகி |
| 26 | த. ஸேசாத்தகி |
| 27 | கி. கதுஸ்ரிகா |
| 28 | கி. ரேவந்தியா |
| 29 | ல. குபேரகா |
| 30 | வா. ஹர்சோத்கரி |
| 31 | உ. ஸாருகா |
| 32 | சு. ஷதுர்த்திகா |
| 33 | ப. சுபாங்கனி |

## தரம் - 11D

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | ச. ஷர்மிலன் |
| 02 | ஜி. கதுஷன் |
| 03 | ஜி. சஹிதராஜ் |
| 04 | அ. தக்ஷன் |
| 05 | தெ. அபிட்சன் |
| 06 | எஸ். மேருஹாசன் |
| 07 | எஸ். சஜ்ஜித் |
| 08 | ரி. விவதரன் |
| 09 | ஏ. யுகெஷ் |
| 10 | எஸ். தர்ஷன் |
| 11 | க. கேஹுஜன் |
| 12 | ஜி. அபிஜித் |
| 13 | எஸ். கேமலக்ஷன் |
| 14 | கே. கபிராஜ் |
| 15 | கே. சஜிதரன் |
| 16 | ரி. விருஷான் |
| 17 | வி. நரேந்திரப் பிரஷாத் |

| | |
|---|---|
| 18 | எஸ். டிலோனிகா |
| 19 | ரி. விஸ்னுஜா |
| 20 | கே. யிலுக்ஷனா |
| 21 | சி. ஹர்னிதா |
| 22 | என். டிவேஜிதா |
| 23 | ஜே. டினுஸ்கா |
| 24 | கே. கிருஷாயினி |
| 25 | ர. டிலுக்ஷனா |
| 26 | ரி. வேணுஜா |
| 27 | ரி. கம்ஷாலினி |
| 28 | கே. பேமஷாலினி |
| 29 | பி. ஜஸ்மிதா |
| 30 | பி. வினோ |
| 31 | எஸ். ருக்சனா |
| 32 | கே. டிலுசிகா |
| 33 | ஆர். மதுஜிதா |
| 34 | பி. யுரெனிக்கா |

## தரம் - 11Y

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | எம். திவேக்ஷன் |
| 02 | கே. தேனுபன் |
| 03 | எஸ். சதுர்சன் |
| 04 | எஸ். டிலுக்ஸ்மன் |
| 05 | ரி. சந்தோஷ் |
| 06 | ஆர். கனிஸ்கன் |
| 07 | என். வினுக்ஷன் |
| 08 | எஸ். சாருக்ஷிகன் |
| 09 | எஸ். மிதுஷாந் |
| 10 | எம். தருண்யன் |
| 11 | பி. டிலோஜன் |
| 12 | கே. திருட்சகன் |
| 13 | ஆர். அபிலாஷ் |
| 14 | ரி. கனிஷ்டன் |
| 15 | பி. வருண் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 16 | ஆர். கிஷாந்து |
| 17 | எஸ். வஜநிதன் |
| 18 | கே. சங்கீர்த்தனன் |
| 19 | கே. கேதுரங்கன் |
| 20 | கே. டஸ்வினி |
| 21 | எஸ். லுஜிதா |
| 22 | என். ருபேஷனா |
| 23 | கே. கிருந்தனா |
| 24 | ரி. கோபிகா |
| 25 | ஆர். வேணுஜா |
| 26 | ஜி. நிகாஷினி |
| 27 | கே. ருக்ஷனா |
| 28 | எம். தினுஸ்ரிகா |
| 29 | பி. நிலக்ஷிகா |
| 30 | கே. பினோலினா |
| 31 | என். ஜஸ்மி |
| 32 | என். கேமிஜா |
| 33 | கே. சினேகா |
| 34 | ஜி. போஷலாஷினி |

## தரம் - 11P

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | கே. சஜ்ஜைகாந்த் |
| 02 | கே. கிருசுகன் |
| 03 | ஜே. ஜதுஷன் |
| 04 | எஸ். தனுஸ்ஷாந் |
| 05 | பி. பிரணவன் |
| 06 | இ. மதுர்ஷன் |
| 07 | ஆர். சஞ்ஜீவன் |
| 08 | எல். சுபாணுஜன் |
| 09 | எம். கிருத்திகன் |
| 10 | ரி. தரணி |
| 11 | எம். ஜர்ணிதன் |
| 12 | கே. ஜக்ஸிகன் |
| 13 | ஜி. யஸ்ஸகன் |

| | |
|---|---|
| 14 | எஸ். டயானிகா |
| 15 | எஸ். ஹம்சிகா |
| 16 | வி. பிலோமிகா |
| 17 | கே. கவித்திரா |
| 18 | வி. ஜாணுகா |
| 19 | பி. சஜீஸ்கா |
| 20 | எஸ். சதுஸியா |
| 21 | சே. கிஷாஜினி |
| 22 | பு. சப்தவி |
| 23 | சு. டிலக்ஷி |
| 24 | மோ. டனுக்சிகா |
| 25 | ம. டிலக்ஷி |
| 26 | வ. நதுஷா |
| 27 | வெ. பிறேமாலினா |
| 28 | ஜெ. கிதுர்ஷிகா |
| 29 | யோ. சாதனா |
| 30 | க. கிருஷாலினி |
| 31 | ஜே. அபிஷ்னா |
| 32 | எஸ். பிரிந்தா |

## தரம் - 11U

| தொ. இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | ர. கேணுஜன் |
| 02 | வி. தஷானன் |
| 03 | கு. நிருஜன் |
| 04 | ச. நிலுக்ஷன் |
| 05 | ஞா. மிதேஷ் |
| 06 | பா. ஹேமநாத் |
| 07 | த. சிவானுஜன் |
| 08 | து. ரிஷானந் |
| 09 | லி. கிதுக்ஷன் |
| 10 | ர. விபுஷாந் |
| 11 | மோ. வினோ |
| 12 | இ. டிதுஷன் |
| 13 | யோ. சதுர்ஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 14 | பா. விஜுஜன் |
| 15 | இ. ஹபிஷேக் |
| 16 | மே. நவாம்சன் |
| 17 | ம. கிஷ்னா |
| 18 | ஜெ. மதுஜன் |
| 19 | பா. பிரணித்தா |
| 20 | மே. கியூமிகா |
| 21 | சே. கிஷாஜினி |
| 22 | பு. சப்தவி |

| | |
|---|---|
| 23 | சு. டிலக்ஷி |
| 24 | மோ. டனுக்சிகா |
| 25 | ம. டிலக்ஷி |
| 26 | வ. நதுஷா |
| 27 | வெ. பிறேமாலினா |
| 28 | ஜெ. கிதுர்ஷிகா |
| 29 | யோ. சாதனா |
| 30 | க. கிருஷாலினி |
| 31 | க. கனிஸ்கா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- இ. ஹேமிகா -

*Grade - 11W*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**- கி. ரேவந்தியா -**

*Grade - 11W*

*2022 O/L Batch*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ரா. டினாஸ் -

*Grade - 11K*

*2022 O/L Batch*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து



- மகாகவி
சுப்பிரமணிய பாரதியார்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

எங்கள் தமிழ் மொழி! ...
எங்கள் தமிழ்மொழி! ...
என்றென்றும் வாழிய வே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இக்கன்னி நூலான தரம் - 11 மாணவர்களின்
"ஊற்றுப்பேழை" சஞ்சிகை வெளிக்கொணர்வதற்கு
உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்
தெரிவிப்பதோடு அனைத்து நல் உள்ளங்களுக்கும்
நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தரம் - 11 மாணவர்கள்**

**2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












வணசிங்க பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. 065-2227170
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org